

பொன்னி

மலர் : 2 இதழ் : 2

பொருளடக்கம்

ஆசிரியர் :
முருகு சுப்பிரமணியன்

மு. அண்ணாமலை
நாரா நாச்சியப்பன்
இராம. வே. சேதுராமன்
கண்ணதாசன்
டி. கே. சீனிவாசன்
திருக்குறள் முனிசாமி
நக்கீரன்
கீ. இராமலிங்கம்
பழ. சுப. மணியன்
கலைஞன்
கா. அப்பாத்துரை
தில்லை வில்லாளன்
சுப. நாராயணன்
தமிழரசி
தமிழ்வாணன்
இளமைப்பித்தன்
க. தங்கவேலன்
சாமி பழனியப்பன்
'ஊசி'
கே. டி. தேவர்
'அத்தான்'
நா. வேத்தரசன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்.

திருவள்ளுவர் ஆண்டு 1979 பங்குனித் திங்கள்
1948 மார்ச் :: விலை அணா எட்டு

செய்திப் பாட்டு

தென்னிலங்கை வளநாடே!

[விடுதலை பெற்ற இலங்கை நாட்டிற்குத்
திராவிடம் விடுக்கும் செய்தி இது]

தென்னிலங்கை வளநாடே நீயும் நானும்
சிறகொடிந்த பறவைகளாய் வீழ்ந்திருந்தோம்.
என்னவிதம் யானுரைப்பேன்! வேடன் வந்து
எழுவீர்கள் பறப்பீர்கள் என்றுரைத்தான்!
உன்னை நான் நோக்குகையில் நீயோ இந்த
உயர்வானை அளாவுதல்போல் பறக்கலானுய்!
என்னுடைய இறக்கையினை விரிக்கப் பார்த்தேன்;
இயலாமல் ஐயையோ கிடக்கின்றேனே!

படர் மலையப் பர்மாவைப் போல் பிரிந்தாய்!
பந்தத்தை அறுத்தெறிந்து தனித்து நின்ருய்!
வடநாட்டுக் கழுகொன்று அருகமர்ந்து
வலியதிருக் காலாலே எனையழுத்தி
"இடமுண்டு; என் நிழல் உனக்கே யுண்டு"
எனக்கூறி நிற்கிறதே என்ன செய்வேன்!
திடமில்லை, உணர்வில்லை, தேய்ந்த உள்ளம்
திருநாட்டைத் தீந்தமிழைக் காப்ப தென்னாள்?

இராவணனர் புகழ்தாங்கும் இலங்கை நாடே!
இணையற்ற அவ்வீரர் ஆட்சி கண்டு,
வராதே போ ஆரியமே என உதைத்து
வளன் செய்த திறன் கண்டும் வாழ்ந்தாய்; அந்தப்
புராதனத்தை உனக்கிந்நாள் புகலுகின்றேன்
புதுமையொடு செயலாற்றப் புகுதல் வேண்டும்!
திராவிடர்கள் உன் மக்கள் நம்முள் அந்தத்
தீராத நட்புரிமை இருக்கவேண்டும்!

- மு. அண்ணாமலை

தடை யுத்தரவு

கருஞ்சட்டைப் படை என்பது இல்லாத ஒரு அமைப்பு; அப்படியொன்றிருப்பதாக எண்ணிக்கொண்டு சட்ட விரோதமாக்கினார்கள் சென்னை அரசியலார். சோதனை நாடெங்கும் நிகழ்ந்தது. கருஞ்சட்டைப் படை ஸ்தாபனங்களில் நடத்த வேண்டிய சோதனையைத் திராவிடக் கழகங்களில் நடத்தினார்கள்; துருவித் துருவிப்பார்த்தார்கள். கருஞ்சட்டைகள் புத்தகங்கள், பத்திரிகைகள் அறிக்கைகள் கிடைத்தனவேயொழியக் கருஞ்சட்டைப் படை யமைப்பிற்குரிய எந்தவித அடையாளமும் எங்கேயும் காணமுடியவில்லை. பலாத்கார ஸ்தாபனங்களின் வரிசையிலே சேர்த்துப் பார்த்தும், சோதனையின் போது ஒரு பேனாக்கத்தியோ, ஒரு தடியோ கூட அகப்படாதது குறிப்பிடத்தக்கது. அரசினர் தாம்கொண்டிருந்த கருத்துத் தவறானதென்பதைச் சோதனை மூலமே உணர்ந்திருப்பரென்று நம்புகிறோம்.

திராவிட இனம் இழிவான நிலையில் இருக்கிறது என்பதனைக் காட்டவே கருஞ்சட்டை அணிய வேண்டுமென்று பெரியார் கட்டளையிட்டார். அதன்படி நாடெங்கும் ஆண்கள், பெண்கள், முதியோர், குழந்தைகள் அனைவரும் கருப்புடை அணிகின்றனர். இதைத்தவிரக் கருஞ்சட்டைப் படை என்பதாக ஒரு ஸ்தாபனம் தொடங்கப்படவுமில்லை; நடைமுறையிலுமில்லை. எனவேதான் தடை பற்றிப் பெரியார் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் 'இத்தடை யுத்தரவால் நமக்குள் எவ்விதமாறுதலும் ஏற்படவில்லை' என்று குறிப்பிட்டுள்ளதோடு. சென்னைக் கடற்கரையில் பேசிய போதும், 'இனிமேல் திராவிடர்களில் நூற்றுக்குப் பத்துப் பேராவது கருஞ்சட்டை அணியவேண்டும்' என்றும் கூறியுள்ளார். ஆகவே கருஞ்சட்டை அணிவதைச் சர்க்கார் தடைசெய்யவில்லை யென்பது அனைவரும் அறிந்து கொள்ளவேண்டியதொன்றாகும்.

வெளியார் தூண்டுதலே இத்தடை யுத்தரவுக்குக் காரணமென்று கூறப்படுகிறது. அமைச்சர்கள் சிலர் 'தொல்லை' பொறுக்காமல்தான் இக்கட்டளையை இடவேண்டியதாயிற்றாம்! எப்படியானாலும் சரி, திராவிடக் கழகத்தாரும், கருஞ்சட்டையினரும் அமைதியைக் குலைப்பவர்களல்ல; கலகமூட்டும் கயவர்களல்ல; காந்தியாரைக் கொன்ற கசடர்களல்ல என்பதனை அரசியலார் உணரவேண்டும். உணர்ந்தால் அமைச்சர்களும் திராவிடக் கழகத்தோழர்களாய், கருஞ்சட்டை அணியும் இழிவு நீக்க வீரர்களாய்க் காட்சியளிப்பார்கள் என்பது மட்டும் உறுதி!



காலமும் கருத்தும்

கப்பல் மிதந்தது!

இந்தியர் முழு முயற்சியின் பயனாய் உருவான "ஜல உஷா" என்ற கப்பல் விசாகையில் மிதக்க விடப்பட்டது. இந்தியப் பிரதமர் நேரு, வேத பாராயண முழக்கத்தினிடையே கப்பலைக் கடலில் செலுத்தினார்! இச்செய்தியைக் காணும் எவரும் வீரர் சிதம்பரம் பிள்ளையை நினையாமலிரார். இன்று அடிமை விலங்ககன்ற இந்தியா. அன்றோ அடக்கு முறையும் அந்நியர் ஆட்சியும் பின்னியிருந்த காலம்! அப்பொழுதே கப்பலோட்டினார் நம் மறத்தமிழர் சிதம்பரனார். கப்பல் வாணிபத்தில் தமிழர் கரை கண்டவர்கள்; எனவே தான் கப்பலோட்டும் உரம் சிதம்பரனார் உள்ளத்தில், தென்னாட்டில் எழுந்தது!

இன்று கப்பலோட்டுபவர்களுக்கு அரசாளுவோர் துணை செய்கின்றனர்; ஊக்கமளிக்கின்றனர். அன்று கப்பலோட்டியதற்காகச் சிதம்பரனார் பட்ட துயர் சொல்லும் தரத்தன்று!

அன்று போன்றே இன்றும் தென்னாட்டில்தான் கப்பல் தளம் அமைக்கப்படுகிறது. ஆனால் வேறுபாடுண்டு. அன்று கப்பலோட்டிய பெருமையும் தென்னாட்டிற்குரியதாயிருந்தது; தென்னாட்டுச் சிதம்பரம் உரிமையோடு கப்பலோட்டினார்! இன்றோ, சுதந்திர இந்தியாவிலோ, தென்னாட்டிலே கப்பலையோட்டுபவர் வடநாட்டு வால்சந்த் ஹிராசந்த் ஆவார்! சிதம்பரனார் கப்பலோட்டிய காலத்தில், வால்சந்த் ஹிராசந்த் எண்ணியிருக்கக்கூடமாட்டார் கப்பல் தொழில்பற்றி! ஆனால் அவர்தான் இன்று கப்பல் தொழில் அதிபதி! கப்பலோட்டிய சிதம்பரனார் வாழ்ந்த தென்னாட்டில் யாரும் கடலைப் பற்றியோ, கப்பலைப்பற்றியோ நினைப்பவர்களாகக்கூட இல்லை! இது பயங்கரமான உண்மை! வடநாடு உயர்வு பெறுகிறது என்பதற்கும் தென்னாடு தாழ்த்தப்படுகிறது என்பதற்கும் தெளிவான சான்று!

வங்க மொழிக்கு வெற்றி

கிழக்குப் பாகிஸ்தானில் வங்காளம் அரசியல் மொழியாக ஏற்கப்படவில்லை; உருது மொழிக்குத் தரப்பட்ட இடம் வங்க மொழிக்கில்லை. கிளர்ந்தெழுந்தனர் கிழக்கு வங்க மக்கள். சாதி, மத வேற்றுமைகளை மறந்து மொழிப் போராட்டம் தொடங்கினர்; அரசாங்கம் கண்ணீர் வாயுப் பிரயோகம் செய்யும் அளவுக்கு மக்கள், குறிப்பாக மாணவக் குழுவினர் கிளர்ச்சி வலுத்தது. அரசாங்கம் பணிய வேண்டியதாயிற்று. வங்கமொழி அரசாங்க மொழியாக ஏற்கப்பட்டது. மொழிப் போர் வெற்றி பெற்றது! இச்செய்தி தமிழர்க்குத் தேனென இனிக்கும் தன்மையது! ஹிந்தி தென்னாட்டில் வாலாட்டுமானால் உடனே

ஒட்ட அறுக்கக் கையில் இட்ட முள்ளது தமிழரிடம். இதனை உணர்ந்தாவது ஹிந்தியைப் பரப்பும் முயற்சியைக் காம ராஜர்கள் கைவிடுவரென்று நம்புகிறோம்.

பலிவிலக்கு !

மத சம்பிரதாயங்களைக் கடைப் பிடிப்பதில் காட்டுமிராண்டித் தனமான முறைகளும் உண்டு; 'சூட தீபாராதனை' போன்ற முறைகளும் உண்டு. கடவுள் வழிபாட்டில் 'பலியிடுவது' என்ற கொடிய பழக்கம் நம் நாட்டின் மூலை முடுக்குகளிலெல் லாம் பரவியிருக்கிறது. இதனைச் சீர்திருத்தக்காரர்கள் மறுத்துத் தடுக்க வேண்டு மென்று பிரசாரம் செய்து வந்துள்ளனர். எனினும் முற்றிலும் இவ்வழக்கம் ஒழிந்த பாடில்லை. திரு. எஸ். பி. ஆதித்தன் அவர்கள் இதனைச் சட்டப்படி தடுக்க ஒரு மசோதா சென்னை சட்ட மன்றில் கொண்டுவர இருக்கிறார். இம் முயற்சியை அனைவரும் வரவேற்று, பலியிடுவது சட்ட விரோதமாக்கப்படு மென்று திண்ணமாக நம்புகிறோம்.

ஐயருக்குச் சிலை!

டாக்டர் உ. வே. சாமிநாதையர் தமிழ்த் தொண்டினை நினைவுபடுத்தும் பொருட்டுச் சென்னைக் கடற்கரையில் சிலை யெடுத்துள்ளார்கள் தமிழன்பர்கள்! பாராட்டத் தக்க முயற்சி. ஆனால் தொடர்ந்து நடத்த வேண்டிய பணி 'தமிழ்த் தொண்டுக்கு நினைவேற்படுத்துவது' என்று கூற விரும்புகிறோம். தமிழ்த் தென்றல் திரு. வி. க., மறைமலையடிகள், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, பா. வே. மாணிக்க நாயகர், கா. சுப்பிரமணிய பிள்ளை போன்ற தமிழ்ப் பெரியார்களின் நினைவு சிலை வடிவமாகவோ அல்லது மணடபமாகவோ உருப் பெறுமானால் ஐயருக்குச் சிலையெடுத்த பயன் முற்றும் பெற்றுத் தமிழன்பர் ஆர்வமும் சிறப்புறும். அப் பொன்னாளை எதிர் நோக்குவோமாக!

காப்பி குடியாதே!

காப்பிக் குடியின் தீமையைப் பற்றி நம் புரட்சி கவிஞர் நன்கு பாடியிருக்கிறார்! சென்னை மாகாணத்தவருக்கு, சிறப்பாகக் கும்பகோணத்தாருக்கு இப்பொழுது தான் அத் தீமைகள் தெளிவாக விளங்குகின்றனவாம்! ஏதோ காப்பிக்கு எதிர்ப் பிரசாரம் தொடங்கிவிட்டது என்று நினைக்காதீர்கள்! நமது அருமை நிதியமைச்சர் சண்முகனார் காப்பிக் கொட்டைக்குச் சென்னை மாகாணத்தில் விலையேறியதற்குக் காரணம் அவர்கள் காப்பி குடிப்பதில் காட்டும் அளவற்ற ஆர்வம்தான் என்று குறிப்பிட்டுள்ளார். அந்த ஆர்வம்தான் உச்சிக்கு வந்து 'வேண்டாம்; காப்பியே வேண்டாம்' என்ற நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது. அங்கே காப்பி குடிக்கிறவர்களின் தொகை குறையவே பாலின் விலையும் குறைந்துவிட்டதாம்! எவ்வளவு நன்மை பாருங்கள்! காப்பிக்கொட்டைச் 'சந்தை' சிலரின் ஏகபோகமாக இருப்பதை ஒழிக்காத வரையில் காப்பி விலை ஏறுவதும் பால் விலை குறைவதும் அன்றாட நிகழ்ச்சிகள் ஆகிவிடலாம்! ○





பொறுத்திருப்பாய்

-நாரா. நாச்சியப்பன்-

பொன்னழகே நின் முடங்கல் பெற்ற பின்னர்
பொறுமையில்லை; எனினும் உரை கிழித்துப் பார்க்கத்
தெம்புமில்லை; முதலாளி முகத்த மைதி
தெரியவில்லை; பொழுது விரைந் தேக வில்லை
இன்பமது மிகக்குவந்தும் எடுத்த ருந்த
ஏற்ற இடம் கடையல்ல, எனினும் உள்ளம்
உன்னை எண்ணிப் பறந்தோடும் நிலையில் என்றன்
உடலை ஒரு சிலையாக்கிக் கடையில் வைத்தேன்!

கடைதந்த விடுதலையைக் களித்துப் பெற்றுக்
காவிரியின் கரைவந்து படிக்கலானேன்
மடைதிறந்த வெள்ளமெனச் சுவைப் பெருக்கை
பருகிவிட்டேன் இன்பமெனும் கரையில் நின்றே!
அடைந்திருக்கும் நின்காதற் பேற்றை எண்ணி
அகமகிழ்ந்தேன்; என்னைவர வேற்று நீயே
படைத்திருக்கும் தமிழமுதைப் பருகிவிட்டேன்;
பண்பாடும் மடநங்காய் என்சொற் கேளே!

விண்ணகத்திற் பறந்துவர வேண்டுமென்ற
நினைப்பிருந்தும் செயலில்லை, பறப்பதற்கோ
என்னிடத்திற் சிறகில்லை, வைய வாழ்வை
இனிமையுற நடத்தவழி என்னவென்றால்
பொன்னிடத்தில் நாட்டத்தைப் போக்கலன்றோ!
பொறுத்திருப்பாய் ஒரு திங்கள்! பொன்னும் நானும்
உன்னிடத்தில் சேர்கின்றோம்; படும் பாடெல்லாம்
உனக்காகத் தானேடி கன்னற் பாகே!



உ திருமுன் வருக

இராம. வே. சேதுராமன்

"மடந்தை" என்றென்னை அழைத்த தேவே!
மதியுள்ள மங்கைதனை ஏற்றுக் கொண்டு
மடமெனவே என்றனை நீர் ஒதுக்கித் தள்ளி
விருப்போடு வாழ்ந்திடுக! குறுக்கே நில்லேன்!
படமுடியாப் பாடென்றால் பட்டீரென்ற
பழியொன்றை என்மேலே சுமத்த வேண்டாம்.
மடந்தை ஆகலிற்றான் உம்மை என்றன்
மனத்தினிலே வைத்திட்டேன்! மற்றோர் செய்யார்!

அன்பில்லை என்றாலும் பொறுத்துக் கொள்வேன்
ஐயையோ! தமிழ்நாட்டில் பிறந்த நீர்தாம்
தென்பில்லை என்றுசொல்லும் திறமை (?) கண்டேன்
நடுங்கிட்டேன்! உடல் வெயர்த்தேன்! வேறென் செய்வேன்!
வன்மையுள்ள தென்னவனின் வழியில் வந்தீர்
வாளுடலில் தென்பில்லை என்று சொன்னீர்!
'தென்புண்டு, அன்பில்லை' என்று சொல்க
தீயனவும் அதற்காக வெறுக்க மாட்டேன்!

தவிர்க்கவே வேண்டுமென்று நினைத்தொருவன்
குலைகுலையாய்ச் சருகுதனைச் சேர்க்கலானான்.
குவிக்கவே வேண்டுமென்ற எண்ணமின்றி
குவையதனை நிரப்புதலே தொழிலாய்க் கொண்டான்.
தளிருடலின் பொன்னிறத்தைப் பறித்திட்டோரே!
தங்களெல்லாம் இத்தன்மைத் தாமதன்றோ?
அவிழ்மலர் மடலவிழும் காட்சி பாரீர்!
அவ்விதழ்கள் உதிருமுன்னே ஓடி வாரீர்!

புதுக்கோட்டைக்குப்

புதுவாழ்வு

படேலின் அவசர அழைப்பின் மேல் டில்லிக்குச் சென்ற புதுக்கோட்டை மன்னர் இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்; இந்திய யூனியன் எல்லைக்குள் புதுக்கோட்டைத் தனியரசு ஐக்கியமாயிற்று; திருச்சி கலெக்டர் புதுக்கோட்டை நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டார்.

மார்ச் மூன்றாந் தேதி இத்தனையும் நடந்தன. அன்று முதல் புதுக்கோட்டை தனியரசல்ல. அன்றுமுதல் புதுக்கோட்டை, மன்னராட்சியினின்றும் விடுபட்டது; மன்னர் முடி துறந்தார்.

இந்தப் பெரிய மாறுதல்கள் புதுக்கோட்டை மக்கள் எதிர்பாராதவை; எனினும் அவை ஏற்படவேண்டிய சூழ்நிலைமட்டும் இங்கே உருவாகிக் கொண்டே வந்தது என்பதனை யாரும் மறுக்க முடியாது.

புதுக்கோட்டை கிழக்கிந்தியக் கம்பெனியார் ஏற்படுத்திய அரசு; பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடிகோலும வகையில் புதுக்கோட்டைத் தொண்டமான்கள், வெள்ளையர்க்கு உதவியதற்குக் கிடைத்த பரிசு. பிரிட்டிஷாரிடம் காட்டிய ராஜவிசுவாசமும் அதன் பயனாய்க் கிடைத்த நன்மைகளும் என்ற பொருளின் விரிவுரை தான் புதுக்கோட்டை சரித்திரமாகும் என்று குறிப்பிடப்படுகிறது. வெள்ளையர்க்கு நல்ல பிள்ளைகளாய்ப் பல சமயங்களிலு தொண்டமான்கள் நடந்து வந்திருக்கின்றனர். பதிலுக்குந் 'நன்றி மறவாத' வெள்ளையர், 'கப்பம் கட்டாத ராஜா' வாகத் தொண்டமானை ஆக்கி வைத்தனர். அவ்வளவுதான்!

வெள்ளையர்கள் தங்கள் நலனுக்காக ஆக்கிவைத்த ஒன்று, வெள்ளையர்கள் வெளியேறிய பின்பும் நிலைத்திருப்பதில் அர்த்தமில்லை. 1200 சதுரமைல் பரப்பும், 40 லட்சம் வருமானமும், 5 லட்சம் மக்களும் கொண்ட புதுக்கோட்டையரசு செயற்கையாகச் சிருஷ்டிக்கப்பட்டது; எனவே கால் வெள்ளத்தில் மறைந்தது; இதற்காக யாரும் வருத்தப்பட வேண்டியதில்லை—நேராதது ஒன்றும் நேர்ந்துவிடவில்லை.

புதுக்கோட்டை இணைப்பு பல முற்போக்கான மாறுதல்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பரம்பரை உரிமை பெற்று, எதேச்சாதிகார வெறி கொண்டு மக்களையும் நாட்டையும் தங்கள் நலனுக்குப் பயன்படுத்தி வந்த மன்னராட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பெற்றது; மக்கள் நேரடியான நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் நிலை உண்டாகிவிட்டது; மக்களாட்சி மலர்ந்தது. பிரிட்டிஷார்


ஆட்சியின் பயனைத்தான் இந்தத் தனியரசுகளும் மன்னர்களும் என்பதனை அனைவரும் அறிவர். இந்த ஏற்பாடு நாட்டுக்கு நல்லதல்ல என்பதனையும் அனைவரும் ஒப்புவர். அ·த்தகைய முறையிலே, புதுக்கோட்டைத் தனியரசின் ஐக்கியமும் வரவேற்கப்படவேண்டிய தொன்றேயாகும். அடுத்துத் தமிழகம் பிரஞ்சுப் பிரதேசமாகவும, திருவாங்கூர்த் தனியரசாகவும், புதுக்கோட்டைத் தனியரசாகவும், சென்னை மாகாணமாகவும் சிதறுண்டு கிடந்த நிலை இம்மாறுதலால் ஓரளவு தீர்க்கப்படுகிறது; முற்றும தீர வழி காட்டுகிறது. மற்றும், புதுக்கோட்டை மக்கள நாட்டின் இதர பகுதிகளில் ஏற்பட்ட முற்போக்கு எண்ணங்களில் பங்கு கொள்ள முடியாதவர்களாகவே இதுவரை இருந்து வந்திருக்கிறார்கள். [illegible] சுதந்திரம் பெற எவ்வளவு முயற்சித்ததோ, எவ்வளவு போராடியதோ, அந்த அளவு கூடப் புதுக்கோட்டை மககள் இந்திய சுதந்திரத்திற்காகப் போராடவில்லை. அரசியல் கட்சிகள் சமூக சீர்திருத்தக் கட்சிகள் தங்கள் வேலைத் திட்டங்களைப் புதுக்கோட்டைப் பகுதிக்குப் பரப்ப முடியாதவாறு தனி எல்லைக்கோடு தடையாயிருந்தது. அரசியல் விழிப்பில் மிகவும பிற்போக்காளர்களாயுள்ள புதுக்கோட்டை மக்கள் முன்னேற்றமடைய இம்மாறுதல் பெருத்த உதவிசெய்யும். இவ்வாறு புதுக்கோட்டை ஐக்கியம் நன்மைக்கான மாறுதலே ஒழிய கண்ணீர்விட்டுக் கலங்குவதற்குரியதல்ல.



முடிதுறந்த மன்னர்

புதுக்கோட்டை மன்னர் இளைஞராயினும், அரசியல் சீர்திருத்தங்கள் வழங்குவதில் பலருக்கு முன்மாதிரியாய் நடந்து கொண்டார்; மக்கள் கோரிக்கைகளுக்கு அவ்வப்போது இணங்கி வந்தார். அதன் பயனாகப் புதுக்கோட்டையில் அரசியல் நிர்ணய சபையும், அதன்பயனாகப் பொறுப்பாட்சியும் ஏற்படவிருந்தன. இதற்கிடையில் நிலைமை சமாளிக்கக் கூடியதாக இல்லை; நிர்வாகம் திணறும் படியான சந்தர்ப்பங்கள் கூட வந்தன. அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டச் சென்னை மாகாணம் போலீஸ் தந்து உதவ வேண்டியதாயிற்று. அரசியல் பித்தலாட்டமும், பதவி வேட்டையும்.

ஆதிக்க வெறியும் தலைவிரித்தாடின. மேற்கொள்ள வேண்டிய நெறியறியாது மன்னரும் மக்களும் திகைத்தனர்; அப்பொழுதுதான் பட்டேல் மன்னரை டில்லிக்கு அழைத்தார்; இணைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதைச் சுட்டிக் காட்டினார். பின் தங்கிய மன்னருக்குச் சேர்வதன் அவசியத்தைப் பன்முறை எடுத்தியம்பினார். 'மக்களின் நலனில் அக்கறை'யுள்ள மன்னர் சரியென்று ஒப்பி இணைப்புப் பத்திரத்தில் கையெழுத்திட்டார்; புதுக்கோட்டை இந்திய யூனியனில் இணைக்கப் பெற்றது.



அரசர் கல்லூரி

இந்த மாறுதலை எதிர்க்கின்றவர்களும், 'சுயநிர்ணயம் பறிபோகிறதே' என்று கதறுகிறவர்களும், "பொதுஜனவாக்கெடு—பிறகு இணை" என்று சவால் விடுகிறவர்களும, "தமிழ் ராஜா அவர் ஒருவர்தான் இருந்தார். தமிழரசு அது ஒன்றுதான் இருந்தது — அதனையா பறிப்பது?" என்று கண்ணீர் வடிப்பவர்களும், "புதுக்கோட்டை இந்தியக் கலாசாரத்தின் இருப்பிடமாயிற்றே, புராதனப் பழக்க வழக்கங்களைக் கைவிடாது அர்த்த சாஸ்திர முறைப்படி ராஜாங்கம் நடத்தியதொன்றாயிற்றே, அதனையா 'இல்லை' யென்றாக்குவது? விடோம்!" என்று பதறுபவர்களும், "பட்டேல் சர்வாதிகாரந்தான் பெயர்போனதாயிற்றே! கட்டாயப்படுத்திவிட்டார், மன்னரை" என்று பட்டேல் சர்வாதிகாரி என்று புதுஞானோதயம் பெற்றவர்களும் இன்று புதுக்கோட்டையில் இருக்கிறார்கள்; "ராஜாவைத் திருப்ப அழைத்து வந்து மணிமுடி தரிக்கச் செய்வது; இல்லையேல் மாள்வது" என்ற வீராவேசம் சிலரிடம் தென்படத்தான் செய்கிறது! புதுக்கோட்டை சட்டசபையுறுப்பினர்கள் இருபத்தாறு பேர் ஐக்கியத்தை எதிர்த்து விண்ணப்பித்திருக்கிறார்கள். ஐக்கியத்தை எதிர்க்கும் முன்னணி பலமாக வேலை செய்கிறது; மக்களின் கையெழுத்தும் திரட்டப் படுகிறது. பொதுக் கூட்டங்களும் அறிக்கை வெளியிடுகளும் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன.

இம்முன்னணியும ஆர்ப்பாட்டங்களும ஒரு சிலரின் முயற்சிகளானால் நாம் கவலைப்படுவதற்கில்லை. மந்திரியாகவும் தந்திரியாகவும் வர எண்ணிய சிலரின் நினைப்பு தவிடு பொடியாயிற்று; அதிகாரம பண்ணவிருந்த வாய்ப்புபறிபோயிற்று. மற்றும் சிலர் இத்தனியரசில் 'ஏகபோக வேட்டைக்காரர்களாக', 'காட்டு ராஜாக்களாக' விளங்கினார்கள்; அவர்களின் செல்வாக்கும் அதிகாரமும் புதுக்கோட்டை, தனியரசாக விளங்கினால்தான் செல்லும். அதற்கு இம்மாறுதல் முடிவுகட்டி விட்டது. இவர்கள் ஐக்கிய எதிர்ப்பு முன்னணி வீரர்களாக இருப்பதில்

வியப்பேதுமில்லை. ஆனால் பொதுமக்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் நேரடியாகப் பங்கு கொள்ளுகிறார்கள் என்பதை நம்மால் நம்ப முடியவில்லை! அப்படி நடப்பதுண்மையானால் அவர்களுக்காக நாம் இரக்கப்பட வேண்டியவர்களாகிறோம். புதுக்கோட்டையைப் பொறுத்த வரையில் சுயநிர்ணயத்திற்கோ பொது ஜனவாக்கெடுப்புக்கோ அவசியமஎதும் எழவில்லை. தமிழ் மக்களில் ஒரு பகுதியினரை 'ராஜா' ஒருவர் ஆண்டு வந்தார்; அந்த 'ராஜா' தன் பொறுப்பினின்றும் விலகிக் கொண்டார். இதைத்தவிர மாறுதல் எதுவுமில்லை. 'ராஜா' தாமாக விலகிக்கொள்வதைத் தடுத்து அரியாசனத்தில் அமர்த்தும் மக்கள் எங்கும் இரார். முடியாட்சிக்கு உலகெங்கும் முடிவு கட்டப்படும் காலமிது. குடியாட்சி தழைத்துவரும் இந்நாளில் புதுக்கோட்டை மன்னர் முடிதுறந்தது அவருடைய பரந்த மனப்பான்மையையும் வருவதை உணரும் தன்மையையுமே காட்டுகிறது.

மற்றொருகாரணம்தான் மிக முக்கியமானது. புதுக்கோட்டையைத் தனித்தமிழ் அரசு என்பதும் புதுக்கோட்டை மன்னரைத் தனித் தமிழரசர் என்பதும்தான் அது. தமிழரசர்களுக்கெல்லாம் பிரதிநிதியாக இருந்த தொண்டமானையும் பட்டம் துறக்கும்படி செய்து விட்டார்கள் என்று கூறப்படுகிறது. 'தமிழரசு' என்று சுட்டிக் காட்டப் புதுக்கோட்டைதான் இருந்தது, அதனையும் அழித்து விட்டார்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறது. இக்காரணம் பொதுமக்களுக்குச் சற்று மயக்கம் ஏற்படுத்தக் கூடியது; ஐக்கியமுன்னணியில் பொதுமக்களைக் கொண்டு சேர்க்கும் வல்லமைவாய்ந்தது. எனவே இதனைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

'ராஜாக்கள்' எனப்படுவோர் இனி மக்களை ஆள முடியாது என்ற பொது விதிப்படி பார்த்தாலும் 'தமிழ் ராஜா' என்பதற்காகப் புதுக்கோட்டை மன்னர் ஆட்சியை நாம் நீடிக்கவிட முடியாது; அது நேர்மையுல்ல. இதனை மறந்து பார்த்தாலும் தமிழுக்கோ, தமிழ் மக்களுக்கோ நன்மை செய்த தமிழ் ராஜாவாகவோ, தமிழரசாங்கமாகவோ புதுக்கோட்டை மன்னரையும், புதுக்கோட்டைத் தனியரசையும் நாம் குறிப்பிட முடியவில்லை. தமிழ் நாட்டினிடையில் அமைந்திருக்கின்ற காரணத்தினாலும், மக்களும் மன்னரும் தமிழ் பேசுகின்றவர்கள் என்ற காரணத்தையும் தவிர்த்து இது தமிழரசு, ஆண்டவர் தமிழரசர் என்று கூற வேறு காரணங்களில்லை. சேர, சோழ, பாண்டிய மன்னர்களோடு இத்தனியரசை ஒப்பிடுவது பொருத்தமில்லாத செய்தியாகும், அம்மன்னர்கள் தமிழ் மக்களின் நன்மைக்காகவும் தமிழ் மொழியின்நன்மைக்காகவும் செய்த தொண்டுகள் எண்ணிறந்தன; அவை ஒப்பற்றவை. முரசு கட்டிலில் அறியாது படுத்துறங்கிப் போன தமிழ்ப் புலவரை அவர் தமிழ்ப் புலவர் என்ற காரணத்திற்காக, அக்குற்றம பெறுவதற்குரிய வாள் வீச்சுத் தண்டனையை நீக்கியதோடு நில்லாமல், அவர் நன்கு தூங்கச் சாம

ரம் வீசிய பெருந்தகைமை பழந்தமிழ் மன்னர்களுக்கு உண்டு. அத்தகைமையும் தாய்மொழி யார்வமும் புதுக்கோட்டைச் சரித்திரத்தின் ஓரத்தில் கூடக் காண முடியாதவை. "தமிழுக்குப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தினார் புதுக்கோட்டை மன்னர். கலைக் களஞ்சியம் உருவாக்கும் பொறுப்பைப் புதுக்கோட்டைத்தனியரசு ஏற்றுக்கொண்டது" என்று செய்திகள் இருக்குமானால் நாமும் தொண்டமான் தமிழரசர்தான் என்பதை ஒப்புவோம்; தமிழுக்குத் தொண்டாற்றிய மணிமுடி பறிபோகிறதே என்று இரக்கப்படுவோம். ஆனால் நிலைமை அவ்வாறில்லையே!



மணிக்கூண்டு

○

புதுக்கோட்டை நிகழ்ச்சிகள் தமிழுக்கும் தமிழ் மரபுக்கும் நேர்மாறான போக்கைக் கொண்டிருக்கின்றன என்பது பின்வரும் செய்திகளால் விளங்கும்.

புதுக்கோட்டை அரசாங்கம் தமிழுக்கென்று தனிக்கல்லூரி நடத்தவில்லை. ஆனால் வேத சாஸ்திர பாடசாலை நடத்துகிறது. அங்கே படிக்கின்ற வித்தியார்த்திகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கிறார்கள் அரசாங்கத்தார். ஆண்டொன்றுக்கு இப்பொழுது ரூ. 2000க்கு மேலாக இந்நற்பணியில் செலவாகிறது. மொத்தம வித்தியார்த்திகள் இருபதுபேர் இருக்கலாம்; 40, 50 வயது நிரம்பியவர்கள்கூட இப்பாடசாலையில் படிக்கிறார்கள்! ஆட்சியாளர் தமிழுக்கும் செய்கிறார்கள். செல்வந்தர்கள் சிலரது சொந்த முயற்சியில் நடத்தும் தமிழ்க் கல்லூரிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500 உதவி வருகிறார்கள். வடமொழிக்கு ரூ. 2000; தமிழுக்கு ரூ. 500. இது தமிழ்த் தனியரசில் நடைபெறுவது!

தசரா புதுக்கோட்டையில் விசேஷமாக நடைபெறும். சில வருஷங்களில் 30,000க்கு மேல் அத்திருவிழாவிற்கு அரசாங்கப் பணத்தில் செலவழித்திருக்கிறார்கள். அச்சந்தர்ப்பத்தில் பண்டிதர்களுக்குச் 'சம்பாவனை' உண்டு. தமிழ்ப் பண்டிதர்களுக்கு 'யோகம்' என்றுதானே நினைக்கிறீர்கள்! சற்று பொறுங்கள். மூன்று ரூபாய் முதல் நூற்றியிருபத்தைந்து ரூபாய்வரை இச்சம்பாவனை உண்டு. ஜகத்குரு சங்கராச்சாரியார் முதல் சகல வேத விற்பன்னர்களுக்கும், (அவர்கள் காசியில், காஞ்சிபுரத்தில் எங்கெங்கோ இருப்பார்கள்) ஆண்டு தோறும சம்பாவனை அனுப்புகிறார்கள். இந்த ஆண்டு 250-க்கு மேற்பட்ட பண்டிதர்களுக்கு இத்தொகை

அனுப்பப்பட்டிருக்கிறது. அப் பண்டிதர்களில் இருவர்தான் தமிழ்ப் பண்டிதர்! இந்த வேடிக்கை நடக்குமிடத்தைத் தான் தமிழரசு என்று கூறு கிறார்கள்!

புராதன கலாசாரம், தருமம் இவைகளின் இருப்பிடம் புதுக் கோட்டை; அவற்றின் வளர்ச் சிக்காகவாவது புதுக் கோட்டை தனித்திருக்க வேண் டுமென்று சிலர் கூறுகிறார்கள். அதனையும் ஆராய்வோம்.

தேவஸ்தானமென்று ஒரு இலாகா வைத்துக் கொண்டு அதற்காக ஒவ்வொரு ஆண் டிலும் ஒன்றரை லட்சம் செல வழித்து வந்தார்கள். அரசாங்கத்திற்குச் சொந்த மான கோயில்கள். சத்திரங் கள், முதலிய மதஸ்தாபனங் கள 890; அரசாங்க மேற் பார்வையில் உள்ள தனிப் பட்ட மதஸ்தாபனங்கள் 256. இந்தஸ்தாபனங்களில் ஆறு கால பூசை நடத்தத்தான் இத்தொகை செலவழிக்கப்படு கிறது. மக்களுக்கு இந்தவித ஸ்தாபனங்களால் ஏதும் பய னில்லை; ஒரு சிலர் வயிறு வளர்க்கத்தான 'தேவஸ்தா னம்' என்ற பெயரால் இப் பணம் பாழாகிறது,

அரசருக்கென்று மூன்று லட்சம் வரை ஆண்டிற்குச் செலவாகிறது. அதில் ரூ. 7000 வரை, திதி, தர்ப்பணம் முதலான சடங்குகளுக்குச் செலவழிக்கப் படுகிறது என் றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

தசராச் செலவுதான் 'புராதனக் கலாசார' வளர்ச்சி யில் முக்கியத்துவம் வகிக் கிறது. அரிசித் தட்டுப்பாடு வந்த புண்ணியமாக இச் செலவில் பெரும் பகுதி இப் போது இல்லை. இல்லாவிட் டால் தசராவின்போது எங் கெங்கோ இருந்து புதுக் கோட்டை நகரில் 'பிராமணத் தமர்கள்' கூடிவிடுவார்கள். பத்து நாளும், வருகிற ஒவ் வொரு பிராமணருக்கும் ஒரு படிபச்சரிசி, பூரி காலணா விதம கொடுத்து வந்தார்கள். இதைத்தவிரச் சாப்பாடு வேறு உண்டு. அங்கேயும 'பிராமணாள்' மட்டும்தான் சாப் பிடலாம். இத்தண்டச் செலவுக்காகப் புதுக்கோட்டை பணம், 40000, 50000 என்று. செலவழிக்கப்பட்டது

ஸிவில் விவாக மசோதா போன்ற முற்போக்கான மசோதாக்கள் புதுக்கோட் டைச் சட்டசபையில் பலமுறை வந்து தோற்றுப்போயிருக் கின்றன. சாரதாச்சட்டம புதுக்கோட்டை வாசிகளுக்குக் கிடையாது.

ஒரு உத்திரவு போட் டார்கள் புதுக்கோட்டை சர்க்கார்; விதவாவிவாகங் களைக் கோயிலில் நடத்தக் கூடாதென்று!

கோயில் திறப்புக்குத் தனி யரசில் எதிர்ப்பிருந்து காந்தி யார் மறைவுதான் அரசருக்கு அவ்வகையில் விழிப்பைத்தந் தது.

புதுக்கோட்டைச் சட்டப்படி மதம் மாறியவர்களுக்குச் சொத்துரிமை இல்லை! பெண் கள் சொத்துரிமை மசோதா இங்கு நிறைவேறவில்லை.

இத்தகைய விநோதங்களைப் புதுக்கோட்டையில் காணலாம்.

இதுதான் புராதன கலாசாரப் பாதுகாப்பு! இத்தகைய பாதுகாப்பு எக்காரணத்தைக் கொண்டும் அவசியமென்று கூற முடியாது. புதுக்கோட்டை வைதிகக் கோட்டையாக இருந்தது, பெயரளவில் கூடப் பொருத்தமில்லை. மன்னர் முடிதுறந்ததும், தனியரசு ஐக்கியமும், இந்த வினோதங்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துவிடும். சுயநலக் கும்பலின் வயிறு வளர்ப்புக்கு இனி இடமிருக்காது. பிற்போக்கான சட்ட திட்டங்களை மதத்தின் பேரால் அமுல் நடத்த முடியாது. எனவே இம்மாறுதல் எவ்வகையில் பார்த்தாலும் வரவேற்கப்பட வேண்டியதாகிறது.

○

புதுக்கோட்டை மக்கள் சென்றதைப்பற்றி இனிச் சிந்திக்க வேண்டியதில்லை; தமிழகத்தின் புது வாழ்வில் அவர்கள் நேரடியாகப் பங்குபெற வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதனை நன்கு பயன்படுத்திக் கொள்வதில்தான் அவர்கள் எதிர்காலம் இருக்கிறது.

புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக்குவதா? அல்லது மற்றமாவட்டங்களுடன் இணைப்பதா என்பது இன்றுசென்னை அரசியலாரின் கவனத்தை ஈர்த்திருக்கிறது.



புது அரண்மனை

புதுக்கோட்டைச் சரித்திரம் கூறுவது போல, இந்நிலப்பரப்பு இயற்கை வளம் நிரம்பியதல்ல; விவசாய நாடு; அதுவும் மழையின் தயவை நாடியிருப்பது. சாப்பாட்டுக்குப் பக்கத்துப் பிரதேசங்களின் உதவியை நாடித்தான் ஆகவேண்டும். ஆனால் புதுக்கோட்டை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது!

பரப்பு, வருமானம் முதலியவற்றைக் கவனித்தால் தனிமாவட்ட அமைப்புக்குப் பொருத்தமில்லையென்றுதான் தோன்றும்! ஆனாலும் புதுக்கோட்டை நகரை உத்தேசித்து, அங்குள்ள, கல்லூரி, நீதிமன்றம், சர்க்கார் அலுவலகம், ஆஸ்பத்திரி முதலியன அமைந்திருக்கும் வசதியையும் நகரமைப்பையும் எண்ணி, புதுக்கோட்டை நகரம் சமீபகாலத்தில் அடைந்திருக்கும் தொழில், வாணிப முன்னேற்றம் முதலியவற்றைக் கருத்திற்கொண்டு பார்த்தால் ஒரு மாவட்டத் தலைநகராக இருக்கும் தகுதி புதுக்கோட்டை நகருக்கிருக்கிறது என்பதை உணரலாம். புதுக்கோட்டை அடைந்திருக்கும் முக்கியத்துவம் குறையாமல் இருக்க வேண்டுமானால் அவ்வாறு செய்வதுதான் சிறப்பு. இத்தகையமுடிவுக்குச் சென்னை ஆட்சியாளர் வருவர் என்று திண்ணமாகநம்புகிறோம். இணைப்பின் பயனைக் புதுக்கோட்டை காவேரிப் பாசன வசதி பெற்று மதுவிலக்கு இனும் ஒழிப்பு முதலிய திட்டங்களின் பயனை ஏற்றுப் புது வாழ்வு பெற வேண்டுமென்று வாழ்த்துகிறோம். ☆



பிள்ளையார் கொடுத்தது

கண்ணதாசன்

மாந்தளிர்போல் மேனி; மதி நிகர்த்த மென்வதனம்; கொவ்வைக்கனி யிதழ்கள்; குமிழியிடும் புன்சிரிப்பு. சுந்தரி என்ருல் சுந்தரி தான். ஊரிலே வேலையற்ற ஆடவர்கள் அவளை 'அழகே உருவான அணங்கு' என்று வர்ணிப்பர். பச்சைச் சேலையும் பகட்டான ரவிக்கையு மணிந்து, ஆடவரின் இச்சையைத் தூண்டிவிட இரு கையை விசிய வண்ணம் கோவிலுக்கோ, குளத்துக்கோ செல்வாள், அவள்.

மறைவிலே கெட்டு, நாலு பேருக்கு நடுவிலே பத்தினித்தனம் பண்ணுகின்ற பதிவிரதையல்ல அவள். பருவமடைந்ததும், ஊராருக்குப் பறையறிவிக்கப் பொட்டுக் கட்டி, வழக்கமான வாடகை விகிதத்தை மனனம் பண்ணி, வருவோரிடம் ஒப்புவித்து வாதாடும் தேவதாசியல்ல அவள். நல்ல குடும்பத்தில் பிறந்து கணவனில்லாததாலோ கைம்பெண்ணுனதாலோ தேவதாசிக்குப் பேரட்டியாகக் கருப்புச் சந்தைகாணும் விபசாரியுமல்ல அவள்.

அவள் ஒருவன் மனைவி. அவள் கணவன் நல்ல பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். பிஞ்சில் பழுத்தவன்; பேடியுங்கூட! பக்கத்து வீட்டுக்காரன் வாழ்ந்து கெட்டவன்; சூதாடி. அவனது பெண் தான் சுந்தரி. அவளை அவன் கண்டான்; கண்டதும் காமம் கொண்டான். ஆசைமிகு அவளை அடையத் துடித்தான். அப்பனிடம் சொன்னான். பேச்சு நடந்தது - திருமணப் பேச்சுத்தான். முப்பது பச்சை நோட்டுக்கள் பெட்டி மாறின. நல்லதோர் நாளில் சுருங்கா நெடுங்கயிறு மஞ்சள் நிறத்தில் அவள் கழுத்தில் ஏறிற்று. ஏறிய கயிற்றை இறக்க வழிகிடையாது!

அவள் வாழத்தொடங்கி னாள். அப்படித்தான் ஊரா நினைத்தார்கள். தழதழத்த அவள் இளமை அமைதியடைய அவனால் ஏதும் செய்ய முடியவில்லை.

ஆண்டுகள் ... கடந்தன.

தன் வாழ்வில் சுகமில்லை என்பதற்காக அவள் கவலைப்படவில்லை. சுகமிருந்தாலு இல்லாவிட்டாலும் அவனுக்

வேறு வழி கிடையாது. அவ னுக்கு இருந்தது ஒரே கவலை! ஒரு குழந்தை வேண்டும் அவ னுக்கு! ஆமாம்; ஒரு குழந்தை!

அக்காள் குழந்தை அழுதா லும், சித்தியின குழந்தை சிரித் தாலும், ஊரார் குழந்தை ஓடி விளையாடினலும் அவள் உள்ளம் கேட்கும்: "எனக்கு ஒரு குழந்தை? மழலைமொழி கூறி மகிழ்விக்க ஓர் மகவு; கன்னத்தில் முத்திட்டுக் கள் வெறி கொள்ள ஓர் கன்று; குதித்து விளையாடக் குழவி யொன்று; ஏய்ந்திருக்கும் உள்ளத்திற்கு உற்சாகமூட்டக் குழந்தை ஒன்று! ஒன்றே! ஒன்று போதும்!"

யார் கொடுப்பார்?

"பிள்ளையோ பிள்ளை!" என்று தெருவிலே கூவிச் சென்ருர்களாம வங்கத்தில் பஞ்சம வந்தபோது!

பெற்ற குழந்தையைக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு ஓடிய ஒரு பெண்ணைக் கைது செய்தது சென்னை சர்க்கார்.

ஏழு குழந்தைகளை வைத் துக் காப்பாற்ற முடியாமல், அவற்றையும கிணற்றில் தள்ளி, தானும் விழுந்து மாண் டாள ஒருத்தி, கோவைக்கு அடுத்த கிராமத்திலே.

பிள்ளை வேண்டும் என்று கலங்கி னுள் சுந்தரி! பக்கத்து வீட்டுக் காரி சொன்னுள்: "வேண்டா மென்ருலும் கொடுக்கிற தெய் வம், வேண்டியழுதாலும் பாரா முகமாயிருக்கிறது" என்று!

இன்னெருத்தி குளக்கரை யில் சுந்தரியின் காது கேட்கச் சொன்னுள். "பிள்ளையில்லா மல் சாகிறவர்கள், 'புத்' என் னும் நரகிற்குப் போவார்கள்." என்று. உள்ளூர்ப் பஞ்சாங்கக் காரரின் மனைவி அவள்.

அவள் தனியிடத்தில் அழு தாள். எண்ணி எண்ணி வாடினுள். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தாள். அதைக் கணவனிடம் சொன்னுள். அவனும் சமமதித்தான்.

காசி விசுவனதர், திருப்பதி வேங்கடாசலபதி, குன்றம் அமர்ந்த முருகன், குருவாயூர், அப்பன், பழனிவாழ் பழனியப் பன், பண்டரிபுரத்து பகவான், திருச்செந்தூர் வேலாண்டி, திருவொற்றியூர் ஒற்றியூரான் எல்லாரையும் சந்தித்தார்கள் சந்தித்து வேண்டினர்கள். 'மகவொன்று தாரீரோ, மகேசு வரா!" என்று விழுந்தெழுந் தார்கள். ஊருக்கு ஆறேகால் ரூபாய் உண்டியலில் போட்டார் கள். ஒருவழியாக யாத்தி ரையை முடித்துக் கொண்டு ஊருக்கும் திரும்பினர்கள்.

இனிக் குழந்தை பிறக்கும் என்று மகிழ்வுடன் இருந்தார் கள்.


ஆண்டொன்று கழிந்தது; ஆண்டவன் மனமிரங்கவில்லை.

அவனுக்குத் திரும்பக் கவலை ஏற்பட்டது.

வாழைப்பழத்திலே பிள்ளைப் பூச்சியை வைத்து விழுங்கச் சொன்னார்கள் சிலர்; சாம்பலைத் தீர்த்தத்தில் கலந்து குடிக்கச் சொன்னார், சாம்பசிவக் குருக்கள். வயிற்றிலே மாவிளக்கு ஏற்றிவைக்கச் சொன்னார் வடிவேலர் சந்நிதித் தர்மகர்த்தா. என்னென்ன உபாயங்களுண்டோ, அத்தனையும் செய்து பார்த்தனர். ஊஹூம்! ஒன்றும் நடக்கவில்லை.

கடைசியில் மாமியார் சொன்னபடி, உள்ளூர் அரசமரத்தையும் பிள்ளையாரையும் அறுபது நாட்கள் மாலையில் சுற்றிவரத் திட்டமிட்டாள். அப்படியே சுற்ற ஆரம்பித்தாள்.

ஏழையின் வீட்டில் பிறந்தாலும் காளை போலிருந்தான் சுந்தரேசன். உத்தமன் என்று ஊரார் புகழ்ந்தனர். வயது இருபத்தைந்திருக்கும். மாலையிலே உலாவ வருவான் குளத்தின் ஓரம். குளத்தின் அருகில் ஒரு அரசமரம்; அதனடியில் குந்தியிருக்கும் ஒரு பிள்ளையார். அதைச் சுற்றிவரும் சுந்தரி, சற்று தூரத்தில் அமர்ந்திருக்கும் சுந்தரேசனைப் பார்த்தாள். இது இயற்கை? வாழ்விலே நடப்பது. பார்த்தாள் - பார்த்தான் சிரித்தாள் - சிரித்தான்; இவளும் பயந்தாள் - அவனும் பயந்தான்; நாட்கள் சென்றன. பயம் ஒழிந்து பாதையும் கண்டனர். வாழ்விலே பல நாட்கள் அவர்களுக்கு விழா.



அவள் பட்ட கஷ்டங்கள் வீணாகவில்லை.

பத்து மாதங்கள் பறந்தோடின.

பச்சிளங் குழவி அவள் மடியிலே கிடந்தது.

ஆண் மகவு! அதிர்ஷ்டக்காரி அவள்!

நாட்கள் சென்றன; பிள்ளையாருக்குக் கோவில் எழுப்பினான் அவள் கணவன்.

கோவில் முடிந்தது; கும்பாபிஷேகம் நடந்தது. கும்பாபிஷேகத்திற்குச் சுந்தரேசனும் வந்திருந்தான்.

அவள் அவனைக் கண்டாள்; அவன் அவளைக் கண்டான். குழந்தை இருவரையும் பார்த்துச் சிரித்தது.

“பிள்ளையார் கொடுத்தது” என்று உறுதியாக நம்பினான் அவள் கணவன்.

“பிள்ளை,யார் கொடுத்தது?” என்ற கேள்வி “நான் கொடுத்தது” என்று அவன் உள்ளத்திலும், “ஆம்; அவர்தான் கொடுத்தது” என்று அவள் உள்ளத்திலும் பதிலாகப் பரிணமித்தது.

“யார் கொடுத்தால் என்ன? உன் கவலை தீர்ந்தது!” என்று சொல்வது போலத் தாயைப் பார்த்துச் சிரித்தது குழந்தை!



தேய்ந்த நிலா

டி.கே.சீனிவாசன்

"அன்புடையீர்" எனத் தொடங்கியிருந்தது அந்தக் கடிதம். ஒத்த அளவில் குண்டுமல்லிகைகளைப் பறித்தெடுத்து ஒன்று சேர்த்து வைத்ததுபோல அந்த எழுத்துக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒரு முறை அதை ரசித்து அனுபவித்தான்.

"நெஞ்சுக்கு வஞ்சகம் செய்யாமல் எழுதுகிறேன்."

விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பே சத்தியம் செய்துவிட்டுத்தொடங்குவது போலக் காணப்பட்டன அந்த வார்த்தைகள்.

"என்னை முன்பின் தெரியாத ஒருவருக்கு மணமுடித்து வைத்தார்கள். நம் நாட்டில் வழக்கமாக நடப்பது போலத்தான் அதுவும் நடந்தது. அவர் என் உடலைப் பூரணமாகக் கட்டுப்படுத்தி விட்டார். ஆனால் உள்ளத்தைப் பற்றிக் கவலையே படவில்லை.

"நானாக அதை அர்ப்பணம் செய்வேன் என்று எதிர்பார்த்தாரோ என்னவோ? தானாக அதைப்பற்றி எடுத்துக் கொள்ள அவர் முயற்சிக்கவே இல்லை!" ஏதோ அவள் மனவேதனையை எழுத்துருவாக்கியிருந்தாள். அதில் மறைந்திருந்த உண்மைகள் அவன் மூளையைப் போய்த் தாக்கின.

"பெண்களே எப்போதும் பிடிவாதம் உள்ளவர்கள் என்று தூற்றுகிறார்கள். வெட்கமும் பயமும் வலிவற்ற உள்ளமுந்தான் அவர்களை அப்படி நடக்கச் சொல்கின்றன என்பதையாரும் உணருவதில்லை."

பூட்டியிருந்த மனக்கதவைத் திறந்து உண்மைகளை உள்ளவாறே எடுத்து வெளியில் வைத்தது போலிருந்தன அந்தச் சொற்றொடர்கள். "காற்றில்லாத வீடு, நீரே அகப்படாத பாலைவனம், வாழ இடமளிக்காத நாடு இவை மூன்றும் பெருங்கொடுமைகள் என்று உங்கள் கவிதையிலே எழுதியிருக்கிறீர்கள். இதயம் ஒன்றுபடாத வாழ்க்கை என்னைச் சித்திரவதை செய்தது. உணர்ச்சியில்லாத உறவு தேடாத பொருள்களில் மனமும் ஒன்றல்லவே!"

அவன் சேர்க்க விட்டுப் போன பொருளை அவள் சேர்த்திருந்தாள். முடிவு என்னதான் இருக்கும் என்ற ஆவலோடு மேலே தொடர்ந்தான்.

"தன்னந்தனியாக மனம் விட்டுப் பழக யாருமின்றித் தவித்தேன். அப்போதுதான்

உங்கள் கவிதைப் புத்தகம் என் கைக்குக் கிடைத்தது. பல முறைகள் படித்தேன். படித்தேன் என்று எல்லோரும் எழுதுவது போலத் தவறுதலாக எழுதிவிட்டேன். நான் அவைகளைப் படிக்கவில்லை. ஒவ்வொரு கவிதையும் உயிர்பெற்றுஎன்னோடு பேசின; ஒழிந்த வேளைகளில் தோழனாக உறவாடின. எனக்குத் தெரியாமலே, நீங்களும் உணராமலே மெள்ள மெள்ளக் கவிதைகளைக் காட்டி என் மனதில் புகுந்துவிட்டீர்கள்! பெண்ணின் இதயத்தை எப்போதும் ஒருவர்தானே ஆட்சி செய்ய முடியும்!"

மனதிற்குள்ளாகவே சிரித்துக் கொண்டான். ஏதோ ஒரு பெருமை அவனுக்குக் கர்வத்தை உண்டாக்கியது. காணமற்போன தன் குழந்தை திடீரென எதிரே நின்றால் ஒரு தாய் எப்படிக் கட்டித் தழுவிக் கொள்வாளோ அதேபோல அந்த வார்த்தைகளை அவன் இதயம் அணைத்துக் கொண்டது.

"உங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை 'கடிதம் எழுதி அழை' என்று என்னைக் கேட்டுக் கொண்டது. நாளை என் கணவர் ஊரில் இருக்க மாட்டார். எதிர்பார்த்து ...... ஸ்டேஷனில் காத்திருப்பேன். தவறாது வாருங்கள். ஏமாற்றம் தராதீர்கள்."

கடிதம் முடிந்து விட்டது. கண்கள் மட்டும் அதிலிருந்து விடுபட முடியாமல் தவித்தன. எங்கோ இருந்து, எவளோ ஒருத்தி, எதற்காகவோ அவனை அழைத்திருந்தாள். எத்தனையோ நாட்கள் அவன் பட்ட அவதி அதிலிருந்து அவனைக் குழப்பிற்று.

அழகின் முழு உரிமையுள்ள பெண் குலந்தான அவனுடைய கவிதைகளின் ஊற்று. உவமைகளை அள்ளிக் கொட்டி விதம் விதமான உருவங்களில் அவர்களைக் கற்பனை செய்திருக்கிறான். ஒழிந்த வேளைகளில் அந்த உருவங்கள் அவனோடு உறவாடின. படுத்துக் கண்ணை மூடினால் எதிரே வந்து 'என்னைப் பார்' என அழைக்கும் ஒரு பெண்ணுருவம்; கண்ணயரும் வரையில் மறையாமல் அவன் முன்னேயே நிற்கும். இவ்வாறு கலவுலகத்தில் காதல் நாடகமாடினானே தவிர நினைவுலகைக் கண்திறந்து கூடப் பார்த்ததில்லை. அந்தக் கடிதம் "இதோ அழைப்பு" என வரவேற்றது. ஒருவிதமாக அந்தக் கடிதம் மேஜையில் விழுந்தது. கடிகாரத்தைப் பார்த்தான், எட்டு மணியில் நின்று கொண்டிருந்த சிறிய முள் பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்த பெரிய முள்ளை எட்டிப் பிடிக்க இன்னும் எத்தனை நேரமாகும் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது. ஜன்னல் வழியாக ஒரு கொத்துப் பூக்கள் மலர்ந்து நகைமுகங் காட்டிக்கொண்டிருந்தன. பறித்துப் பையில் போட்டுக் கொண்டு புறப்பட்டான்.

அழுது வடிந்து கொண்டே ரயில் வண்டி ஓடியது. 'தவிர்க்க முடியாத தொல்லை' என மனதைத் தேற்றிக் கொண்டான். எதிரிலே யாரோ

தார். அடுத்த பெஞ்சில் ஒருவன் பாடிக் கொண்டிருந்தான். ஓடும் வண்டி தாளம் போட்டுக் கொண்டிருந்தது. புகைந்து எரிந்துபோன சாம்பலைத் தட்டி விட்டுச் சிகரட்டை ஒரு முறை இழுத்தான்.

* * *

அன்போடும் ஆதரவோடும் தணவனால் கணகாணிக்கப் படாத அவள் முகத்தில் ஏக்கம் படிந்திருந்தது. வாழ்க்கை அளித்த ஏமாற்றமும் ஏக்கத்தோடு கலந்து உருக்கி வார்க்கப்பட்டிருந்தது. படபடப்பும் ஆத்திரமும் நிறைந்து. கை காட்டியையே பார்த்துக் கொண்டிருந்தாள். கை காட்டி

நின்றது. பிளாட்பாரம் காலியா யிருந்தது. "எம்மா யாராவது வர்ராங்களா?" என்று அந் ஸ்டேஷன் மாஸ்டர் கேட்டா "ஆமாம்" என்று சொல்லி, தலையை அசைத்தாள். ஏதோ தன் பழைய அனுபவத்தை நினைத்துச் சிரித்துக்கொண்டே தன் காரியத்தைக் கவனிக்க போனார். சந்தடி ஏதுமில்லா இருந்த பிளாட்பாரத்தில் க சலுங் குழப்பமுங் குடி ஏறின மணி யோசை கேட்டது. கர்வ பிடித்திருந்த அந்தக் கைகாட் டியை யாரோ தலையிலடித்து மட்டந்தட்டினார்கள். ரயிலு தன் உருவத்தைக் காட்டியது பரபரப்புடன் எல்லோரும்



சென்று கொண்டிருந்தனர். அவள் மட்டும் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் உருவத்தைப் பெரிதாக்கிக் கொண்டே வரும்ரயிலை உற்றுப்பார்த்துக் கொண்டே நின்றாள். வண்டி வந்து நின்றது. ஒவ்வொருவராக இறங்கி வந்து கொண்டிருந்தார்கள். அவள் தன் கண்களை மட்டும் அலையவிட்டு அவனைத் தேடிக் கொண்டிருந்தாள்.

பெட்டியை எடுத்துக் கொண்டு அவன் கீழே இறங்கினான். அவளைத் தேடினான். எத்தனையோ பெண்கள் நின்று கொண்டிருந்தனர். ஒருத்திக்காவது அவன் ஒரு 'தேவை' எனப்படவே இல்லை; எந்த அழகிய முகத்திலும் எதிர்பார்க்கும் தோற்றமே காணப்படவில்லை. பேசாமல் வெளியே போகும் வழியை நோக்கி நடந்தான்.

எரிந்த கொண்டிருந்த விளக்கு அயர்ந்து கண்ணைமூட முயற்சி செய்து கொண்டிருந்தது. ஒரு பெண்ணுருவம் அதன் அருகில் நின்றது. அதை நோக்கி நடந்தான். எழிலும் இளமையும் அவன் எதிரே நின்று புன்முறுவல் செய்தன.

கண்களிலேயே அத்தனை இரத்தமும்பாய்ந்து தேங்கிவிட்டதால் வாய் மரத்துப்போய்ப் பேச முடியாமல் தவித்தது! "நீங்கள் தானே ......" என்று இழுத்தாற் போலச் சொல்லி எப்படி முடிப்பது என்று தெரியாமல் அவள் திகைத்தாள். "ஆமாம்" என்பதற் கறிகுறியாகத் தலையை அசைத்தான். இருவரும் ஒன்றுமே பேசாமல் நின்று கொண்டிருந்தார்கள். அயர்ந்திருந்த விளக்கின் கண்கள் தாமாக அவிந்து போயின. காரிருள் சுற்றிலும் கவிந்து கொண்டது. "போகலாமா?" என அழைத்தான். "எங்கே போவது?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டாள். "வீட்டிற்கு" என்று அவன் சொல்லி முடிக்கககூட இல்லை. அதற்குள் "வீட்டிற்கா? வேண்டாம், இங்கேயே இருக்கலாம். விடிந்தவுடன் புறப்படலாம்" என்று சொல்லிக் கீழே உட்கார்ந்தாள். வேறு வழியில்லாமல் அவனும் உட்கார்ந்தான்.

இருவர் முகமும் தெரியாமல் வெகு நேரம் உட்கார்ந்தே இருந்தார்கள். சூரியன் மெள்ளத் தலையை நீட்டி உடலை எப்படி உள்ளே நுழைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தான். தூணில் சாய்ந்து கொண்டிருந்த அவளுடைய உருவம் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. தாய் வீட்டிற்குத் திரும்பும் பெண், வீட்டுக்குள்ளே நுழையும் போது காணப்படும் அத்தனை உணர்ச்சிகளும் அவள் முகத்தில் படிந்திருந்தன. இருள் துளிக்கூட இல்லாமல் ஒளி மறைத்து விட்டது. இருவரும் எழுந்து அங்கிருந்து நடந்தார்கள்.

காலைச் சிற்றுண்டி ஒருவகையாக முடிந்தது. "எங்கே போவது?" என்று முடிவு செய்யாமல் இருவரும் நடந்து கொண்டே இருந்தார்கள். 'இதோ இருப்பிடம்' என்று எதிரில் இருந்த தோட்டம் அழைத்தது. காலை நேரத்திலே உள்ளே நுழைந்த இருவரை

யும் தோட்டக்காரன் ஆச்சரியத்தோடு பார்த்தான். காலியாயிருந்த இடத்தில் தன்னந்தனியே உட்கார்ந்தார்கள்.

"எப்படிப் பேச்சைத் துவக்குவது?" என்று புரியாமல் விழித்தான். உலகத்தை ஏட்டிலேயும் எண்ணத்திலேயும் பார்த்த அவனுக்கு இது ஒரு புது அனுபவமாக இருந்தது. கலைந்திருந்த தலைமயிரைக் கைகளால் ஒதுக்கிச் செம்மைசெய்து கொண்டிருந்தாள் அவள். வளைந்து நெளிந்த வட்டமாகச் சுற்றப்பட்டிருந்த அவள் தலைமயிர் அவனை வசிகரித்தது. முடியில்லா அரசன் போலப் பூவில்லாமல் அது இருந்தது. "தலையில் இருந்த பூக்கீழே விழுந்து விட்டது" என்றான். "பூவா? நான் வாங்குவதே இல்லையே," என்று சொல்லி அவனைப் பார்த்தாள். எதையோ எதிர்பார்த்த அவன் ஏமாற்றமடைந்தான். பைக்குள் கைவிட்டு அதில் சிக்கிய பூவை எடுத்து அவள் கொண்டையில் செருகினான். ஆச்சரியத்தோடு அவன் முகத்தைப் பார்த்தாள். "நான் கொண்டு வந்தேன், வாடி விட்டது" என்று பரிதாபமாகச் சொன்னான். "வாடினால் என்ன?" என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டே பூவைச் சரிசெய்து கொண்டாள்.

இருவருக்கும் என்ன பேசுவது என்று புரியவில்லை. எதிரே இருந்த பூச்செடியில் இருந்த மலர் ஒன்று அப்போதுதான் விரிந்தது. அதைச் சுற்றி ஒரு வண்டு வட்டமிட ஆரம்பித்தது. ஆடாமல் அசையாமல் அந்த மலர், வண்டு எப்போது வந்து தன் ஆவலைத் தீர்க்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. சுற்றிச் சுற்றி வண்டு வட்டமிட்டு வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தது. "புதுக் கவிதை ஏதும் உதயமாகிறதோ?" என்று சொல்லி அவனைப் பார்த்தாள். புன்சிரிப்பு ஒன்று அவன் உதடுகளில் உதயமாயிற்று. முகபாவம் பொல்லாக் குறும்புக்காரி என எடுத்துக் காட்டிற்று. அவன் இதயத்தில் இத்தனை நாழியாக இருந்த அச்சம் அகன்று 'பேசலாம்' என்ற திடம் பெற்றான். "அந்தவண்டு ஒவ்வொரு முறையும் மலரின்மேல் உட்காரும்போது மலருக்கெப்படி இருக்கும்?" என்ற கேள்வியைக் கேட்டு விட்டு விடையை எதிர்பார்த்தான். "வண்டுகளே அப்படித்தான். தேனைத் தான் முக்கியம் என்று நினைக்கும். மலரைப்பற்றிக் கவலைப் படுவதே இல்லை" என்றாள். வெறுப்போடு அவள் கொட்டிய அந்த வார்த்தைகள் சலித்துப் போன அவள் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டின. அந்தக் கடிதம் அவன கண்ணெதிரே தோன்றிற்று. ஏதோ செய்துவிட்டு வண்டு எங்கேயோ பறந்து சென்றது!

முகவுரையை முடித்துவிட்டு விரிவுரையை ஆரம்பித்தாள். பேசிக்கொண்டே போனாள். பள்ளித் தோழிகளுடன் விளையாடிக் களித்த நாட்களை அவள் விவரித்தபோது இப்போது சற்று எழுந்து தன்னோடு அதே மாதிரி விளையாட மாட்டாளா என்று ஏங்கினான். தன்னோடு சிரித்துப் பேசிக்

குதித்து விளையாடிய தன் தோழிகளைப் பற்றி மகிழ்வோடு கூறிக் கொண்டிருந்தாள். அப்படியே அவைகளைத் தன் மனதில் பதிவு செய்துகொண்டே அவன் கேட்டுக் கொண்டிருந்தான். தனிமையில் கிளியேதும் அகப்படாமல் தானே ஒரு கிளியை உருவாக்கி அதோடு கொஞ்சிக் காலங்கழித்த அந்தப்பருவத்தை அவனிடம் வர்ணித்தாள். உண்மையிலேயே ஒரு கிளியின் உடலில் அவள் விரல் பட்டிருந்தால் அதன் உடல் எவ்வாறு சிலிர்க்கும் என்று எண்ணிப் பார்த்து மகிழ்ந்தான். நாணமும் வெட்கமும் கலந்த குரலிலே திருமண ஏற்பாடு பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவனுக்கும் ஏதோ பேசவேண்டும் என்ற எழுச்சி ஏற்பட்டது. "உங்கள் கணவருக்கு என்ன வேலை?" எனக் கேட்டான். உட்கார்ந்திருக்கும் தாயின் மடியில் ஏறி உட்காரக் குழந்தை ஓடி வரும்போது தாய் எழுந்து நடக்க ஆரம்பித்தால் குழந்தையின் முகம் எப்படி மாறுமோ அதேபோல அவள் முகம் மாறிற்று. "தெரியாது." என்று சுருக்கமாகப் பதில் சொன்னாள். "நீங்கள் கேட்கவில்லையா?" எனக் குறுக்குக்கேள்வி போட்டான். ஒன்றும் பதில் சொல்லாமல் மௌனமாகவே இருந்தாள். "போகலாமா?" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள். வேறு வழியில்லாமல் அவனும் எழுந்தான். மணிக்கூண்டுக் கடிகாரம் நாலு மணி என்று உரத்துச் சொல்லிக்கொண்டிருந்தது. உண்மைதான் என்று கதிரவன் தன் கதிர்களால் சொல்லாமற் சொல்லிக் காட்டினான். பசி அப்போதுதான் தான் எங்கேயும் ஓடிப்போய் விடவில்லை எனக் காட்டிக் கொண்டது. இருவரும் எதிரில் இருந்த சிற்றுண்டி விடுதிக்குள் நுழைந்தனர்.

சுவைத்துச் சுவைத்து ஒவ்வொரு தின்பண்டமாகச்சாப்பிட்டாள். ஹோட்டலிலேயே வழக்கமாகச்சாப்பிட்டு வெறுப்படைந்திருந்த அவனுக்கு ஆத்திரமுண்டாகியது. "வீட்டில் செய்தால் இன்னும் நன்றாக இருக்கும்" என்று தன்கருத்தைத் தெரிவித்தான். ஆச்சரியத்தோடு அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவன் முகத்தோற்றம் அவளுக்கு இன்னதென்றே புரியவில்லை.

இருவரும் புறப்பட்டனர். சேர்ந்து நடந்து சென்றார்கள். அவள் பேசிக்கொண்டே இருந்தாள்; அவன் கேட்டுக்கொண்டே நடந்தான். எதிரே அந்தச் சினிமாக் கொட்டகை இருந்தது. "சினிமாவுக்குப் போகலாமா?" எனக்கேட்டான். "எங்கேயும் வரத்தயார்" என்ற பார்வையோடு அவனைப் பார்த்தாள்.

டிக்கட் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள். விளக்குகள் அணைந்தன. காட்சிகள் திரையில் விழத்தொடங்கின. கதாநாயகி படுக்கையில் படுத்துக்கொண்டே பாடிக்கொண்டிருந்தாள். விதவிதமான கோணங்களைக் கையாண்டிருந்தார் படத்தின் டைரக்டர். திரும்பி அவளைப்பார்த்தான். நாற்காலியில் உடலைக் கட்டுப்படுத்தாமல் சாய்ந்திருந்தாள். மூடியி

ருந்த கண்களை அமைதி அணைத்துக்கொண்டிருந்தது. சிவந்த உதடுகளினிடையே ஒரு கோடு போல வெள்ளைப்பற்கள் அந்த இருளிலும் மின்னின. அவள் முகத்தில் ஏதோ ஒரு திருப்தி நிறைந்திருந்தது. தன்னை மறந்து, உலகை மறந்து, அவனையும் மறந்து ஏதோ ஒரு இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருந்தாள். எவளோ ஒருத்தி - இங்கிதந்தெரியாத கணவன் - எப்படியோ பழக்கப்பட்டவன் - இவை மூன்றும் புரியாத கேள்விகளாக மாறி விடை தெரியாமல் அவனை விழிக்க வைத்தன.

•

படம் முடிந்தது. அவளை எழுப்பக் கையைப்பிடித்து ஆட்டினன். விசையை முடுக்கியவுடன் விசிறி தானகச் சுழல்வதுபோல அவன் உடல், மனம், மூளை அத்தனையுஞ் சேர்த்து சுற்ற ஆரம்பித்தன. அவள விழித்துப் பார்த்தாள். எல்லோரும் வெளியேறிக்கொண்டிருந்தனர். விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. இவர்களும அவர்களைப் பின் தொடர்ந்தனர்.

"முடிவு தான் என்ன?" என்று, துடித்துக் கொண்டிருந்த அவன் மனம், அவனைப் பார்த்துக் கேட்டது. ஏதோ ஒன்றை எதிர்பார்த்து அது நடக்காமல் இருந்தால் எப்படியிருக்குமோ அதே நிலை அவனைத் தொல்லைப்படுத்தியது. ரயில்வே ஸ்டேஷனை நோக்கி அவளோடு அவன் கால்களும் போய்க்கொண்டிருந்தன. 'படம் எப்படி?' என்று பரிகாசமாகக் கேட்டான். "மிகவும் நன்ருக இருந்தது" என்ருள். அவள் முகத்தை உற்றுப்பார்த்தான் "இன்பங்கொள்ளை கொள்ளை' என்று பாரதிதாசன் கவிதையின் அடிகளைப் படித்துக் காட்டிக்கொண்டிருந்தன அவள் விழிகள். நடுங்கும் கைகளால் அவள் கையைப்பற்றினன். நடந்துகொண்டே இருந்த அவள நின்ருள. சலனமற்ற பார்வையோடு அவன் முகத்தைக் கவனித்தாள். அவன் கண்கள் கெஞ்சிக் கொண்டிருந்தன. முகம் பரிதாபமாகக் காட்சியளித்தது. போதை ஏறிய அந்த உடல் தன்னைத் தனித்துக் காட்டிக் கொண்டிருந்தது. "சீ! இவ்வளவுதானு?" என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்து ஓடி வந்து வெளியே குதித்தன. வெடுக்கெனக் கையை இழுத்துக் கொண்டாள். வேகமாகத் திரும்பி வந்தவழியே நடந்தாள். எங்கேயோ சென்று மறைந்து போனள்.

•

குழம்பிக்கொண்டே தலையை நிமிர்த்தினன். மேலே பாதி தேய்ந்துபோன நிலா ஒளிவீசிக் கொண்டிருந்தது. பரிதாபமாக அதைப்பார்த்தான். "எப்படி இருந்தாலும் இன்னும் உயரத்திலேதான் இருக்கிறேன". என்று அது சொல்வது போலத்தோன்றிற்று. அமைதி நிறைந்த அந்த இரவில் எங்கேயோ இருந்து "ஒருமனப்பட்டதன்றோ திருமணமாம்" என்ற பாடல் தெளிவாக அவன் காதுகளில் விழுந்தது. அதுவும் ஒரு பெண் குரல்தான். எதிரே "ராதாவின் போர்வாள" என்ற விளம்பரப்பலகை தொங்கிக்கொண்டிருந்தது. கொட்டகைக்குள் நாடகம் நடந்துகொண்டிருந்தது. ★



வள்ளுவர் விருந்து

2. ஏன் வருகிறார்?

திருக்குறள் முனிசாமி

நாயகியின் மனோபாவங்களையும் அவளுடைய இன்ப உள்ளத்தில் தோன்றும் அதி அற்புத எண்ணங்களையும் ஆசிரியர் வள்ளுவர் அழகுற அமைத்துக் காட்டுகின்றார். நாயகனைப் பிரிந்திருக்கும் காலங்களில், நாயகியின் உள்ளம் துன்பமும் கவலையும் கொண்டதாகவே இருக்கின்றது. இன்பத்தென்றல், புயலாக மாறி அவளை அலக்கழிக்கிறது. சில சமயங்களில் நாயகனை நிந்திக்கவும் செய்கின்றாள். குறித்த நாளில் வருவதாகச் சொல்லி வாராமல் போய்விட்டாரே என்று நொந்து கொள்ளுவாள். வருத்தம் உடனே மாறுகிறது. நாயகன் தரும் இன்பத்தை எண்ணி எண்ணிப் பூரித்துப் போவாள். அந்த நாயகனை நினைத்துக் கொண்டிருக்கிற நினைப்பே இன்பத்தில் ஆழ்த்துகிறது என்றும் சொல்லிக் கொள்ளுவாள். ஆழம் அறியமுடியாத அவள் உள்ளக் கடலில் அலைகள் மோதிய வண்ணம் இருக்கின்றன.

இன்ப எண்ணங்களூடே கருத்திற்கு விருந்தும் நகைச்சுவை இன்பத்தையும் இணைத்துக் காட்டி மகிழ்விக்கும் தனி ஆற்றல் ஆசிரியர் வள்ளுவனார்க்கே உண்டு. நாயகனைப் பிரிந்திருக்கும் காலத்தில், நாயகியின் மனோநிலைகளில், ஒரு கட்டம் — நாயகனை நினைத்து மிகுதியும் — வருந்துவதாகும், இதனை "நினைந்து அவர் புலம்பல்" என்ற ஒரு தனிப்பகுதியில் வைத்து விரிவாகப் பேசுகிறார்.

இப்படியாக, நாயகனை நினைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தில் "அவருக்கு வெட்கமில்லாதார்?" என்று கேட்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. இங்ஙனம் அவள் உள்ளம் கேட்ட கேள்வி நாய

கனின் பெருமையினைக் குறைவு படுத்துவதாக இல்லாவிட்டாலும், ஒரு இன்ப ஓட்டத்தைக் காட்டி நாயகியின் மனோ வேதனையை அறிந்து கொள்ளாமல் இருக்கின்றானே என்பது குறிப்பிடச் சொல்லுகிறது. எப்படியிருந்தாலும் இந்தக் கேள்விக்குத் தக்க காரணம் இருக்கத்தான் வேண்டும். பார்ப்போம்.

பிரிந்திருக்கும் நாயகனைப் பற்றியும், அவன் இன்பப் பேச்சுக்களையும், தந்த சுகத்தினையும்... ஆக இவைகளையே நாயகி நினைத்த வண்ணமாக இருக்கின்றாள். அப்படி இருப்பதில் அவளுக்கு மன நிம்மதியும் மகிழ்ச்சியும் இருக்கிறது என்றும் உணருகின்றாள். இப்படியாக, ஒரு நிமிஷம் கூட நாயகனை நினைக்காமல் இருக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டாள். நினைப்பு வலுக்க வலுக்க நாயகன் தன்னுடைய உள்ளத்திலேயே இருந்து கொண்டு இருப்பது போலவே அவள் அனுபவிக்கின்றாள். ஆனால், உண்மையில் நாயகனோ பிரிந்து இருக்கின்றான். தன்னுள்ளத்திற்கு வந்து வந்து போய்க் கொண்டிருக்கின்றார் என்றும் கூறுகின்றாள். அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றானாம்; "ஓவா வரல்" என்ற சொற்களால் ஆசிரியர் இதனைப் புலப்படுத்துகிறார்.

நேரில் நாயகனைப் பார்க்க முடியவில்லை தான். ஆனால் நெஞ்சத்திற்கு மட்டும் அடிக்கடி வந்த வண்ணம் இருக்கின்றானாம்; "எம் நெஞ்சத்து ஓவா வரல்" என்று நயமாகக் கூறுகின்றாள் நாயகி. அதாவது, நாயகனை எந்த நேரமும் நினைத்துக் கொண்டே இருக்கின்றாள் என்பது தான் கருத்து.

இங்ஙனம் அவனைப் பற்றியே "இன்பம், இன்பம்" என்று நினைத்துக் கொண்டிருக்கிற அவளுக்கு இன்ப வேதனை அதிகப்பட்டுக்கொண்டே போதல் இயல்பு தான். ஆனால் ஒன்றுமட்டும் அவள் நன்றாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. நாயகன் மட்டும் தன்னைப்பற்றி நினைப்பதே யில்லையென்பது தான் அது.

நாயகன் தன்னைப் பற்றி நினைப்பதில்லை என்ற கருத்தினை, நாயகியை அவன் தன்னுடைய உள்ளத்தில் புகுவதற்கு விடமாட்டேன் என்கின்றான் என்ற மாதிரியில் குறிக்கின்றாள். "தன்னுடைய (நாயகனுடைய) நெஞ்சத்தில் நாயகி வாராமல் காவல் புரிந்து கொண்டிருக்கின்றார்" என்று தெளிவாகவே கூறி விடுகின்றாள்; "தன் நெஞ்சத்து எம்மைக் கடி கொண்டார்" என்கிற இனிய குறளடிச் சொற்கள் அவள் உள்ளத்தைத் திறந்து காட்டி விடுகின்றன. ஆனால், நாயகனோ, தன்னுடைய (நாயகியினுடைய) நெஞ்சத்தில் அடிக்கடி வந்து புகுந்து கொள்ளுகின்றானும்; அதனால் தான் அவள் மிகவும் வேதனைப்பட நேரிடுகிறதாம். இது நியாயமாகுமா என்று தான் அவள் கேட்கின்றாள்.

"நாயகன் மட்டும், நாயகியைத் தன் நெஞ்சினுள் புகாதவாறு பாதுகாத்துக் கொண்டு தான் மட்டும் நாயகியின் உள்ளத்தில் ஏன் அடிக்கடி வருதல் வேண்டும்" என்பது தான் நாயகிக்கு ஏற்பட்ட வருத்தத்தின் குறிப்பு, அது

யும் எப்படி வருகின்றானும்? நீங்காமல் அடிக்கடி வந்து கொண்டே இருக்கின்றானும்.

பகைவனைப் பார்த்து "நீ என் வீட்டிற்குள் நுழையாதே" என்று சொல்லிய ஒருவன், தான் மட்டும் அவன் வீட்டிற்கு அடிக்கடி போவதென்றால் முறையாகுமா? இப்படியான நிலையில் நாயகி தன்னைக் கொண்டு வந்து நிறுத்தி, இப்படிச் செய்வது அவருக்கு வெட்கமில்லையா என்றும் கேட்டு விடுகின்றாள். அவனைத் தடுத்துவிட்டு, அவள் உள்ளத்திற்குத் தான் மட்டும் போய் வருதல் வெட்கங்கெட்ட செய்கை தானே! ஆம் என்று, நாமும் நாயகியுடன் ஒத்துப் போக வேண்டியது தான். கற்புநிறைந்த அந்த நாயகி, நாயகனையே எந்த நேரத்திலும் நினைத்த வண்ணமாக இருக்கின்றார் என்கிற பெருங்குணத்தினை நயமாக ஆசிரியர் அமைத்து இன்ப உள்ளத்தின் ஆழத்தினையும் ஒருவாறு தொட்டுக் காண்பித்து விடுகிறார்;

தன் நெஞ்சத்து எம்மைக்
கடிகொண்டார் நாணார் கொல்?
என் நெஞ்சத்து ஓவா வரல்—

[தன் நெஞ்சத்து—தன்னுடைய (நாயகனுடைய) மனதிற்குள், எம்மை—தன்னை (நாயகியை), கடிகொண்டார் — வாராமல் தடுத்துக் கொண்டிருப்பவர், என் நெஞ்சத்து—என்னுடைய (நாயகியினுடைய) நெஞ்சத்து—மனதிற்குள் மட்டும், ஓவா வரல்—அடிக்கடி வந்து கொண்டிருத்தல் (ஏனோ?)—இவ்வாறு செய்வதற்கு—நாணார் கொல்!—அவருக்கு வெட்கமில்லையா?]



நடந்த கதை:

வாழ்க்கையில் பல சோதனைகளுக்கு ஆளான சந்திரமோகன், தன் கடைசி காலத்தில் தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் நோக்கி "கண் திறக்குமா?" என்ற கேள்வியுடன் தன் 'கதை'யைச் சொல்கிறான்.

சட்டப் பரீட்சையில் தேறிய சந்திரமோகன், பாரிஸ்டர் பரந்தாமனிடம் தொழிற்பயிற்சி பெறுகிறான். இந்தச் சமயத்தில், ரௌலட் சட்டத்தை எதிர்த்துக் காந்தி மகாத்மா கைதியானார் என்பதற்காகத் தேசமெங்கும் அவருடைய விடுதலையைக் கோரிக் கிளர்ச்சி செய்யப்படுகிறது. பாரிஸ்டர் பரந்தாமன், காந்திஜி கைதியானதற்காகப் பரம சந்தோஷப்படுகிறார். சந்திரமோகனுக்கு இது பிடிக்கவில்லை. அவன் அந்தக் கிளர்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டதன் பயனாகப் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறான் அங்கே தன்னைப் போலவே சிகிச்சை பெறுவதற்காக வந்திருந்த பாஸ்கரன் என்னும் தன் பள்ளித் தோழன் ஒருவனைக் கண்டு சந்திரமோகன் ஆறுதலடைகிறான்.

சந்திரமோகனைப் பார்ப்பதற்காக ஆஸ்பத்திரிக்கு வந்திருந்த தாயாரும் தங்கை பரிமளாவும் சர்க்காரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்துவிடுமாறு அவனிடம் மன்றாடுகின்றனர் அவன் அதற்கு மறுதளிக்கிறான். ஒருநாள் பாரிஸ்டர் பரந்தாமனின் ஏக புதல்வி சாந்தினி, எதிர் பாராத விதமாக அவனை ஆஸ்பத்திரியில சந்தித்து "என்னை மறவாதீர்!" என்று கேட்டுக்கொள்கிறாள்.

இதற்கு மத்தியில் மகனைப் பிரிந்த தாயார் இயற்கை எய்துகிறாள். தன்னந்தனியளான பரிமளாவுக்குச் சாந்தினி ஆறுதல் கூறுகிறாள். தஞ்சையிலிருந்து வந்திருந்த பரிமளாவின் மாமா அவளைத் தம்முடன் அழைத்துச் செல்கிறார். தன் அண்ணனின் செய்கையில் வெறுப்புக் கொண்ட பரிமளா, தாயார் இறந்ததைப் பற்றி மட்டும்தான் அவனுக்குத் தெரிவித்தாளே தவிர, தான் தஞ்சைக்குச் சென்றுவிட்டதைப்பற்றித் தெரிவிக்கவில்லை.

விஷயம் தெரியாத சந்திரமோகன் விடுதலையடைந்ததும் நேரே சென்னைக்கு வருகிறான். தன் வீட்டில் வேறு யாரோ குடியிருப்பதைக் கண்டு அவன் திகைக்கிறான் இந்தச் சமயத்தில் அவன் வீட்டு வேலைக்காரியாயிருந்த விசாலம் அவனைச் சந்தித்து, விஷயம் அனைத்தையும் எடுத்துக் கூறுகிறாள். ஆனாலும் அன்றே

பொருளாதார நிலை இடம் கொடுக்கவில்லை. ஆகவே ஒன்றும் புரியாமல் அன்றிரவைப் பாரிஸ்டர் பரந்தாமன் வீட்டில் கழிக்கலாம் என்ற உத்தேசத்துடன் அவருடைய வீட்டை நோக்கி அவன் நடக்கிறான். அங்கே அவனுக்கென்று ஓர் அதிசயம் காத்திருக்கிறது. ஏகாதிபத்திய பக்தரான பாரிஸ்டர் பரந்தாமன், அசல் காந்தி பக்தராகக் காட்சியளிக்கிறார்!

அன்றிரவு சந்திரமோகன் படுத்துக் கொண்டிருந்த அறைக்குள் சாந்தினி ஒரு கடிதத்தை விட்டெறிந்து விட்டுப் போகிறாள். அந்தக் கடிதத்தில் 'நாளை மாலை என்னை ஜெனரல் ஆஸ்பத்திரி வாயிலண்டை வந்து பார்க்கவும்' என்று கண்டிருக்கிறது. அதன்படி மறு நாள் மாலை இருவரும் சந்திக்கின்றனர். அங்கே, பரிமளா தன் மாமாவின் மகனான சிவகுமாரனால் விரஸமாக நடத்தப்படுகிறாள் என்ற [illegible] வாயிலாக சந்திரமோகனின் காதில் விழுகிறது. அதற்கு மேல் ஒரு நிமிஷம் கூட அவனால் தாமதிக்க முடியவில்லை. சாந்தினியின் உதவியைக் கொண்டு அவன் உடனே தஞ்சைக்குச் செல்கிறான். வழியில் சிவகுமாரனால் வஞ்சிக்கப்பட்ட செங்கமலத்திற்கு அவன் ஒரு சிறு உதவி செய்ய நேருகிறது. அப்பொழுதுதான் ஈன்றெடுத்த சின்னஞ்சிறு சிசுவுடன் அவள் காட்சியளிக்கிறாள். செங்கமலத்துக்காக இரங்கிய சந்திரமோகன் அவளையும் அவள் தாயாரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு தன் மாமாவின் கிராமமான செய்யாமங்கலத்துக்குச் செல்கிறான். அங்கே பரிமளாவைக் காணவில்லை. அவன் நினைத்தபடி சிவகுமாரனிடம் செங்கமலத்தைச் சேர்க்கும் முயற்சியிலும் அவனுக்குத் தோல்வியே ஏற்படுகிறது. ஆகவே வேறு வழியின்றி அவன் அவர்களுடன் சென்னைக்குத் திரும்புகிறான்.

பதினோராம் அத்தியாயம்
- அவள் சொன்ன கதை -

அந்த வண்டியில் நாங்கள் அடுத்தடுத்து உட்கார்ந்திருந்தாலும் எங்களுக்கு ஏனோ ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதற்கே என்னவோ போலிருந்தது. ஆகவே, ஒருவரும் பேசவில்லை. செங்கமலத்தின் தாயார் தலையில் கைவைத்துக் கொண்டு பேசாமல் உட்கார்ந்து விட்டாள். அவள் மனம் என்னவெல்லாம் எண்ணிற்றோ என்னவோ, எனக்குத் தெரியாது — அடிக்கடி அவள் பெருமூச்சு விடும் சத்தம் மட்டும் என் காதில் லேசாக விழுந்து கொண்டிருந்தது. செங்கமலமோ தன் சின்னஞ்சிறு சிசுவை மடியில் கிடத்தி விட்டு, மேலாக்கை இழுத்து முகத்தை மூடிக்கொண்டு விக்கி விக்கி அழுதாள். பாவம், யார்தான் என்ன சொல்லி அவளைத் தேற்ற முடியும்?

அந்த நாளில் அவன் அவளுக்கு என்னவெல்லாமோ ஆறுதல் சொல்லியிருப்பான்; ஆசை வார்த்தை காட்டி மோச வலை விசியிருப்பான்; இனிக்க இனிக்கப் பேசி அவளை இனந் தெரியாத இன்ப உலகத்துக்கு இழுத்துச் சென்றிருப்பான்; சிரிக்கச் சிரிக்கப் பேசி அவள் சிந்தைகுளிரச் செய்திருப்பான்; தலையை வருடியும், தழுவிப் பிடித்தும், கரந் தொட்டும், கன்னத்தைக் கிள்ளியும்,

இதழோடு இதழ் பொருத்திச் சுவைத்தும் அவள் தன்னையே மறந்து விடும்படிச் செய்திருப்பான்!-இந்த நிலையில் பேதைப் பெண் தன் செய்கையால் விளையப்போகும் பிற்கால விளைவுகளைப்பற்றி எப்படி எண்ணிப் பார்த்திருக்க முடியும?

இத்தனைக்கும் அவள் செய்த குற்றந்தான் என்ன?-இயற்கை சதி செய்தது; இன்பத்தைத் தேடி யலையும் பருவத்தை அவள் எய்தினாள். யாரோ ஒருவன் அவளைத் தேடி வந்தான். வஞ்சக நோக்கத்தோடு அவன வந்தான் என்பதை அவள் அறியவில்லை; தன்னை வாழ்விக்கவே வந்தான் என்று நினைத்தாள். அவ்வளவுதான; அவனிடம் தன்னை ஒப்படைத்து விட்டாள்! - கொடி, கொம்பை நாடுவதுபோல என்றைக்காவது ஒரு நாள் அவள் எவனாவது ஒருவனை நாட வேண்டியவள் தானே?

சமுதாய வழக்கத்தை யொட்டி அவளைக் கட்டிக் காத்து வளர்த்து, கடைசியில் அவளுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ - தனக்குப் பிடித்த எவனோடாவது 'கல்யாணம்' என்ற பெயரால் வழி கூட்டி அனுப்புவதற்கு வேண்டிய வசதியையும் அவள் தாயார் பெற்றிருக்கவில்லை. வயிற்றுப் பிரச்னையைச் சரிவரத் தீர்த்துக் கொள்வதற்கே அவர்கள் வழியில்லாமல் இருந்தபோது, வாழ்வுப் பிரச்னையைப் பற்றிக் கனவாவது கண்டிருக்க முடியுமா?

செங்கமலம் செய்த 'செய்யத் தகாத குற்ற'த்திற்காக இன்று அவள் தாயார் அவளை இடித்துக் காட்டுகிறாள். அவளைப் பின்பற்றி இன்னும் எத்தனையோ பேர் செங்கமலத்தை இடித்துக் காட்டலாம். ஆனால் அவர்களுக்கும் செங்கமலத்துக்கு ஏற்பட்ட சோதனை ஏற்பட்டிருந்தால்......?

முடிவு வேறு விதமாயிருந்திருக்குமென்று எப்படிச் சொல்லமுடியும்? அந்தச் சோதனையில் அவர்கள் வெற்றியடைந்திருப்பார்களோ, அல்லது செங்கமலத்தைப் போல் தோல்விதான் அடைந்திருப்பார்களோ, யார் கண்டார்கள்?

ஒருவேளை அவரவர்களை நாடி வந்த காதலன், நிஜமாகவே காதலனாயிருந்திருந்தால், அவர்கள் தங்கள் வாழ்க்கை நெடுகிலும் பெற்றோரைப் பலவந்தமாகப் பிரிந்து வந்த துன்பத்தைக் கூட ஒருவாறு சகித்துக் கொண்டு இன்பத்தைத் தொடர்ந்து நுகர்ந்திருக்கலாம். அவன் சிவகுமாரனைப் போல் சாதகனாயிருந்திருந்தால்...?

இன்பம் துன்பமாகத்தானே மாறும்?

இப்படி நான் என்னவெல்லாமோ எண்ணிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, "சாமி, சாமி!" என்று இரைந்து கூப்பிடும் சத்தமும், அடிக்கடி கை தட்டும் சத்தமும் எங்கிருந்தோ காற்றில் மிதந்து வந்து என் காதில் விழுந்தது. சுற்று முற்றும் பார்த்தேன். கண்ணுக் கெட்டிய தூரத்தில் எங்கள் வண்டியை நோக்கி ஒருவன் ஓடி வந்து கொண்டிருந்தான். நான் வண்டியைச் சற்று நிறுத்தச்

சொல்லிவிட்டு, அவனை ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன்.

"மிராசுதார் ஐயா இந்தத் தந்தியை உங்கக்கிட்டே கொடுக்கச் சொன்னாருங்கோ!" என்று சொல்லிக்கொண்டே, அவன் என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். நடுங்கும் கைகளுடன் நான் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன்:

"கவலை வேண்டாம்; பரிமளா இங்கு வந்து சேர்ந்து விட்டாள்!" சாந்தினி என்று அந்தத் தந்தியில் கண்டிருந்தது!

எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தில் ஒரு ரூபாயை எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டு, வண்டியை ஓட்டச் சொன்னேன்.

* *

செங்கமலம்தான் 'செய்யத்தகாத குற்ற'த்தைச் செய்தாள் என்றால், அவளுடைய தாயாரும் அன்று மாலை நாங்கள் ரயிலில் ஏறி உட்கார்ந்ததும் ஒரு 'செய்யத்தகாத குற்ற'த்தைச் செய்தாள். என்னை நோக்கி, "நீங்கள் வித்தியாசமாக நினைத்துக் கொள்ளக்கூடாது; வேறு வழியில்லை! ஊர் வாயை மூடுவதற்காகவே இப்படிச் செய்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே, அவள் அத்தனை நேரமும் தன் மடியில் ரகசியமாகத் தயாரித்து வைத்திருந்த தாலியை மெல்ல எடுத்தாள். சுற்றுமுற்றும் ஒரு முறை அச்சம் நிறைந்த கண்களுடன் பார்த்தாள். நல்லவேளையாக யாருடைய பார்வையும் அவள் மீது திரும்பவில்லை. அதற்குள் என்ன காரணத்தினாலோ கலங்கிய கண்களை ஒரு முறை துடைத்து விட்டுக் கொண்டாள். கடைசியில் அவள் தன்னையே சிவகுமாரனாகப் பாவித்துக் கொண்டோ என்னவோ, செங்கமலத்தின் கழுத்தில் தாலியைக் கட்டி விட்டாள்!

அப்பொழுது செங்கமலத்தின் முகத்தில் பிரதிபலித்த வேதனையை என்னால் பார்த்துச் சகிக்க முடியவில்லை. ஒரு கணம் கண்ணை மூடித் திறந்தேன். செங்கமலம் 'குபீர்' என்று வாய்விட்டு அழுது விட்டாள்.

அவளுடைய கன்னத்தில் 'நக்'கென்று ஓர் இடி இடித்து, "என் மானத்தை வாங்காதேடி, என்னைச் சந்தியில் இழுத்து வைக்காதேடி!" என்றாள் அவள் தாயார்.

என்னால் பொறுக்க முடியவில்லை. "அம்மா! இவ்வளவு பெரிய உலகத்தில் நீங்கள் ஒரே ஒருவர்தான் அந்த ஜீவனிடத்தில் அன்பு காட்டுவதற்கு இருக்கிறீர்கள். நீங்களும் இப்படி வெறுத்தால் அவள் எங்குதான் போகிறது?" என்றேன்.

"எமலோகத்துக்குப் போகிறது!" என்று அவள் தன் பழைய பல்லவியைத் திருப்பிப் பாடினாள்.

"போகிறேன் அம்மா, போகிறேன்; கட்டாயம் போகிறேன். இனிமேல் இந்த உலகத்தில் நான் இருந்துதான் என்ன

பிரயோசனம்? இந்தக் குழந்தையை மட்டும் தயவு செய்து எடுத்துக் கொள்; உன்னால் முடியாவிட்டால் இதை வேறு யாரிடமாவது கொடுத்து வளர்த்துக் கொள்ளச் சொல். எனக்காக - எத்தனையோ கஷ்ட நஷ்டங்களுக்கிடையே என்னை வளர்த்ததற்காக — இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்துக் கொள். இருள் கவியட்டும்; இரயிலும் ஓடட்டும். பகவான்மீது பாரத்தைப் போட்டுவிட்டு நான் ஓடுகிற ரயிலிலிருந்து கீழே குதித்து விடுகிறேன். 'எதிர்பாராத விதமாக நேர்ந்த மரணம்' என்று உலகம் சொல்லிக் கொள்ளட்டும்; உன்னுடைய கவலையும் ஒருவாறு தீரட்டும்!" என்று சொல்லிக்கொண்டே, செங்கமலம் குழந்தையைத் தாயாரிடம் நீட்டினாள்.

"என் விழுகிறவள் குழந்தையோடுதான் விழுந்து தொலையேன்!" என்றாள் தாயார்.

நடுவில் நான் குறுக்கிட்டு, "இதென்ன, ஏன் இப்படி உங்கள் மனதைச் சிதற விடுகிறீர்கள்? மானமாவது மண்ணாங்கட்டியாவது! இதெல்லாம் நாமாகப் பார்த்து வரவழைத்துக் கொள்வதுதானே? இன்னொரு விஷயத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும். இந்த உலகத்தில் யாரும் விரும்பிய விதமே வாழவேண்டுமானால், மானத்தையும் மண்ணாங்கட்டியையும் கட்டிக்கொண்டு அழுதால் சரிப்பட்டு வராது!" என்றேன்.

"நீங்கள் சொல்வதற்கென்ன? இந்நேரம் இவளுடைய கழுத்தில் தாலி இருந்திராவிட்டால் இவளை எத்தனை பேர் சந்தேகக்கண் கொண்டு பார்த்து, எப்படி எப்படியெல்லாம் வம்பளந்திருப்பார்கள், தெரியுமா?'

"அவர்களுடைய வாயில்தான் நீங்கள் மண்ணைப் போட்டுவிட்டீர்களே! இனிமேல் செங்கமலம் என்னவேணுமானாலும் செய்யலாமோ, இல்லையோ?" என்றேன் நான் லேசாகச் சிரித்துக்கொண்டே.

"என்னத்தைச் செய்வது, போங்கள்! இத்துடன் போயிற்றா? இவளுடைய கழுத்தில் தாலியைப் பார்த்த பிறகும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சும்மாயிருக்கப் போகிறார்களா? அவர்களுக்கு இந்த விஷயத்தில் அது என்னதான் அக்கறையிருக்குமோ, என்னவோ 'இவளுடைய புருஷன் எங்கே இருக்கிறான்? என்ன வேலையில் இருக்கிறான்? என்ன சம்பாதிக்கிறான்? எப்பொழுது வருவான்? நீங்கள் எப்படிச் சாப்பிடுகிறீர்கள்?' என்றெல்லாம் குறுக்கு விசாரணை செய்து தொலைப்பார்கள். நமக்கு வரும் ஆத்திரத்தில், 'அவன் எங்கேயோ போய்த் தொலைந்தான்!' என்றால், 'இவள் ஏதோ முறை தவறி நடந்திருக்கிறாள், அதுதான் இவளை அவன் தட்டிக் கழித்துவிட்டுச் சென்றிருக்கிறான்!' என்று தங்களுக்குள் எல்லாம் தெரிந்தவர்களைப் போலக் 'குசு குசு' வென்று பேசிக் கொள்வார்கள்! இதெல்லாம் காதில்

விழும்போது நம் மனம் என்ன பாடுபடும்? அதற்குத்தான் நான் நினைத்தேன்..........." என்று கூறி, அவள் மேலே சொல்வதற்குச் சற்றுத்தயங்கினாள்.

"என்ன நினைத்தீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"எங்களை மோசம் செய்த உலகத்தை நாங்களும் மோசம் செய்யப் பார்த்தோம்........"

அதற்குள் செங்கமலம் குறுக்கிட்டு, "தயவு செய்து அதில் என்னைச் சேர்த்துக் கொள்ளாதே, அம்மா!" என்றாள்.

"போடி, போ! இப்படிச் சொல்வதற்கு உனக்கு வெட்கமாயில்லை? இப்போது கற்பைக் கட்டிக் காக்கப் பார்க்கும் நீ, அப்போது கட்டிக் காத்திருந்தால் தேவலை!" என்றாள் தாயார்.

"என்ன விஷயம்? ஏன் இப்படி ஒருவர்மேல் ஒருவர் அனாவசியமாக எரிந்து விழுகிறீர்கள்?" என்றேன் நான்.

"சரி, என்னை மோசம் செய்த உலகத்தை நானும் மோசம் செய்யப் பார்த்தேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன் — நடுவில் நீங்கள் குறுக்கிட்டு ..."

"என்ன! நானா குறுக்கிட்டேன்?"

"ஆமாம், இவர்களுடைய அன்பில் விளைந்த அமுதம் - இல்லை, சனியன் இருக்கிறதே, இதைக்கொண்டு போய் அந்த நாசகாரன் வீட்டில் போட்டு விட்டு வந்துவிடுவதென்று நான் இருந்தேன். அதனால் என் உயிரே போவதாயிருந்தாலும் அதற்கு நான் துணிந்திருந்தேன். இதை அவன் தலையில் கட்டிவிட்டால் இவளைப் பிடித்த பீடை விட்ட மாதிரி! அப்புறம் உலகத்தார் முன்னிலையில் இவள் அசல் கன்னிப் பெண்ணாகக் காட்சியளிக்கலாம், கல்யாணமும் செய்து கொள்ளலாமல்லவா?"

"அதற்கு நான்தான் தடையாயிருந்தேனாக்கும்!"

"ஒரேயடியாய் அப்படிச் சொல்லி விடுவதற்கும் இல்லை. முதலில் இந்தப் 'பதிவிரதை' அதற்கு ஒத்து வரவில்லையே! காதல் என்பது மலரைப் போன்றதாம, அது ஒரே ஒரு முறைதான் மலருமாம்! - இப்படியெல்லாம் என்ன வெல்லாமோ சொல்லிக் கதைக்கிருள்!"

"உங்கள் வாழ்க்கை இலக்கிய ரசனை மிகுந்ததாயிருக்கிறதே! செங்கமலம் என்ன படித்திருக்கிருள்?"

"பள்ளிக்கூடத்தில் எட்டாம் வகுப்பு வரைதான் படித்தாள். வீட்டில் கண்டதையெல்லாம் படித்துப் பண்டிதையாகி விட்டாள்!"

"மேற்கொண்டு இன்னும் கொஞ்சம் படித்திருந்தால், அவள் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளக் கூடிய

சக்தியைப் பெற்றிருப்பாளல்லவா!"

"அப்படித்தான் நினைத்திருந்தேன். அதற்குள் அவர் காலேஜை விட்டுப் போய் விட்டார்!"

"அவர் போகும்போது உங்களுக்கென்று ஒன்றும் வைத்து விட்டுப் போகவில்லையா!"

"எல்லாம் வைத்திருந்தார். எனக்குத்தான் ஒன்றும் கிடைக்கவில்லை!"

"ஏன்?"

"அது பெரிய கதை!"

"அதைத்தான் எனக்குக் கொஞ்சம் சொல்லுங்களேன்!"

"பாழும்சட்டம் இருக்கிறதே அது சிவகுமாரனைப்போல் எங்களை மோசம் செய்துவிட்டது!"

"என்ன! சட்டமாவது, உங்களை மோசம் செய்யவாவது!"

"ஆமாம், சட்டம் தான் என்ன செய்யும்? ஜாதி வேறு வெவ்வேறாக இருந்து விட்டதே!"

"ஏன், நீங்கள் கலப்பு மணம் செய்து கொண்டீர்களா?"

"அந்த வெட்கக் கேட்டை ஏன் கேட்கிறீர்கள்? இவள், இப்பொழுது கதைக்கிறாளே என்னமோ காதல் கீதல் என்று - அந்த எழவெடுத்த காதலுக்கு நானும் என் இளம் பிராயத்தில் பலியானேன். இவளுடைய அப்பா அப்போது என் அக்காவின் குழந்தைகளுக்கு 'ட்யூஷன்' சொல்லிக் கொடுப்பதற்காக எங்கள் வீட்டுக்கு வருவார். அவர் வரும்போதெல்லாம் என்னை ஒரு தினுசாகப் பார்ப்பார்; நானும் அவரை ஒரு தினுசாகப் பார்ப்பேன். காதல் உதயமாயிற்று. இதில் வேடிக்கை என்ன தெரியுமா? அவருக்கு ஏற்கனவே கல்யாணமாகியிருந்தது. ஆனால், அது காதல் கல்யாணமில்லையாம் - அவரே தான் சொன்னார் இந்த விஷயத்தை எனக்கு! - அப்புறம், எப்படியோ நான் அவருக்கே தெரியாமல் அவருடைய உள்ளத்தைத் திருடிக்கொண்டு விட்டேனாம்! அதைக்காணாமல் அவர் 'தேடு, தேடு' என்று தேடும்போது அது என்னிடம்தான் இருந்ததாம்! ஆகவே, 'நீ என்னைக் கல்யாணம் செய்து கொண்டால்தான் ஆச்சு; இல்லையென்றால் பிராணனை விட்டு விடுவேன்!' என்று அவர் என்னைப் பயமுறுத்தினார். ஏனோ தெரியவில்லை, எனக்கும் அந்த மனிதரைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற ஆசை எழுந்தது. ஆனால், அதில் இன்னொரு சங்கடமும் இருந்தது. அவர் ஒரு ஜாதி; நான் ஒரு ஜாதி.........!"

"ஹூம்........ ஜாதியாவது, ஒண்ணாவது!"

"சுலபமாய்ச் சொல்லி விடலாம், ஐயா! அதனால் பின்னால் நேர்ந்த சங்கடம் தான் எங்

களை இன்று இந்தக் கதிக்குக் கொண்டு வந்து விட்டது.''

"சரி, அவர் என்ன ஜாதி, நீங்கள் என்ன ஜாதி?'' என்று நான் சிரித்துக்கொண்டே கேட்டேன்.

"அவர் பிராமணர்; நான் சூத்திரச்சி!''

"இது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?''

"தலைமுறை தலைமுறையாகப் பிறர் சொல்லித்தான் தெரிந்தது!''

"அவர்கள் உங்களைப் 'பிராமணத்தி' என்றும், அவரைச் 'சூத்திரன்' என்றும் சொல்லவில்லையா!''

"வேடிக்கைக்கு இதுவா சமயம்? கதையைக் கேளுங்கள். கடைசியில் நாங்கள் எங்கள் உற்றாரை மறந்து, பெற்றோரை மறந்து ஒரு கோயிலுக்குச் சென்று முறைப்படி கல்யாணம் செய்து கொண்டோம். வாழ்க்கை என்னவோ ஆனந்தமாகத்தான் இருந்தது. சிவகுமாரனைப் போல் இவள் பிறந்ததும் அவர் என்னைக் கைவிட்டு விடவில்லை. கண்ணும் கருத்துமாய்த்தான் என்னையும் இவளையும் காப்பாற்றி வந்தார். கடைசியில், பாழும் எமன் இன்னும் கொஞ்ச நாளைக்கு அவரை என்னிடம் விட்டு வைக்காமல் கொண்டு போய்விட்டான்!'' என்று சொல்லி, அவள் தன் கண்களைக் கைகளால் கசக்கி விட்டுக் கொண்டாள்.

"அப்புறம் என்ன நடந்தது?'' என்றேன் நான்.

"அவர் இரண்டு பெண்டாட்டிக்காரர் அல்லவா? இறந்த பிறகு அவருடைய சொத்தைப் பகிர்ந்து கொள்வதில் எங்களுக்குள் தகராறு ஏற்பட்டது.''

"கடைசியில் என்ன ஆயிற்று?''

"இருவரும் கோர்ட்டுக்குப் போனோம். வழக்கு வளர்ந்தது. தீர்ப்பு என்ன தெரியுமா?''

"அதைத்தானே கேட்கிறேன்!''

"சூத்திரன் ஒரு பிராமணப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு அவன் இறந்து விட்டால், அவனுடைய சொத்தில் அந்தப் பெண்ணுக்குப் பங்கு பெற உரிமையுண்டாம்; பிராமணன் ஒரு சூத்திரப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு அவன் இறந்து விட்டால் அவனுடைய சொத்தில் பங்கு பெற அந்தப் பெண்ணுக்கு உரிமை யில்லையாம்! இதுதான் 'இந்து லா'வாமே! அதன்படி தீர்ப்பு ஆயிற்று!''

"ஓஹோ!''

"என்ன 'ஓஹோ!'-உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் சட்டம் படித்தவர் என்று கேள்விப்பட்டேனே!''

நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை. சிரித்துவிட்டுப் பேசாமல் இருந்தேன்.

"அதனுல்தான நாங்கள் இந்தக் கதிக்கு ஆளானேம்! இல்லையென்ருல் நாங்கள் என் உங்கள் அருமை மாமாவைத் தஞ்சமடைந் திருக்கப் போகிறேம்?" என்ருள் அவள்.

நேரம் ஆக ஆக, எங்கள் உள்ளங்களைக் கவ்வியிருந்த இருள் கொஞ்சம், கொஞ்சமாக விலகியது. அதன் பயனுக, நாங்கள் எங்களுக்குச் சம்பந்த மில்லாத வெவ்வேறு விஷயங் களைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டு வந்தோம். கடைசி யில் உலக வாழ்க்கையிலேயே விரக்தி யடைந்திருந்த செங்க மலமும், அவள் தாயாரும் கூட வாழத் துணிந்து விட்டார்கள் என்ருல் பார்த்துக் கொள்ளுங் களேன்!

பொழுது புலர்வதற்கும், எங்களை ஏற்றிக் கொண்டுவந்த ரயில் சென்னை எழும்பூர் ஸ்டே ஷனை அடைவதற்கும் சரியா யிருந்தது.

நான் முதலில் இறங்கினேன். என்ன அதிசயம் இது! எங்கிருந்தோ பாஸ்கரன் ஓடோடியும் வந்து என் கை யைப் பிடித்துக் குலுக்கி, "ஹெல்லோ சந்தர்! எங்கிருந்து வருகிறீர்கள்!" என்று விசாரித் தான்.

எனக்குச் சிரிப்பு வந்தது. "ஹெல்லோ என்னப்பா, ஹெல் லோ! நீங்கள் தான் இங்கிலிஷ் காரனை இந்தியாவிலிருந்து விரட்டப் போகிறீர்களோ!" என்றேன்.

"அதிருக்கட்டும், இவர்க ளெல்லாம் யார்?" என்று கேட்டவன் செங்கமலத்தின் தாயார் முகத்தைப் பார்த்த தும், "சித்தி...!" என்று பொங்கி வந்த உணர்ச்சியில் கத்தி விட்டான்!

"என்னடா, பாஸ்கர்! சௌக் கியமா?" என்ருள் செங்கமலத் தின தாயார்.

அவ்வளவு தான்; செங்கமலம் தன் குழந்தையுடன் அங்கிருந்த கும்பலில் ஓடோடியும் சென்று மறைந்துவிட்டாள்!

(தொடரும்)

வக்கீல்:— (சாட்சியைப் பார்த்து) எம்பா! இந்த வாதி அந்தப் பிரதிவாதியைத் திட்டினன் என்று சொல்றியே, அப்போ நீ எத்தனை அடி தூரத்தில் நின்று கொண் டிருந்தாய்.

சாட்சி:— அப்போ, நான் நின்ற இடத்திற்கும் பிரதிவாதிக்கும் சரியாக 6 முழம் 3 சாண் இருந்ததிங்க.

வக்கீல்:— எம்பா பொய் சொல்றே. நீ அளந்தா பார்த்தே.

சாட்சி:— எனக்குத் தெரியுமுங்க. இதே மாதிரி கோர்ட்டிலே வக்கீல்மாரு கேப்பாருங்க என்று நினைச்சி, அப்பவே அளந்து பார்த்துக்கிட்டேனுங்க.

எத்தனை பேர்?

கீ. இராமலிங்கம்

எனது இனிய இளங்கோ!
வாழ்க நீடுழி!

உனது அன்புசால் எழுத்து வந்து அகமகிழ்வித்தது. தீஞ்சுவைத் தமிழில் வரைய நீ பழகி வருவது கண்டு களிப்படைகின்றேன்.

'ஏன் தனித்தமிழில் எழுத வேண்டும்? ஆங்கிலமும், வட சொல்லும், பிற சொல்லும் கலந்து நாம் பேசி வருவது போலவே வரைந்தால் என்ன?' என்று உனது நண்பரில் சிலர் கூறுவதாகக் குறித்திருக்கிறாய். நல்ல கேள்வியே. மாணவ நட்பினர் உன்னைக் கேட்பது போலவே மற்றவர்கள் பலர் என்னையும் கேட்டிருக்கின்றனர். அவர்களுக்கு நான் சொல்லி வந்த விடையை உனக்கு இங்கு எழுத விரும்புகிறேன். உன்னை இனி அங்ஙனம் வினவுவோருக்கு, விளக்கஞ் செய்து நீ அறிவுறுத்துவாய் அல்லவா?

வடசொல் தாக்கு நேராத முன்பு நாம் எல்லோரும் தனித் தமிழே பேசிவந்தோம். இன்றைக்கும் அச்சொல்லால் தாக்குண்ணப்படாமல் நமது தமிழ் நாட்டின் பெருவாரியான சிற்றூர்களிலே, நம்மவர்கள் பலர் இருக்கின்றனர். நகரங்களுக்குக் குடியேறியவர்கள், நகரங்களோடு தொடர்புடையவர்கள் படிக்கும் வாய்ப்புப்பெற்றவர்கள், நாகரிக முற்றவர் என்று சொல்லப் பெறுகிறவர்கள், இவர்களே தமிழைக் கைவிட்டு வடசொல் கலந்து பேசுவது சிறப்பு என்று முதல் முதல் ஏமாந்து எண்ணினவர்கள். இவர்களில் பெரும்பாலோர் உயர் வகுப்புக்கள் என்று சொல்லப்படும் இனங்களிலே பிறந்தவர்களே யாவர். நலமாக இருக்கிறாயா?செம்மைதானா? என்று கேட்பதற்கு மாறாக சௌக்கியமாக இருக்கிறாயா! க்ஷேமந்தானா? என்று கேட்கத்துவங்கியவர்கள் அவர்களே. சோற்றைத் தள்ளி விட்டுச் சாதத்தைக் கைப்பிடித்தவர்களும் குழம்பைக் கொட்டிவிட்டுச் சாம்பாரை ஊற்றிக் கொண்டவர்களும் இவர்களேயாவர். இப்படியே தாய்த்தமிழ்ச் சொல்லைச் சொல்ல வாய்கூசிப் பல பிற மொழிச்சொல்லை வரவேற்றவர்களை என்னவென்று சொல்லுவது!

வட மொழிக்குப் பின் வந்த உருது, அரபி முதலிய மொழிகளில் இத்தகைய ஆட்களுக்கே முதலில் பற்று உண்டாயிற்று. ஆயத்தம் என்ற தமிழ்ச் சொல் அடியோடு மறந்து போகும்படி, 'தயார்' என்ற சொல்லை ஆட்சிக்குக் கொண்டுவந்து விட்டார்கள். பின்னர் நுழைந்த ஆங்கிலத்திற்கு 'ஆ வா!' என்று அழைப்பளித்தவர்களும் இவர்

களை. சோறு, சாதம் ஆகி இப்போது 'ரைஸ்' ஆய்விட்டிருக்கிறது. ஆயத்தம் 'தயார்' ஆகி, இப்போது 'ரெடி' ஆகி விட்டிருக்கிறது. இப்படியே பல, பிறமொழிச் சொற்களைத் தமிழைப் புறக்கணித்துப் புகுத்திய சின்னஞ் சிலருக்காகத் தமிழ் நாடுமுழுவதும் தனித் தீந்தமிழை விட்டுக் கொடுத்து விடவேண்டுமா?

நாம் கலந்துபேசும் ஆங்கிலச் சொற்களில் ஒன்றுகூடச் சிற்றூர்களில் தெரியாது. நாம் கலப்பட மொழியில் பேசும் போது அவர்கள் 'இப்படியுமா கெட்டுவிடும் காலம்?' என்று வாய்பிளந்து பார்ப்பதை நீயும் சென்ற கோடையில் சிற்றூருக்குச் சென்றுயே, அப்போது கண்டிருப்பாய் என்று எண்ணுகிறேன்.

ஆங்கிலமும் வடமொழியும் பிறமொழியும் தமிழோடு கலந்து பேசுபவர்கள் எத்தனை பேர்கள் என்பதை நீ அறியாமல் இருக்கமாட்டாய். தமிழர் மொத்தம் நூறு பேர் என்று வைத்துக்கொண்டால், அவர்களில் ஒருவர் அல்லது இருவருக்குமேல் கலப்பட மொழிபேசுகிறவர்கள் உண்டா? இல்லை பத்துபேரே பிறமொழி கலந்து பேசப் பழகிவிட்டவர்கள் என்று வைத்துக்கொள்வோம். மற்ற தொண்ணூறு பேரும் தனித் தமிழ்பேசிக் கொண்டு தானே இன்றைக்கும் தமிழகத்தின் பல பகுதிகளிலும் உறைந்து வருகின்றனர்.

அவர்களில் பெரும்பாலோர் படிக்காதவர்களாக இருப்பார்கள். ஏழை எளியவர்களாக இருப்பார்கள். உயர்ந்த இனங்கள் என்று பெருமை யடித்துக் கொள்ளும் இனங்களைச்சேர்ந்தவர்கள் இருக்கமாட்டார்கள்.

இன்றைக்கு இந்த 90 பேரும் படிக்காதவர்களாக இருந்தாலும், நாடு தன் உரிமை பெற்று விளங்கும் நிலையிலே இன்னும் ஐந்து பத்து ஆண்டுகளுக்குள்ளே, முடியாது அவ்வளவு விரைவில் என்றால், இன்னும் ஒரு தலைமுறைக்குள்ளேயாவது அவ்வளவு பேரும படித்து விடப்போகிறார்கள். நமது அரசு அவர்களைபபடிக்காதவர்களாக வைத்துக்கொண்டிருக்கப்போவதில்லை. அப்படி அவர்கள் படிக்கத்துவங்கும் போது அவர்களுக்குத் தெரிந்த தனித்தமிழ் மொழிகளையே பயிலட்டுமே! அவர்களுக்கு ஏற்கனவே தெரியாதிருந்த புதுக் கருத்துக்களைப் பயிலவரும்போதும் அக்கருத்துக்களுக்குத் தனித்தமிழ்ச் சொல்லையே பயின்று கொள்ளட்டுமே. நூற்றில் பத்து பேருக்குத தெரிந்த பிறமொழிச் சொற்களை ஏன் 90பேராகப் பெருவளியான அவர்களது தலையில் சுமத்த வேண்டும்? அது அறமாகாதே!

என்னோடு நமது சிற்றூரில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து விட்டு விட்ட என் நண்பன் கன்னியப்பன் ஒரு முறை நமது வீட்டுக்கு வந்திருந்தான். கொசு மிகுதியாக இருந்ததைக் கண்டு, 'ஏன் அப்பா இவ்வளவு கொசு இவ்வூரிலே?' என்றான். ஆங்கிலம் படித்து அதில் ஊறி அம்மொழியைக் கலந்து பேசுவதே பெருமை யென்றிருந்த எனக்கு' 'இந்த டவுனிலே அன்டர் க்ரௌண்ட் ட்ரெய்னேஜ்

இல்லை' என்று அவனுக்குக் கலப்பட மொழியில் விடை சொல்ல வேண்டுமென்றே தோன்றிற்று. அவனுக்கோ ஆங்கிலம் என்பதே ஓர் எழுத்துக்கூடத் தெரியாது. சொன்னால் புரிந்து கொள்ளமாட்டானே என விழித்தேன். நான் விழிப்பதைப் பார்த்து அவனே 'இந்த ஊரிலே புதை சாக்கடை இல்லை, அப்பா' அதனாலேயே கொசு இவ்வளவு கூடுதலாக இருக்கிறது' என்று சொன்னான். ஆ ஆ! என்ன அழகான தனித்தமிழ்த் தொடர் 'புதை சாக்கடை'! 'அண்டர் க்ரௌண்ட் ட்ரேயினேஜ்' விட்டு நான் வெளியேற முடியாமல் திகைத்த போது, தமிழில் கையெழுத்து மட்டும் போடப் பழகிய எனது நண்பன் கன்னியப்பன், தனித் தமிழ் மகன், -என்னைப்போன்ற பிறமொழி பயின்று கெட்டான் அல்லன - சுருங்கிய எழுத்தில், இனிய தமிழில், சொன்னது கேட்ட நான் ஏற்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆங்கிலந் தெரிந்த சில பேருக்கு 'அண்டர் க்ரௌண்ட் ட்ரேயினேஜ்' என்றால் புரிந்து விடும். அதற்காக வேண்டி ஆங்கிலந் தெரியாத நமது தமிழ நாட்டின் உடன்தோன்றலர் பல பேரை ஏன் இந்த அண்டர் க்ரௌண்ட் ட்ரேயினேஜில் அழுத்த வேண்டும்? அவர்களுக்குத் தெரிந்த 'புதை சாக்கடையை' நாம தெரிந்து கொள்வது கடினமாகுமா?

எனவே எனது அன்புடைச் செல்வ! மிகச் சிலராகிய நாம், வடமொழிபழகி ஆங்கிலம் பயின்று, பிறமொழி ஏற்று தமிழில் அவற்றைப் புகுத்திப் பேசி பழகி விட்டதனாலேயே அப்படியே இனிப்படிப்பில்லாதவர்களை யெல்லாம் எழுத வேண்டுமென்றும் அப்பிற மொழிகள் தெரியாதவராய், மிகப் பலராகிய நம் தமிழே பேசிவரும் த்மிழகத்து திருவுடைய பெருமக்களும் நாம் பேசிவரும் கலப்பு மொழியையே தெரிந்து கொள்ளட்டுமே என்பதும் பொருத்தமில்லையென்று உன் நண்பர்களுக்கு உணர்த்துவாய். 'நாம் பேசுவது போலேயே' என்று சொல்லுவதில்லை 'நாம்' என்பது எத்தனை பேரைக் குறிக்கிறது என்று நினைத்துப்பார்க்கச் சொல்லு. அது போதும் அவர்கள் உணர்ச்சி பெறுவதற்கு.

உன் உடல் நலன் எங்ஙனம் இருக்கிறது. நண்பன் செந்தில் செம்மையாயிருக்கிறானா? ஆண்டுத் தேர்தலில் நல்ல கூறுகள் பெற முயல். பல பாடங்களில் முதல்வனாக இருக்கமுனை... அரையாண்டுத் தேர்தலில் கணக்கில் நூற்றுக்கு ஐம்பது கூறுகளே பெற்றிருந்தாய், அது கூர்ந்து உறுத்திக் கொண்டே இருக்கிறது. வழக்கம்போல் அதில் முதல் கூறு பெறவேண்டும்.

வெல்க நின் அறிவு! வெல்க நின் ஆற்றல்!

இங்ஙனம்,

உனது நன்மை நாடும்

தந்தை

மாழலன்

கவியரசர் வாழ்த்து

★


பொன்னியின் அழகிய பொங்கற் புதுமலர்
என்னுளத்தில் இன்பம் பெய்ததே!
இராததொன்றைத் திராவிடர் பால்
இருப்பதாக்குவ திந்தப் பதிப்பாம்!

★

உயர் கருத்து நல்கும் ஓவியம் கண்டேன்
அயர்வகற்றும் அறிஞர் கட்டுரைகள்
கண்டேன்! கவிதைக்கனிகள் கண்டேன்!

★

எங்கணும் பொன்னி எவர் நினைவிலும்
பொன்னி என்னும் புகழ்க்குக் காரணம்:
தமிழ்நாட் டன்பும், தகுதிரா விடரின்
இழிவை எதிர்க்கும் எண்ணமும், கலையில்
ஆர்வமும் தெளிந்த அறிவும் உடைய
பெரியணன் முருகு பெரிதுழைப்பாகும்
அவர்கள் நீடு வாழ்க
சுவைதரு பொன்னிச் சுவடி வாழியவே!



ஏன்?

பழ. சுப. மணியன்

இரண்டெழுத்துக்கள கொண்ட சிறியசொல் தான். எனினும் இதனால் உலகிற்கு ஏற்பட்ட நன்மையைக் கணக்கிட வியலாது. இன்று உலகம் பல்வேறு துறைகளிலும் ஒரு பெரும் அளவுக்கு முன்னேறியிருக்கிறதென்றால் அதற்கு இந்த 'ஏன்' ஒரு காரணம்.

"உழைத்து உழைத்து நாங்கள் ஒட்டிய வயிறுடன் வாழ நீ மட்டும் ஏன் எங்கள் உழைப்பால் கொழுக்கவேண்டும்?" என்று தொழிலாளர் கேட்டதனால் தான் மேலை நாடுகளில் முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டது. "நீ ஏன் மன்னன்? நாங்கள் மட்டும் ஏன் நீ இட்ட வேலையைச் செய்யும் மக்களாய் வாழவேண்டும்?" என்று மக்கள் கேட்டதனால் தான் மன்னராட்சி ஒழிந்து மக்களாட்சி மலர வழியேற்பட்டது. "செத்து மடிவதிலும் சேர்ந்து பிறப்பதிலும் பேதமில்லாத பொழுது விருப்பு, வெறுப்பற்ற இறைவன் பெயரால் சாதிப் பாகுபாடு ஏன்?' என்று கேட்டதன் மூலம் தான் சாதிச் சழக்குகள் ஒழியத் தலைப்பட்டன. "மரத்திலிருந்து ஆப்பிள் ஏன் கீழே விழவேண்டும்? ஏன் மேலே போகக்கூடாது?" என்ற கேள்வியின் அடிப்படையில் தான் பூமியின் தன்னை நோக்கி இழுக்கும் ஆற்றல் பற்றியறிய முடிந்தது. "பறவையைப்போல் ஏன் மனிதன் வானத்தில் பறக்கக்கூடாது?" என்ற கேள்வியின் மூலம் தான் வானூர்தி கண்டுபிடிக்கப்பட்டது. "நம் நாட்டில் ஒரு சிறுபான்மை இனம் உண்டுகொழுத்து வாழ மற்ற பெரும்பான்மையோர் அவர்களுக்காக ஏன் உழைக்க வேண்டும்? நிலவளம் நீர்வளம் நிறைந்த இந்நாட்டில் மக்கள் வாழவகையின்றி உழைப்புக்கு அழைப்பு வந்த இடமெல்லாம் ஏன் ஓடவேண்டும்?" என்ற கேள்விகளினால்தான தென்னாட்டில் பகுத்தறிவு இயக்கம் தலையெடுத்தது. "அன்புருவான இறைவன் பெயரால் சமணர் ஏன் கழுவேற்றப்படவேண்டும்? கர்மம், வெகுளி ஆகியவற்றைக் கடந்த கடவுளுக்கு ஏன் பெண்டாட்டி, பிள்ளை ஆகியவை கற்பிக்கப்படவேண்டும்? பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள கடவுளை ஏன் ஊர் ஊராய்ச் சென்று வணங்கவேண்டும்?" என்ற கேள்விகளினால் தான் புராணங்களின் பொய்மை புலப்பட்டது.

பொதுவாக 'ஏன்' என்று கேள்வி கேட்கும் தன்மை

குழந்தைகளிடம் இயல்பாக அமைந்திருக்கின்றது. "இது ஏன் இப்படி இருக்கிறது? அதை ஏன் அப்படிச் செய்யக் கூடாது?" என்று குழந்தைகள் கேட்கின்றன. பெற்றோருடைய அறியாமையால் பெரும்பாலான குழந்தைகளின் இத்தன்மை நாளடைவில் அழிந்து விடுகின்றது. ஒருசில குழந்தைகளே கேள்வி கேட்டு ஆராய்ச்சி செய்து அதன் மூலம் உலகிற்குப் பெரும் பயனும் ஏற்படுகின்றது.

இந்த 'ஏன்' என்ற கேள்வி எங்கு முதலில் பிறந்தது என்பது பற்றி அறிய வேண்டுவது இன்றியமையாதது. 2400 ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டில் சாக்ரடிஸ், மக்களுக்கு 'ஏன்' என்று எதைப்பற்றியும் கேட்கும்படி கற்றுக் கொடுத்தார். அவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளரோ, எழுத்தாளரோ அல்ல. ஆனால் கடை வீதிகளிலும் பள்ளிகளிலும் பொது இடங்களிலும் எதிரில் வருவோரிடம் "ஏன் அவ்வாறு செய்கின்றாய்? ஏன் இவ்வாறு செய்யக் கூடாது?" என்ற கேள்விகளைக் கேட்பார். பதில் சொல்ல அவர்களால் இயலாவிட்டால் தானே பதில் கூறுவார். ஒவ்வொன்றைப்பற்றியும் நன்றாக ஆராயும்படியும் மனதிற்குச் சரியென்று பட்டதைத் தைரியத்துடன கூறும்படியும் அறிவுறுத்துவார். சிந்தனைச் சிற்பியான அவர் பிற்போக்காளருக்கு ஒரு பெரிய புரட்சி வாதியாகத் தென்பட்டார். முடிவில் அரசியலாரால் குற்றஞ் சாட்டப்பட்டு நஞ்சுண்டு இறந்தார். அவர் இறந்தாலும் நாட்டில் அவர் அறிவுறுத்திய கருத்துக்கள் உயிருடன் நடமாடின.

15-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் இங்கிலாந்தில் மக்கள் எண்ணத்தில் மறுமலர்ச்சியேற்பட்டது. கான்ஸ்டாண்டிநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டவுடன் அங்கிருந்த கிரேக்க அறிஞர் அதை விட்டு வெளியேறி ஐரோப்பா வெங்கும் சென்று தங்கள் கருத்தைப் பரப்பினர். எந்த ஒரு கருத்தையும் ஆராய்ந்து தான் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக மதத்திலும் இலக்கியத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. மக்கள் பல கேள்விகளைக் கேட்டதின் பயனாக இங்கிலாந்தில் செல்வாக்குப் பெற்றிருந்த கத்தோலிக்க மதத்தின் ஊழல்கள் வெளியாயின. 16-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட மதச்சீர்திருத்தத்திற்கு மக்கள் எண்ணத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி ஒரு முக்கிய காரணம். அதற்கு முன்பு மக்கள் மதக்குருக்கள் சொன்னதையெல்லாம் அப்படியே நம்பினர்.

இங்கிலாந்தில் 15-ம் நூற்றாண்டில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. நாம் 20-ம் நூற்றாண்டில் எல்லா மக்களும் ஒப்புக்கொள்ளும் படியான அளவு அம்முன்னேற்றத்தை யடையவில்லை. அவர்கள் 15-ம் நூற்றாண்டில் கண்ட உண்மையை நாம் 20-ம் நூற்றாண்டில் முழுதாக அறிந்து கொள்ளவில்லை. ஏன்? ★

கலை உலகம்

மாடர்ன் தியேட்டர்ஸின் அடுத்தபடத்தைப்பற்றிப் பத்திரிகைக்காரர்கள் பல விதமாக எழுதியிருக்கிறார்கள். ஆனால் அது அனைத்துமே தவறு என்கிறது சேலத்துச் செய்தி ஒன்று. அவர்களது அடுத்த படத்திற்காகக் கதை இப்பொழுது உருவாகி வருகிறதாம். இது என்ன கதை என்பது படம் ஆரம்பமாகிச் சில காலம் சென்றபின் தான் தெரியுமாம். இதில் மகாலிங்கம் நடிக்கலாமென்று கூறப்படுகிறது.

- சூர்யா பிலிம்ஸாரின் பொறுப்பில் உருவான ஆண்டாள் படத்தின் படப்பிடிப்புகள் ஒருவகையாக முடிவடைந்து விட்டன. ஜீவரத்தினமும் பி. எஸ். கோவிந்தனும் செளதாமினியும் இதில் அற்புதமாக நடித்திருக்கிறார்கள். டெக்னிக்கும் செட்டிங்கும் உயர்தரமாக அமைந்து விட்டன. இல்லாமலா விநியோகஸ்தர்கள் ஈசல் மாதிரி மொய்க்கிறார்கள்?


- ஜெயப்பிரகாஷ் பிக்சர்ஸின் போஜன் முக்கால் வாசி வளர்ந்து விட்டானாம். பி. எஸ். கோவிந்தனும் வரலட்சுமியும் நடிக்கும் இந்தப் படத்தை எல். எஸ். ராமச்சந்திரன் டைரக்ட் செய்கிறார். தாராசெளந்திரியும் லலிதா பத்மினியும் இதில் நடனமாடுகிறார்கள்.

- ஸிட்டாடேலின் ஞான செளந்தரி ஒருவழியாக முடிந்து விட்டாளாம். எம். வி. ராஜம்மாவும் மகாலிங்கமும் இதில் நடிக்கிறார்கள். படம் பிரமாதமாயிருக்குமென்று தோன்றுகிறது. நாகூரின் தயாரிப்பு இது.

- ஜூபிடரில் அண்ணாவின் வேலைக்காரி முக்காலே அரைக்காலே முக்கால் வீசம் ஆய்விட்டாளாம். 'எப்போ வருவாளோ வேலைக்காரி' என்று எங்கும் ரசிகர்கள் விரைவில் விளம்பரத்தைக் காணலாம்.

- ஜூபிடரின் 'அபிமன்யு' ஏ. எஸ். ஏ. சாமிக்கு 'மூட்' வந்திருந்ததால் கதை எழுதப்பட்டு, சோமசுந்தரத்துக்கு 'மூட்' வந்ததால் டைரக்ட் செய்யப்பட்டு, ஜீவரத்தினத்திற்கும் அவரது தாயாருக்கும் 'மூட்' வந்திருந்ததால் நடிக்கப்பட்டு, ஜூபிடருக்கு நல்ல 'மூட்' இருப்பதால் படம் முடிக்கப்படப் போகிறதாம். வேறொன்றுமில்லை. மகாபுத்திசாலித்தனமாக ஏ. எஸ். ஏ. சாமி, ரேடியோவில் 'சினிமாத் தொழிலில் 'மூட்' என்பதுபற்றிப் பேசினார். அதைவைத்து 'நியூஸ்' எழுதிவிட்டேன். அவ்வளவுதான்.

- அண்ணா நல்லதம்பி நல்லபடியாகவே வளர்கிறான் நியூடோனிலே. —கலைஞன்



மதம் அவசியமா?

கா. அப்பாத்துரை

மதம் அவசியமா என்ற கேள்விக்கு 'ஆம்' என்றும் 'இல்லை' என்றும் பலர் விடை பகரலாம். 'ஆம்' என்பவர் கட்சிக்கு 'இல்லை' என்பவர் கட்சி மாறுபட்டதென்று எவரும் கருதுவது இயல்பு. ஆனால் அப்படி மாறுபட்டுத் தான் இருக்கவேண்டும் என்பது இல்லை. மதம் என்ற சொல்லுக்கு இருசாராரும் இரு வேறு பொருள் கொள்ளலாமல்லவா?

சர்க்கரை என்ற சொல் வெள்ளைப்பொடி வடிவான சர்க்கரைக்குத் தமிழ் நாட்டின் வட பகுதியிலும் வெல்லக்கட்டிக்குத் தென்பகுதியிலும் வழங்குகிறது. ஒரே பொருளைப் பார்த்து வடதமிழர் 'இது சர்க்கரை' என்றும் தென் தமிழர் 'இது சர்க்கரை அன்று' என்றும் கூறலாம். இருவர் சொல்லும் வேறு. பொருள் ஒன்று.

ஆகவே இருகட்சியினரின் வேறுபாட்டைக் காணுமுன், மதம் என்பதற்கு இருவர் கொள்ளும் பொருளையும் ஆராய்தல் வேண்டும். மதம் இன்னதென வரையறுத்தபின் தான் 'ஆம்' என்றும் 'இல்லை' என்றும், இக்கேள்விகளுக்கு விடையிறுக்க முடியும்.

மதம் என்பது என்ன என்ற கேள்விக்குத்தரப்படும் விளக்க விடைகள் எத்தனையோ வகை. ஆயினும் அவற்றை இரு பெரும் பிரிவுகளாகத் தொகுக்கலாம்.

ஒரு சாரார் கொள்கை, மதம் இயற்கைக்கு அப்பாற்பட்டது; அறிவுக்கு எட்டாதது; பொருள்நிலை கடந்த பொருளாகிய கடவுளைப் பற்றியது. அது அறிவு முறையில் பேசப்படினும், அறிவு கடந்ததாதலால் நம்பிக்கை அடிப்படையானது. மதத்தின் உண்மைபற்றி ஆராய்கையில் எல்லாரும் ஒரே வகையில் ஆராயமுடியாது. ஒருசாரார் எப்படியோ உணரமுடியாததை'உணர்வர்'. உணர்ந்து கூறுவர். அவர்கள் ஆன்றோர், பெரியர், ஆரியர். மற்றவர்கள் உணரமுடியாது. காணமுடியாது. நம்ப வேண்டும். கேட்கவேண்டும். கேட்டு நடக்கவேண்டும். பணி செய்து கிடக்கவேண்டும்.

இச்சார்பினர், சமயம் தெய்வம் அருளியது என்பர்—நம்பாதவர் நம்பிக்கையை உறுதிப்படுத்த, அதே நோக்குடன் 'இதோ பார், தெய்வம் அருளிய திருமறை' என்பர். அப்போதும் நம்பாவிட்டால்

[illegible] முறையாகும் [illegible] காட்டுவர், பாமர மக்கள் நிலை கடந்து அறிவுப் போருக்கு நிற்பவரிடம்.

இச்சார்பினருக்கு மனிதன் பெரிதன்று; மதமும் மதப்பெயரால் நிலவும்கடவுளுமே பெரிது. அவர்கள் மதம் மனிதன் படைப்பன்று என்று கொள்வதனால் அது பிறப்பு, வளர்ச்சி, மாற்றம், இறப்பு அற்றதென்பர். மதம்என்பது அவர்களுக்கு முற்ற முடிந்த நிலையியல் (*Static*) உண்மை. நாகரிக வளர்ச்சியுடன் வளராதது. இயங்கும் (*dynamic*) உயிர்ப் பொருளன்று.

இவர்கட்கு மாறான, ஆனால் பாமரமக்கள் கண்ணில் மாறுபடுவதாகத் தெளிவுபடக் காணாத இன்னொரு பிரிவினர் உண்டு. இவர்கள் கடவுளை ஒரு பொருளாகக் கொள்ளாமல் முற்றுப்பெற்ற ஓர் உண்மையாகக் கொள்ளாமல், மாந்தர் அறிவு நிலைக்கு ஏற்ப வளர்ந்து வரும் ஒரு குறிக்கோள் அல்லது அடிப்படை உண்மை என்பர். இக்குறிக்கோள் மனிதனுக்கு மனிதன், குழுவுக்குக் குழு, நாட்டுக்கு நாடு, நாகரிகத்திற்கு நாகரிகம், காலத்திற்குக் காலம் வேறுபடுமாயினும்; மற்றெல்லா நாகரிகக்கூறுகளையும் போலவே தோற்றம், வளர்ச்சி, மாற்றம், இயக்கம், தொடர்ச்சி ஆகிய இயக்க உயிர்ப்பண்புகள் உடையது. இக்குறிக்கோளை இவரில் சிலர் ஆண், பெண்ணுருவில் கற்பனை செய்து பெயர் வைப்பர். சிலர் கடவுள், தெய்வம் என்பர். சிலர் இயற்கை என்பர். சிலர் பொருள்பற்றிய அறிவின் எல்லையைத் தொகுத்துரைத்து அறிவின் குறைபாட்டைக் குறிக்கும் குறியிடு என்பர். (கணக்கில் எண்ணைக் குறியாமல் எண்ணற்ற இடமதிப்பைக் குறிக்கும் சுன்னம் [0] போல)

மேற்கூறிய விளக்கத்தின் பயனாய் இப்பிரிவில் 'ஆத்திகர்' எனப்படுபவர்களும் உண்டு, 'நாத்திகர்' எனப்படுபவர்களும் உண்டு என்று காணலாம். ஆனால் பெயரளவில் வேறுபட்ட இவ்விரு உட்குழுவினரும் பொருளளவில் ஒரு சார்பினரே. வேற்றுமை யாதெனில் முதல் உட்குழுவினர் தம் கருத்தைச் சமயம் என்பர். மறுசாரார் நாகரிகம், மெய் விளக்கம் (*Philosophy*) அன்பு நெறி அல்லது அறிவியல் (*Science*) என்பர். கார்ல் மார்க்ஸ் போன்ற அறிவியல் வாதிகளும் நாத்திகர் எனக் கூறப்படும் பிற பேரறிஞர்களும் உண்மையில் முன் கூறப்பட்ட முதற்பிரிவு ஆத்திகருக்கு மாறுபட்டவரேயன்றி வேறன்று. பின் கூறப்பட்ட இரண்டாம் பிரிவு 'ஆத்திகரும்' 'நாத்திகரும்' ஒன்றுபட்டவர்களே.

இவ்விரண்டாம் பிரிவினர் அனைவருக்கும் மதம் மனிதனுக்காகவேயன்றி மனிதன் மதத்துக்காக என்று ஆகான். இவர்களுக்கு மதம் வளரும் ஓர் இயக்கம்; ஒரு நிலையான உயிரற்ற சட உண்மை அன்று. இவர்கள் கருத்தின்படி மதம் மனிதன் விலங்குநிலையில் இருக்கும்போது இல்லாதிருந்து அவன் நாகரிகத்துடன் வளர்ந்து, அவன் உயர்வுடன் உயர்ந்து வருகிறது. சிறு குழந்தை பிறக்கும்போது இல்

லாதவுடை அணிமணிகள் சிறு பருவத்தில் அணியப்பட்டுப் பின் பெருக்கமடைந்து இறுதியில் அகல்வது போன்றது இது. ஆனால் அகலும் காலத்தில் அதன் தேவையும் அகன்றுவிடும் அன்றோ? அப்போது அவன் பருவுடை நீத்து நுண் உடையாகிய உடலும் நீத்து, உயிருடைகள் அன்றோ பெறுகின்றான்.

இப்பிரிவினர்க்கு மதம் என்ற பெயர் தனி மனிதனை மனித வகுப்பின் வளர்ச்சியோடு ஒட்டுவரை உதவும் தனி மனித நாகரிகம் ஆகும். நாகரிகத்திற்கும் அதற்கும் வேறுபாடு சார் பொருள் பற்றியது மட்டுமே. நாகரிகம் மக்கள் குழு, நாடு, உலகம் ஆகியவற்றின் பொது உடைமை. மதம் தனிமனிதன் உரிமை. அவ்வளவுதான்.

மேற்கூறப்பட்ட விளக்கங்களுக்குப் பிறகு மதம் அவசியமா என்ற கேள்விக்குச் சிறிது பொது அறிவு உடையவனுக்கும் விடைதரல் எளிது.

முதல் பிரிவினர் மதமே மதமானல், அது அவசியமன்று என்பது மட்டுமன்று; அது தீமை தருவது; ஒழிய வேண்டியது; ஒழிக்கப்பட வேண்டியது. எவ்வளவு விரைவில் ஒழிக்கப்பட முடியுமோ அவ்வளவுக்கும் அதனை நோயாகக் கொண்டுள்ள நாட்டுக்கு நலம்.

ஆனல் இரண்டாம் பிரிவினர் மதம்—அது எப்பெயருடன் விளங்கினலும் எத்தகைய சொற்களால் விளக்கப்பட்டாலும் சரி—அது அவசியம்; ஒழியாது; ஒழிக்கப்படக் கூடாதது மட்டுமல்ல. ஒழிக்கப்பட முடியாதது. மூச்சு இருக்குமளவும் தனிமனிதனையும், நினைவு இருக்குமளவும் உலகையும் அது பற்றியே நிற்கும். மனிதன் வளர்ச்சிக்கேற்ப வளர்ந்து அவன் மாற்றத்திற்கேற்ப உருமாறும் அவன் நிழல் அது.

நம் நாட்டில் சமயம் வேண்டும், வேண்டாம் என்பவர் முற்கூறிய பிரிவினர் கருத்துடன் கூட நிற்கவில்லை. சாதி, மூடநம்பிக்கை, குருட்டுப் பழக்க வழக்கங்கள், மக்களை மக்களிடமிருந்து பிரித்து வைக்கும் பேதங்கள் ஆகியவற்றையே சமயமென்கின்றனர். மனித வகுப்பின் நன்மை கோருபவர் எவரும் — எந்நாட்டினரும் எச்சமயத்தவரும் எவ் இனத்தவரும் அதனை ஆதரிக்கமாட்டார். நேரிடையாகவோ மறைமுகமாகவோ தீமையை உள்ளத்தில் கொண்டவர் மட்டுமே அதனை ஆதரிப்பர்.

நம்மிலே எவ்வளவு பேர்களுக்கு இக்பாலும், ஷெல்லியும், பைரனும், பாரதிதாசனும், ஆஸ்கார் ஒயில்டும், ஹரீந்திரரும் தெரியும்! நமக்கெல்லாம் இவர்களுடைய கவிதையுலகில் உலவ நேரமில்லையே! இன்னமுந்தான் நாம் "முத்தைத்தரு பத்தித்திரு நகையத்திக்கிறை சத்தி சரவண" சிந்துகளிலே காலத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கிறோமே! புத்துலகக் கவிகளைக் காண நேரம் ஏது?

அறிஞர் அண்ணாத்துரை



தில்லைவில்லாளன்

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

வாசகாரா வந்து ஆண்டு ஒன்றாகி விட்டது. அதற்குள் அவரது அறிவுத் திறத்தால் பேரும், புகழும் அவரை நாடி ஓடி வந்தன. அவருக்கு நல்ல செல்வாக்கு நாட்டில்—ஆளுங் கூட்டத்தாரிடம் மட்டுமல்ல, ஆளப்படும் மக்களிடமும்! ஆகவே, ஆளுவோர் இவர் தயவை நாடினர்.

வாசகாரா நெளிந்து வளைந்து சென்று சமயம் நேரும்பொழுது படமெடுத்தாடும் பாம்பு போலானார். நெளிந்து வளைந்து செல்ல இதுவரை காலம் சரியாகிவிட்டது — சீறிப்படமாடவும், பாய்ந்து கொத்தவும் வேண்டும்.

நாகத்தின் படம் விரிகிறது! அந்த ஆட்டம் போகிற போக்கை—? அவர் நாவின் நடமாட்டத்தில் தான் காணமுடியும்.

"யார் வஜ்ஜித்தலைவரா? வரவேண்டும். வணக்கம். இப்பொழுதுதான் உங்களைப் பற்றி நினைத்தேன். நீங்களே வந்து விட்டீர்கள்"

"ஏன் என் நினைவிற்குக் காரணம்—?"

"இல்லை, உங்கள் இனத்தவருக்கு ஏர்பிடிக்கவே தெரியாதாம்! பிற நாட்டாரிடம் பிச்சை ஏற்பதுதான் பழக்கமாம்"

"என்ன?"

கோபம் கொழுந்து விட்டெரிந்தது வஜ்ஜிநாட்டானுக்கு! அவன் நெஞ்சு படபடத்தது இந்தப் பழிகேட்டு.

"இதை.........?"

"இது நானாகவே சொல்லவில்லை- எனக்கு எப்படித் தெரியும்! லிச்சவி நாட்டினர் இப்படிக் கூறினர்"

ஏமாந்தவன் எழுந்து போனான். ஏய்த்தவன் சிரித்தான்.

“வாரும் வாரும் லிச்சவித் தலைவரே! உங்களைப் பற்றி அந்த வஜ்ஜி நாட்டுப் பிரதமர் கூறினார்”

“என்ன, என்னைப் பற்றியா......?”

“ஆமாம் கோபிக்கக் கூடாது சந்தேகத்தால் கேட்கிறேன். உங்கள் நாட்டில் வடித்த சோற்றை அப்படியே தின்பார்களாமே! கறி யேதும் கிடையாதாமே-சமயத்தில் மாட்டுக்குப் போடும் மட்ட வஸ்துகளையும் இஷ்ட பண்டமாக ஏற்று விடுவாராமே. இது நிஜமா?”

“எந்த மடையன் இப்படிச் சொன்னான்?”

“அந்த வஜ்ஜி......”

அவசரக்காரன் ஆத்திரத்தோடு போனான். காரியக்காரன் வெற்றியோடு சிரித்தான்.

“விதேக பூபதியே வரவேண்டும். ஏது இப்படி?”

“அமைச்சரிடம் அந்தரங்கம் ஒன்றும் பேசவரவில்லை. நண்பர் என்ற முறையில் பார்க்க வந்தேன்”

“தங்கள் வரவால் என் ஏழைக்குடிசை புனித மடைந்தது”

“வீண் புகழ்ச்சி வேண்டாம் வித்தகரே”

“உங்களை ஒன்று கேட்க வேண்டும் என்று வெகு நாளாக ஆசை—இப்பொழுது தான் நினைவிற்கு வந்தது!”

“என்ன அது ....?”

“கேட்டவுடன் சினந்தால் சொல்ல மாட்டீர்களே”

“ஆத்திரம் அறிவற்றவனுக்கு வரும். விவேகிகளுக்கு அது விதிவிலக்கு”

“சரி கேட்கிறேன். நீங்கள் எல்லோரும் கோழைகளாம். களத்தில் வாள்பிடிக்க மாட்டீர்களாம், சமயத்தில் காட்டிக் கொடுத்து விட்டு ஓட்டமெடுப்பதுதான் உங்கள் பரம்பரைச் சித்தாந்தமாம்.........”

“நிறுத்தும் உமது மதி கெட்ட பேச்சை. இது சந்தேகமா, என்னைப் புண்படுத்தக் கட்டிவிடும் புரளியா?”

“கோபம் கூடாது. அப்பொழுதே அதற்காகத்தான் கோபிக்கக்கூடாது என்று கேட்டேன். இதை அந்த லிச்சவி சொல்கிறபோது நான் நம்பவே இல்லை. மறுத்தும் சொன்னேன், அவர் விடுவதாக இல்லை.”

“லிச்சவியா சொன்னான்?”

“ஆமாம் இதுமட்டுமா, இன்னும் எவ்வளவோ?”

“போதும், அந்தப்புல்லனின் புண்படுத்தும் புராணம்”

எத்தன் சிரிக்கிறான். சித்தங் கலங்கிச் செல்கிறான் சற்றும் சிந்திக்காத அவசர புத்திக்காரன்.

இப்படி ஆடத்தொடங்கியது மகதத்திலிருந்து வந்த

'நாகாஜுன' - ஆட்டம், ஒற்றுமையின் ஒவ்வொரு துளி ரத்தமும் வெளியேறி முகம் வெளிறி பிணமாகிற அளவு ஆடிற்று. ஒற்றுமை சரிந்தது, எண்மர் பிரிந்தனர்.

எட்டு இனத்தவரும் ஒருவரை யொருவர் கலந்துரையாடாமல் பகைவராகி விட்டனர். இவர் பேச்சு அவருக்குப் பிடிப்பதில்லை. அவர் சொல்வது இன்னொருவருக்கு எரிச்சலை மூட்டிவிட்டது. இப்படி மூலைக்கொருவராகத் திரும்பி விட்டனர். 'நவக்கிரகங்கள்' — இங்கு 'அஷ்டகிரகங்கள்' — அவை ஒன்றையொன்று பார்ப்பதில்லையாம்! மக்களைப் பிரித்த வகை வேறொரு முறை. அனுஷ்டானம், ஆச்சாரம், குல ஒழுங்கு, கோத்திரப் பெருமை – சுருக்கமாக 'ஜாதி' என்ற நச்சுப்பல் வேலை செய்தது.

வாசகாரா வெற்றிப்படியில் ஏறிக்கொண்டே இருந்தார். ஒற்றுமை சரியச்சரிய, கூட்டு எண்ணம் மடிய, மடிய, வேற்றுமை விஷம் பரவப், பரவ, 'கழுதை ஊர்வலக்காரர்' மகிழ்ந்தார். காரியம் கைகூடுகிறது என்று கூத்தாடினர் - களிப்பால், மறைவில்!

அஜாதசத்துரு ஆண்டுஒன்று இழும் நம்பிக்கை இழக்க வில்லை. ஒற்றர்களுக்குப் பஞ்சமேது? அன்று அன்று என்ன நடக்கிறது என்று தெரிவிக்க அவர்கள் எப்பொழுதும் தவறுவதில்லை. அதுவும வஜ்ஜி நாட்டிற்கு விசேஷ 'தூதர்கள்' இருந்தனர். வாசகாராவுக்கும், அஜாத சத்துருவுக்கும் 'கம்பியில்லாத தந்தி' யாக ஒருவன, காவியுடையில், காளி கோயிலில் உலவினன்.

அவன் ஒருநாள் மகத மன்னனைச் சந்தித்தான். ஓலையொன்று நீட்டிக் கால்விட்ட வழியே நடந்து விட்டான்.

அஜாத சத்துரு அவசரமாக அதைப் படித்தான். அவன் முகம் மலர்ந்தது, ஆனந்த பரவசனானன்.

"காலம் அழைக்கிறது காவல! வாசகாராவின் வேலைக்கு முடிவு, அஜாதசத்ருவின் ஆசைத்திருநாள் வந்து விட்டது!"

அவ்வளவுதான் அதிலிருந்த விஷயம். 'ரத்னச்சுருக்க' மாகப் படையெடுத்துவர வேண்டுமென்று எழுதியிருந்தான்.

மன்னன் பக்கத்திலிருந்த மணியை 'டணார், டணார்' என்று அடித்தான். காவலர்கள் இருவர் ஓடிவந்தனர்.

"அழைத்துவா. சேனனியை"

கட்டளை பிறந்தது. அடுத்த கணத்தில் சேனனி அங்கு நின்றான்.

"போருக்கு ஆயத்தமாகட்டும். வீரர் திரளட்டும். படை அலைபோல் புரள வேண்டும் வைசாலியின் மீது. வஜ்ஜி விழப்போகிறது. வீரருக்கு இச்செய்தியைப் பரப்பும். நாளை நாம் நடப்போம் வைசாலி நோக்கி"

மறுநாள் ஆயிரமாயிரம் வீரர்கள் அணிவகுத்து நின்றனர். குதிரை வீரர் கம்பீரமாக அமர்ந்திருந்தனர். வேழமுகச் சிலேச்சரிகை 'அந்தக்காலை வெயிலில் கண்ணைப் பறிப்பது போல் ஒளிவிட்டது.

மன்னன் வந்தான். போர் முரசம் ஒலித்தது.

"வீரரே, தீரரே, வெற்றி இலட்சுமியின் ஆணை இப்பொழுதுதான் கிடைத்தது - ஓராண்டுக்குப் பிறகுதான் நமக்கு அருள் கிடைத்தது. ஆகவே புறப்படுங்கள்"

போர்ப்படை கிளம்பியது. படைப்போக்கால் எழுந்த புழுதி நகரை விழுங்கி விடுவது போலாகி விட்டது.

வைசாலிக்குச் செய்தி எட்டி விட்டது. ஊரில் பரபரப்பாகி விட்டது. அரசாங்க அலுவலாளர் அங்கும் இங்கும் ஓடினர். படை வீரர் எங்கும் கூடிவிட்டனர்.

வஜ்ஜிநாட்டுக் காவலன் உடனே ஒரு சுற்றறிக்கையை அனுப்பினன். உடனே பொது எதிர்ப்பு முன்னணி அமைக்க அழைத்தான். ஆனால் அறிக்கையில் எவருடைய ஒப்பமும் காணப்படவில்லை. ஆனல் வேறு பல எழுத்துக்கள் கண்களைப் பறித்தன!

என்ன அவை—?

மாட்டுணவைத் தின்னும் விலங்குகள் போரில் என்ன செய்ய இயலும்—லிச்சவி எழுதியிருந்தான்.

கோழைகள் உதவி ஏன்?— விதேகன் பதில் இது.

குட்டைமனத்தவர் நெட்டையருடன் ஒட்டமுடியுமா?—

ஐனநிகாயின 'கையோப்பம்' இந்த உருவில்.

வஞ்சகர்கள் வரலாமா போருக்கு?

அறிவுப் பஞ்சமுள்ள நாட்டவர் அறிவுக் களஞ்சியம் நிறைந்தவருடன் நின்று பேசுவதே தவறு-போருக்கு வந்து ஆவது என்ன?—

இப்படிப் பலரகமான வாசகங்கள். வஜ்ஜியனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. நிலைமையைப் புரிந்து கொள்ளவோ முடியவில்லை. யோசித்தான், யோசித்தான் வெகுநேரம்—

"பொது எதிரி வெளியில்—முன்னேறுகிருன் நிமிஷத்திற்கு நிமிஷம்! இங்கு இவர்கள் ஏதேதோ சொல்கிருர்கள்! என்னைக் கூடத்தான பிச்சைக்காரன் என்று லிச்சவி கேலி பேசினுன். ஒற்றுமையால் உயர்ந்திருந்தோம் என்று இறுமாந்தேன். பிரிந்துவிட்டனர். அதுவும் ஆபத்து வருகிற வேளையில் வேற்றுமையைக் காட்டுகின்றனர். என்ன செய்வது?

"எட்டு இனம ஒட்டியிருந்த போது, கிட்டநெருங்கவும நடுங்கினர் அங்நியர். இதோ வருகிருனே, எதிரி, நெஞ்சில் பயமின்றி!

"நிலைமையைப் புரிந்து கொண்டானு, ஒற்றுமை வெட்டுண்டு விட்டது என்ற செய்தி எட்டியிருக்குமா? எப்படி முடியும்? யார் சொல்லியிருக்க முடியும்?

"யோசிக்க நேரம் இதுவா? நாடு 'பிரேத விசாரணை'க் களமாக ஒவ்வொரு விநாடியும் தயாராகிறது!

"யாரங்கே? உடனே அமைச்சர் வாசகாராவை அழைத்து வா.

வஜ்ஜிநாட்டான் யோசித்து முடிவதற்குள் மகதத்தான் கோட்டையினுள் நுழைந்து விட்டான். எதிர்ப்பில்லை, போரில்லை, வஜ்ஜிவிழ்ந்தது. கூட்டாட்சியின் பெருமை வீழ்ந்தது. அஜாத சத்துருவின் ஆசை நிறைவேறிற்று. போரில்லை. வெற்றி கிடைத்து விட்டது விரும்பியபடி!

வாசகாரா உடனே வஜ்ஜி முதல்வனைச் சந்தித்தார். தனியாக அல்ல! அஜாதசத்துருவும், அவனது ஆயிரமாயிரம் சேனையும் தொடர்ந்து வர!

எட்டுத் தலைவர்களும் கைதியாயினர்.

இழுத்து வந்தனர் கோட்டைக்கு வெளியே! அங்கே ஒரு சிலை—ஒரு கழுதை. அதன்மீது ஒரு அரசன்-கழுதை ஊர்வலம்!

அஜாதசத்ரு வாசகாராவைப் பார்த்தான். அவன் பார்வை "இது என்ன பழைய கதையை நினைப்பூட்டுவதாக இருக்கிறதே, எப்படி இந்தச்சிலை வந்தது?" என்று கேட்பது போலிருந்தது.

"மகத மன்னவ! இது தங்களை அவமதிக்க, அது உங்கள் உருவம்." என்றான் சிரித்துக் கொண்டே.

"அடே நயவஞ்சக நரியே! உதைபட்டு ஓடிவந்த உனக்கு உணவு தந்தோம், உடைதந்தோம், இருக்கப் பெரும் மாளிகை தந்தோம், தக்க பதவியும் தந்தோம்—கழுதை ஊர்வலம் வந்த உனக்குக் கருணை காட்டினோம். அதற்குக் கைம்மாறு இதுவோ?"

"மனித உடலில் உலவும் நாகப்பாம்பு நீ"

"காட்டிக் கொடுத்த கள்ளனே! உன்னை உலகு என்றும் மறவாது. துரோகி என்று தூற்றும்"

"வஞ்சகா" "இரட்டை நாக்குக்காரா" "கொடுநெஞ்சனே" "கொலைகாரனே"

என்று இப்படி அள்ளி வீசினர் வசைமொழிகளை - நெருப்பு வார்த்தைகளால் அர்ச்சித்தனர், கைதியான காவலர்கள்.

"அதற்குப் பெயர் அரச தந்திரம்" என்றார் சாந்தமாக, புன்முறுவல் தவழ வாசகாரா!

"காட்டிக் கொடுப்பதற்குப் பெயர், அடுத்துக் கெடுப்பதற்குப் பெயர், கூடிக் குடிகெடுக்கும் கொடுந் தொழிலின் பெயர் அரச தந்திரமானால் அது உலகத்தில் உன் ஆயுளோடு ஒழியட்டும்-இனி வளரவேண்டாம- வாசகாரா பிணத்தோடு இவ்வுலகத்தை விட்டு எரிந்து போகட்டும்" என்று கூவினான் வஜ்ஜிநாட்டான். வேல்பாய்ந்த வேங்கையின் கர்ஜனையாக இருந்தது.

அஜாதசத்துரு அதுவரை பேசாது இருந்தான். சைகையால் இருவீரரை அழைத்தான்.

எட்டுக் கழுதைகள் வந்தன. ஐயோ, வீரர்எண்மரும் கழுதையில் ஏற்றி நிறுத்தப்பட்டனர். கழுதை ஊர்வலமாம், தன் அருமை அமைச்சரைப் பழித்ததற்குத் தண்டனை.

அஜாதசத்துரு சிரித்தான். வாசகாரா சாந்தமே வடிவாக நின்றான். ★

உணர்வு பெறுவோம்

சுப நாராயணன்

அத்தை மகள் வள்ளியம்மையிடம் முத்தையாவுக்கு மெத்த விருப்பந்தான். சொந்தத்துக்குச் சொந்தம், பணத்துக்குப் பணம், அழகுக்கு அழகு, படிப்பும் ஓரளவு உண்டு. அவன் தாயார் சொல்லியபடி அப்போதே திருமணத்தை முடித்திருந்தால் நன்றாய்த்தானிருந்திருக்கும். தகப்பனார் இணங்கிவரவில்லை. ஒரு 'கணக்கு'த் தொலை நாட்டுக்குப் போய் வந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார். போன இடத்தில் தொழில் அலுவல்கள் என்றும்போல் நடக்கும் என எதிர்பார்த்தது ஏமாற்றத்தில்முடிந்தது. வயிற்றுப் பாட்டுக்கு வகை காண வேண்டிய கட்டாயமற்ற குடும்பத்தைச் சேர்ந்தவன் முத்தையா. அதனல் அவனது இளமைப் பருவமானது கல்விச் செல்வத்தை ஈட்டுவதிலேயே பெரும்பாலும் கழிந்தது. எதிர்பாராதபடி, குடும்பத்தின் செல்வ நிலை நொடித்தது. தகப்பனருடன் சேர்ந்து தானும் பொருளீட்ட முனைய வேண்டும் என்ற உண்மை அவனது கண் முன், திடு திப்பென்று முன் அறிவிப்பின்றி, மலைபோல் வந்து நின்றது. வைய வாழ்வைப் பாவை நல்லாளுடன் பகிர்ந்து துய்க்க வேண்டிய வேளையில் பணத் தொல்லை வந்து முளைத்தது.

பணத்தொல்லைக்கு ஆளான தந்தை மனம் இழந்தார்.

ஏட்டில் மனம் பதித்துவந்து, நாட்டு நடப்புத் தெரியாமல் இருந்துவிட்ட மகன், வாழ்க்கைக் கூத்தில் நேரடியாய்ப் பங்குகொள்ள வேண்டி நேர்ந்ததும், செயத் தக்க செய்யத் தெரியாதவனய்த் திகைத்தான்.

வீட்டு விபரம் பிடிபட்ட தாய் மட்டும் நிலைமையைச் சரியாய் உணர்ந்தாள். குடும்பம் வாழ வழி செய்வதில் முனைந்தாள்.

தாயாரின் கட்டாயத்தின் மேல், அவளுடைய சொந்தப் பணத்தின் உதவியால், முத்தையாவுக்கு ஒரு மாதிரியாய்த் திருமணம் நடந்தேறியது. பெண் நல்ல பெண்தான். அத்தை மகள் வள்ளியம்மை கிட்டாப் பொருளாய்ப் போய் விட்டது என்னவோ ஏமாற்றமாய்த்தானிருந்தது.

"ஏன், அப்பா முத்தையா! அவளோடு உனக்கு என்ன வம்பு? புதிதாக வாழ்க்கைப் பட்ட சின்னஞ்சிறியதை இப்

படியா சும்மா கொறு கொறுத்துத் திரிவது?"

"உனக் கென்ன தெரியும்? போ, அம்மா! மருமகள் ஆடும் ஆட்டத்துக்கு மாமியாரே பக்கப் பாட்டுப் பாட வந்துவிட்டாப் போலிருக்கிறது?"

"அப்படியன்றடா, தம்பி. குடும்பம் என்றால் நாலுந்தான் இருக்கும். நீ படித்தவன். உன் படிப்பில் இப்படியா பொறுமையின்றித் துள்ளித் துடிக்கச் சொல்லி யிருக்கிறது? நடந்ததை நினைத்து நடப்பதை மறக்கலாமா? — மறக்கத்தான் முடியுமா? நிலைமையை உணர்ந்து பார்—உண்மை விளங்கும், குடும்பம் மேலோங்கும்..."

ஆம். வாழ்க்கையின் அடிப்படைச் செய்திகளை இந்தப் பெண்கள் தாம் சரியாய் உணர்ந்தவர்கள். பெண்கள் உணர்வு மயமானவர்கள் என்று சொல்வதுண்டு. அது மெய். குடும்பச் சுமை சும்மா துளி தூளுக் கன்று. மா பெரிது அது. எந்தக் கொம்பனும் குடும்பச் சுமையின் கீழ், ஒரு சில நாளாவது அடிப்பட்டு வடுப்பட்டுத் தேறி வெந்துதான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் அவனுடைய உணர்வுகள் சரியானபடி தெம்பும் திட்பமும் ஏறப் பெற்றிரா.

வீட்டுக்குத் தள வரிசைப் பரப்பு எப்படியோ, அப்படித்தான் வாழ்க்கைக்கு உணர்வுப் பேறும். உணர்வையும் நாம் பெறத்தான் செய்கிறோம். நாம் குழந்தையா யிருந்தபோது நமக்கு உணர்வு ஊட்டி வளர்த்தவர்கள் நம்முடைய தாயும் தமக்கையும் பாட்டிமாருந்தாம். உண்ண, உறிஞ்ச, நடக்க, இருக்க — எல்லாம் அவர்கள் நமக்கு உறு துணையா யிருந்து கற்பித்தார்கள். அறிவு முளை அரும்பாத நாளில், தாய்மார் செய்வதைப் பார்த்துப் பார்த்து, உணர்ந்து உணர்ந்து நாமும் அவர்கள் போல் செய்தோம். இப்போது, அந்த இளம் பருவத்துப் பழக்கங்கள் நம்முடைய வாழ்க்கைப் பயிற்சியின் தள வரிசைப் பரப்புப் போல், வெளியே தோற்றமல், உள்ளுக்குள்ளே இருந்தபடி, நம்மைச் சுமந்து நிற்கின்றன. ஏழை பணக்காரனுகலாம், பணக்காரன் ஏழையாகலாம். பட்டிக் காட்டான் பட்டினம் போகலாம். பட்டினத்தான் பட்டிக்காடு போகலாம். இடம் பெயர்ந்து போகும் பொழுதெல்லாம், புதுப் புது மனிதர்களையும், புதுப் புதுச் சூழ் நிலைகளையும் நாம் உணர்ந்து கொண்டால் ஒழிய அவர்களோடு, அவற்றோடு நாம் ஒப்புரவாய்ப் பொருந்திப் போக இயலாது. மக்கள் பலவிதம், அவர்களது பழக்க வழக்கங்கள் முதலானவை பலவிதம் என்பன நமக்குத் தெரியத்தாம் தெரியும். சும்மா தெரிந்தால் மட்டும் போதுமா? ஏட்டளவில் கொண்ட அறிவு அன்றாட வாழ்வுக்கு உதவுபடியாகுமா? ஆகாது. ஏன்? மாட்டு வண்டியை எப்படிப் பந்தயம் போட்டு விரட்டி ஓட்டுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். பல வண்டிகளில் நாமும் கூட இருந்து உருண்டோடி யிருக்கிறோம். வண்டி யோட்டிகள் செய்கிற செயல்களையும் பார்த்திருக்கிறோம். ஆனல் எடுத்த எடுப்

யில், முச்சுடல் பலகையில் அமர்ந்து, மாட்டின் கயிற்றைப் பிடித்து, வண்டியை விரைவாய் நடத்த முடிகிறதா? இல்லை. பயிற்சி வேண்டும். அது மட்டும் போதுமா? போதாது. இன்ன மாதிரியான பாதையில் இன்ன மாதிரியான மாட்டை இன்ன மாதிரியான வண்டியில் பூட்டி ஓட்டும் போது, பக்கத்தில் வருகிற இன்னின்ன மாதிரியான வண்டிகளை இன்னின்ன மாதிரியில் வெல்லலாம் என்று உணர வேண்டும். அப்போது, நம்மையும் அறியாமல், முற்றும் இயல்பாய், மிக்க சரளமாய் நாம் நிலைமைக்குத் தக்கபடி செயல் புரிவோம்.

வாழ்வில் பல திறப்பட்ட சக்திகள் எதிரும் புதிருமாய் மல்லிட்டுப் பந்தயஓட்டம் ஓடிக் கொண்டிருக்கையில், அமைவாக எண்ணமிட்டு ஆராய்ந்து செயல் புரிய நமக்குக் கட்டி வராது. உணர்ச்சி மீறி அவசரப்பட்டுப் பதறினாலும் செயல் நடவாது. வீட்டுப் பழக்கத்தால், இயற்கையான அமைவான உந்துதல்களால் உண்டான உணர்வைத்தான் நாம் வழிகாட்டியாய்க் கொண்டு அந்த அந்த நிலையைச் சமாளித்துக் கொள்ள இயலும்.

உண்பது, உடுப்பது, நடப்பது இவை பெரும்பாலும், வெறும் உணர்வுப் பழக்கத்தாலேயே இயல்வன. உறுப்புக்கள் பெறுகிற பயிற்சி உணர்வு. உணவைப் போலத்தான் உணர்வும். நாடோறும் புதுப் புது உணர்வுபெற்ற வண்ணம் இருக்க வேண்டும். சூழ் நிலைக்குத் தகுந்தபடி உணர்வு

> தமிழ் இசையைக் கெடுத்தவை ஆர்மோனியமும் தியாகய்யர்கீர்த்தனமும் என்று பாரதியார் சொன்னார். தியாகய்யர் ஒருஇசைப் புலவர்; மொழிப் புலவரல்ல. நல்ல கவிதைக்கு மொழிப் புலமையும் வேண்டும் வெறும் இசைப் புலமை மட்டும் போதாது. 'அவர் ஏன் மொழிப் புலவரல்ல' என்றால் அவரது பாடல்களிலே பல பிழைகள் இருக்கின்றன என்று தெலுங்கர்களே சொல்லுகின்றார்கள்.
>
> — பாரதிதாசன்

பெற்று, அப்படிப் பெற்ற உணர்வுகளைத் திட்பமும், செறிவும், சரளமான இயக்கமும் பெறச் செய்ய வேண்டும். கைக்கு எட்டாததை மறப்பது நன்று என்று நமக்குத் தெரிந்தாலும், மனம் ஏங்கத்தான் செய்யும். மன ஏக்கத்தை ஒழிக்கப் புத்துணர்வு பெறவேண்டும். பழைய உணர்வு திட்பம் பெறுதபடிக்கு அதைப் பட்டினி போடவேண்டும். வேண்டிய புதிய உணர்வை நிறைய நிறையத் தரக்கூடிய நண்பர்களோடு பழகவேண்டும். அத்தகைய இடங்களில் போய் இருக்கவேண்டும். இந்த உணர்வைப் பெறுவது எப்படி? பழைய கட்டடத்தைப் புதுப்பிப்பது எப்படி? ஓட்டை கண்ட இடத்தை இடித்துத் தள்ள வேண்டும். ஓட்டையான உணர்வு அதிர்ந்து பெயர்ந்து அற்றுப் போகவேண்டும். அது உணர்ச்சியால்தான் முடியும். அதாவது, எரி கொள்ளிபோல் நம் மீது வந்து மோதுகிற உணர்வு அடுக்கத்தால் நாம் உணர்வு பெற்று வாழ வழி காண முடியும். ★

குழந்தை வளர்ப்பு முறை



கண்ணன்

தமிழரசி

2. தூயநீர்

சுத்தக்காற்றைப் போன்று தண்ணீரின் சுத்தமும் அவசியமாகும். குழந்தைகளுக்கு உபயோகப்படுத்தும் நீர் சுத்தமாக இருக்கவேண்டும். சூரிய ஒளிபடாத நீர், காற்றுப்படாத நீர், சேறுள்ள நீர், இலையுதிர்ந்த நீர், புழுநிரம்பிய நீர்,— முதலிய நீரைக் கொண்டு குழந்தைகளைக் குளிப்பாட்டவோ, அவைகட்குக் குடிக்கக் கொடுக்கவோ உபயோகிக்கக் கூடாது. மிகவும் சிறு குழந்தைகளைக் குளிப்பாட்ட வெதுவெதுப்பான சுடுதண்ணீர் போதுமானது. இரண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகட்குச் சுத்தமான குளிர்ந்த தண்ணீர் குளிக்க உபயோகித்தல் நலம். வெந்நீர், வியாதியுடைய குழந்தைகட்குத்தான் அவசியம். குழந்தைகட்குக் குடிக்கக் கொடுக்கும் நீரைக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்வது உத்தமம். குழந்தைகளின் துணி, சட்டைகள் முதலியவற்றைத் தூயநீரில் துவைத்து வெயிலில் உலரவைத்து உபயோகித்தல் நலம். குழந்தைகளுக்கு ஊற்று நீரும், ஓடு நீருமே மிகவும் நல்லது.

குழந்தைகளின் தேகத்தைச் சுத்தமாக வைத்திருப்பது மிகவும் அவசியம். "புறத்தூய்மை நீரால் அமையும்" என்பது சிந்திக்கற்பாலது. குழந்தைகளைத் தினமும், காலையில் 10 மணிக்குச் சுத்தமான குளிர்ந்த நீரில் நீராட்டுவது மிகவும் நல்லது. குழந்தைகட்கு ஏதாவது வியாதிவந்து குணமாகிக் கொஞ்ச தினங்கள் ஆகியிருந்தால் வெந்நீரில் குளிப்பாட்டுவது சாலச் சிறந்தது. வெந்நீர் நன்றாகக் கொதித்து ஆறியதாக இருக்க வேண்டும். கொதிக்கும் தண்ணீரோடு குளிர்ந்த நீரைக்கலப்பது அவ்வளவு நல்லதல்ல. சிகைக்காய்ப் பொடி அல்லது வாசனைப்பொடி தேய்த்துக் குளிப்பாட்டுவது நலம். எல்லாக் குழந்தைகட்கும் மஞ்சள் தேய்ப்பதால் அவைகள் சருமமும், தேகமும் ஆரோக்கியமடையும். குழந்தையைக் குளிப்பாட்டியதும் அதை உலர்ந்த, சுத்தமான துணியால் நன்றாகத் துடைக்க வேண்டும். துடைக்கும்போது காதுகள், மூக்குத்துவாரங்கள் கழுத்து முதலிய பாகங்களைத் துணிகளால் நன்றாகத் துடைக்க வேண்டும். வியாதி ஒட்டி இருக்கும் குழந்தைகள் பலநாட்களாகக் குளிக்க வசதியில்லாவிடில் வெந்நீரில்



துணியை நனைத்து தேகத்தில் தேய்த்து அழுக்கை நீக்கலாம். அதனால் தேகம் சுத்தமடையும். குழந்தைகளை ஒரு வயது வரை இரண்டு நாட்களுக்கு ஒருதடவை எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவது நல்லது. பின் 5 வயது வரை 4-நாட்களுக்கு ஒரு தடவை குளிப்பாட்டவேண்டும். குழந்தைக்கு எண்ணெய் நீராட்டும்போது ஆறு மாதங்கள் வரை இரு கண்களிலும் நல்லெண்ணெயைக் கட்டிக் கொஞ்ச நேரம் ஊறவைத்துப் பின் தேகத்தில் தேய்த்துக் குளிப்பாட்டுவது மிகவும் நலம். ஒவ்வொரு குழந்தைக்கும் காலையில் எழுந்தவுடன் விளக்கெண்ணெய் (ஆமணக் கெண்ணெய்) கொஞ்சம் தலை உச்சியில் தேய்ப்பதால் குழந்தைக்கு ஆரோக்கியம் உண்டாகும்.

குளிப்பாட்டப்பட்ட குழந்தையின் தலை உச்சியில் கொஞ்சம் பவுடரைத் தேய்த்தால் அதன் தலையில் நீர் ஏதாவது இருந்தால் அதற்கு நல்லது என்று கூறுவர். ஒரு வாரத்தில்மூன்றுநாட்கள் அப்படிச் செய்வது நலம். குளித்தபின் முகத்தில் பவுடர் போடுவதால் குழந்தையின் தேகத்தில் துர்நாற்றம் இல்லாதபடி காக்கும். கண்களுக்கு மையிடுவது நலம். கண் மை கண்களிலுள்ள கெட்ட நீரை எடுத்து விடுமென்பர்.

குழந்தைக்குச் சுத்தமான ஆடை அணிவிக்க வேண்டும். அவ்வுடை இறுகலாக இருக்கக் கூடாது. குழந்தைக்கட்கு மெல்லிய துணியில் தைக்கப்பட்ட சட்டையே மிகவும் நல்லதாகும். உல்லன் அல்லது கம்பள நூல்களால் தைக்கபபட்ட சட்டைகள் போடுவதில் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஏனெனில் கம்பளச் சட்டைகள் சூட்டை அதிகமாக உண்டு பண்ணும். ஆகையால் அவை நம்நாட்டுக்கு ஏற்றவை அல்ல. ஆடைகள் நனைந்து விட்டால்

அவைகளை உடனுக்குடன் மாற்றவேண்டும்.

குழந்தைகளின் படுக்கையை மிகவும் சுத்தமாகவும், ஆரோக்கிய முள்ளதாகவும் வைத்துக் கொள்ளவேண்டும். குழந்தைகளைத் துணிகளால் கட்டப்பட்ட ஒடுங்கிய தொட்டிலில் கிடத்துவதால் அவைகட்குக் காற்றுசரியாக வீசுவதில்லை என்றும், நுரையீரல் முதலியன விரிவடையாமல் தடைப்படுகின்றன வென்றும் பலர் அம்முறையை இப்போது விலக்கி வருகின்றனர். கீழே குழந்தை விழுந்து விடும். ஆகையால் அது உசிதமல்ல. கழுத்தைத் தொங்க விட்டுக் கொண்டே சில குழந்தைகள் கிடக்கும். பெரியோர் கவனியாவிடில் அப்படியே தலை தொங்கிக் கொண்டிருக்கும். அதே தேக ஆரோக்கியத்திற்குக் கெடுதலைக் கொடுக்கும். பிரம்புத்தொட்டில்களே மிகவும் ஏற்றவை. குழந்தைகட்குப் பஞ்சு மெத்தை போடுவது உசிதமல்ல. அது அதிக சூட்டைக் கொடுக்கும். துணிகளை வைத்துத் தைக்கப்பட்ட மெத்தை மிகவும் நல்லது. குழந்தைகளின் மலஜலத்தை நீக்குவதற்கு வசதியாக இருக்குமென்று சிலர் ரப்பர் விரிப்புகளை உபயோகிக்கின்றனர். அது குழந்தைகளின் ஆரோக்கியத்தைக் கெடுக்கும். படுக்கையை இரண்டு நாட்களுக்கு ஒருதடவை வெய்யிலில் போடவேண்டும். அதோடு எட்டு நாட்களுக்கு ஒரு தடவை அவைகளை வெளுக்கவேண்டும். குழந்தைகள் இப்பக்கம் அப்பக்கம் புரளவிடாமல் சிலர் தலையணைகளை வைத்து விடுகின்றனர். அது தவறாகும். குழந்தை புரண்டு நன்றாகப் படுக்க வேண்டும். குழந்தைகள் மேல் சூரிய வெளிச்சம் படவேண்டும். காலை வெளிச்சமும் மாலை ஒளியும் குழந்தைகளின் சருமத்திற்கு நல்ல ஆரோக்கியம் தரும். கண்கள் கூச்சமின்றி ஒளியை நோக்கும். சூரிய வெளிச்சம் குழந்தையின் மேல் படாவிட்டால் அதன் கண்கள் கூச்சமடையும். வெய்யிலில் விழிப்பதற்குப் பின் அஞ்சும்.

சட்டப் பள்ளியாம்!

'இந்துலா' என்றிடுவார் அடடா அங்கே
என்னென்ன நடக்கிறது வெட்கக் கேடு!
தந்திரமாய் வடமொழியின் நூலை எல்லாம்
சட்டமென ஆங்கிலத்தில் எழுதிப் போட்டு,
சந்தியெலாம் சிரித்திட்ட மனு தர்மத்தைச்
சட்டமெனக் கூறுகிறார், படிக்கச் சொல்வார்
இந்தஅநி யாயமதைச் "சட்டப் பள்ளி"
என்றுரைக்கின் றார்இன்னும்...............?

மன - வேதனை

தமிழ்வாணன்

சிந்தித்தேன் .... சிந்தித்தேன் ...... சிந்தித்தேன் ...... அதனால் என் மூளையில் பழுப்பேறி மூளை, மஞ்சள் நிறம் கண்டிருக்கிறது! மண்டை ஓடு, கபாலம், ஆட்டம் கண்டுவிட்டது! கண்கள் பஞ்சடைந்து விட்டன! ஆனாலும், இன்னும் என்னால் அதன் காரணத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை! எதன் காரணத்தை?

சொல்கிறேன்:

ஒரு சிறு பிரச்னை! அந்தத் துரும்புப் பிரச்னை எலும்புகளைக் குடைந்து, தேய்த்து மனிதனை உருவழித்து விடுகிறது! முதலையின் மேல்ஓட்டை நொறுக்கும் சக்தி இயங்கும் சக்திகளில் எதற்காவது உண்டா? ஆனால்...... அதன் அடி நடு வயிற்றில் ஒரு சிறு காயம் ஏற்பட்டு விட்டால், ஓட்டை விட்டு உயிர் ஓடி விடுகிறது! நாம் சிந்திக்க வேண்டிய இடம் இங்கே தான் இருக்கிறது. சக்திகளைப் பிரித்தால் இரு முனை சக்திகளும் மனித சக்திகளை இயக்கும் சக்திகளும் சரி, எல்லாம் மனித சக்திகளின் கைப்பிடிகளே. மனிதன் அவ்வளவு சக்தி நிறைந்தவன்! எந்த இமய சக்தியையும் ஒரு சிறு பிரச்னை ஆட்டம் காண வைக்கிறது. இதற்குச் சான்று வேண்டாமா? என்னையே தான் நான் சாட்சியாக எடுத்துக் கொள்ளப் போகிறேன்.

"இன்பம்...இன்பம்" என்கிறார்கள். இந்தச் சொல் நிலை எனக்குத் தெரியும். ஆனால், இதன் பொருள் எனக்குத் தெரியாது. ஒருவேளை படித்த காரணத்தால், பழகின காரணத்தால் இதன் பொருள் எனக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் அதன் அர்த்தத்தை என்னால் அனுபவிக்க முடியவில்லை. அதன் பலனை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அந்த அனுபவ நிலை நிறை எப்படி இருக்கும் என்பதையும் என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

ஏன் முடியவில்லை?

அதைத்தான் நீங்கள் சொல்ல வேண்டும்!

இன்பத்தை அறியாமல் இருக்க எனக்கு ஒன்றும் அப்படி வயதாகி விடவில்லை. கொஞ்ச வயதுதான். இளம் வயதுதான். ஒரு பாம்பை மிதிக்கக்கூடிய வயதுதான்.

குத் திராணி கிடையாது! அது வேறு விஷயம்.

இந்த வயதிலேயே எனக்கு மெல்ல மெல்ல வெறுப்புப் படருகிறது. ஏன்? எனக்குத் தெரியாது. நீங்கள் சொல்லுங்கள்!

கையிலே 'ஓட்டம்' இல்லாவிட்டால், காற்றைக் குடித்துவிட்டு வேதாந்த மனப்பான்மை பழுத்த நிலையில் வார்த்தைகளைக் கொட்டலாம்! இது வழக்கம். உண்மை நிலை. ஆனால், நான் ஒன்றும் அப்படிப் பஞ்சை அல்ல. வேண்டிய, போதுமான சிக்கல் அல்லாத அளவுக்குப் பணம் இருக்கிறது. எனக்கு இந்த வழியிலே வெறுப்புப் பிறக்கத் தேவை இல்லை, பின் ஏனோ எனக்கு இந்த வெறுப்பு!

காதல் (பால்) முறிவால் முகம் வெளுத்து, உலகம் கசக்கலாம். அந்த 'மூஞ்சிகளை' நான் கூடச் சில சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறேன். பட்டினத்தில் இல்லாத அதிசயங்களா? ஆனால், எனக்கு அந்த மாதிரி முறிவுகள் எல்லாம் கிடையாது. பால் இன்னும் முறியவில்லை! பின் எனக்கு ஏனோ இந்த நிலை!

என் வாழ்க்கையில் மூடிப் பாதுகாக்க வேண்டிய பரம ரகசியங்கள் எதுவும் கிடையா. மனத்திலேயே வைத்து-பழுக்க வைத்து-புழுங்கி, வெம்பி வேதனையுறும்படி எனக்கு எந்தவிதமான விரக்தியும் கிடையாது. பெரியவர்கள் நிலையில் வைத்துச் சொன்னால், என்னெஞ்சு வேகும்! பின் பக்குவப்பட்ட இந்த நிலையில், துள்ளித் திரிய வேண்டிய நான்—கவலையற்று ஓடித்திரிந்து ஆடிப்பாட வேண்டிய நான் ஏன்—நான் இப்படி இருக்கிறேன்?

எனக்குக் குறை எதுவும் கிடையாது. என் நெஞ்சில் தேங்கி உறையும் விஷயம் எதுவும் கிடையாது. மனிதத் தத்துவத்திற்கு மீறின நிலையில் ஏற்பட்ட சில நீக்க முடியாத நிரந்தரக் குறைகள் உண்டு. அந்தக் குறைகள் என்னிடத்திலும் இருக்கின்றன. இதை நான மறுக்கவில்லை. ஆனாலும், இதுதான் அதற்குக் காரணம் என்று சொன்னால் பொருந்துமா?

என் சக்தி வளர்ந்து கொண்டிருக்கிறது. எந்த வழியிலும் நான் அதை விரையமாக்கவில்லை. சக்தியைப் பக்குவமாகப் பண்படுத்தி வருகிறேன். ஆனால், ஒரு வேளை வலுவற்ற அடிப்படையில் இந்த வெறுப்புப் புரை வைத்திருக்கலாம். சிந்திக்கும் நேரத்தில் எல்லாம் சக்தியின் வளர்ச்சிக்குமுக்கியத்துவம் கொடுத்து, அதை வளர்க்கப் பாடுபட்டு வரும் எனக்கு, இந்த வலுக்குறைவு எங்கிருந்து வரும்? இந்த இறுதி நிலையிலும் என்னால், எனக்கு ஏற்பட்டிருக்கும் அந்த வெறுப்புக்கு நேர்மையான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையே!

எப்பொழுதும் என் மனத்தை ஒரு வேதனை அரித்துக் கொண்டே இருக்கிறது.

இந்த வேதனையின் அரிப்பைச் சில சமயங்களில் என்னால் தாங்க முடியாமல் போய் விடுகிறது! எந்த வேலையைச் செய்து கொண்டிருந்தாலும், அந்த அரிப்பு எனக்கு இருக்கிறது. எந்த நேரத்திலும் எனக்கு இந்த வேதனைத் தினவு இருக்கிறது. இரவு தூங்குகிறேன். அயர்ந்து தூங்குகிறேன். அப்பொழுது அலுப்பு என் உணர்ச்சிகளை ஒடுக்கி மரக் கட்டையாக்கி விட்டிருக்கிறது. அந்த நிலையிலும், நட்ட நடு நிசியிலும் எனக்கு இந்த வேதனைத் தினவு இருக்கிறது!

இந்த மனத்தினவின் மூல நிலை எனக்குத் தெரியாதே தவிர, அது எப்பொழுது அதிகமாக இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஆனால் இந்த வேதனையின் மூல நிலையை என்றைக்குமே என்னால், அறிந்து கொள்ள முடியாது என்றுதான் நினைக்கிறேன். அந்த வேதனைப்புற்று வளர்ந்து கொண்டே இருப்பதை அறிகிறேன். உயிர் அந்தப் புற்றுக்குள்ளே கிடந்து மூச்சுவிட முடியாமல் திணறுகிறது. உங்களில் யாராலாவது இந்தப் புற்றை இடித்துச் சமப்படுத்திச் செம்மி, உயிரைத் தாராளமாக மூச்சுவிடும்படி செய்ய முடியுமா? யாரால் முடியப் போகிறது? இது யாராலும் முடியாத விஷயம்! இதற்கு ஒரே விடுதலை நான் செத்து மடிவதுதான்! இந்த வேதனைச் செல் இதயத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அரித்துக்கொண்டேதான் இருக்கும். உயிர்ச் சலனம் இருக்கும் வரை இந்த வேலை நடந்து கொண்டேதான் இருக்கும்!

இந்த அனுபவத்தில் நான் அறிந்திருப்பது ஒன்று உண்டு. என்னைத்தான் நான் நம்புகிறேன். என் சக்தியில்தான் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த நினைப்பால் எனக்குச் சில சமயங்களில் தேட்டம் பிறக்கிறது, அப்பொழுதுதான். நான் கொஞ்சம் சுறுசுறுப்பாக இருக்கின்றேன்.

இந்த வேதனை எப்பொழுது எனக்கு அதிகமாகிறது தெரியுமா? புது மனிதர்களின் பழக்கம் அதிகமாக அதிகமாகத்தான். எனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு நண்பர்களும் என் மனப்புண்ணைக் கிளறி, என் நெஞ்சை ரத்தக் களரியாக்குகிறார்கள். இருக்கின்ற வேதனையைத் தணிக்கும் நண்பர்களாக எனக்கு ஒருவர் கூடக் கிடைக்க வில்லை! கிடைக்க மாட்டேன் என்கிறார்கள்!

எந்தக் கோணத்தில் பார்த்தாலும் இருள் கலப்பு இல்லாத வெளிச்சத்தை என்னால் பார்க்க முடியவில்லை. நட்ட நடுப்பகலிலும் இருள் கலந்த வெளிச்சத்தைத் தான் என்னால் பார்க்க முடிகிறது. எனக்குக் குறைவு இல்லாத நிறைவு தட்டுப்பட மாட்டேன் என்கிறது. பூரண நிறைவு என்று ஒன்று இருப்பதாக எனக்குத் தெரியும். ஆனால், அதைப் பார்க்கவோ, அனுபவிக்கவோ முடியவில்லை!

நான் பார்க்கும் ஒவ்வொரு பார்வையிலும், நான் செயலாற்றும் ஒவ்வொரு செயலிலும், நான் செய்யும் ஒவ்வொரு முயற்சியிலும் அந்த வேதனைதான்

ஊடுருவி நிற்கிறது. இந்த வேதனையை அகற்றி என்னால் எதையுமே செய்ய முடியவில்லையே!

நான்கு பேர் சேர்ந்து பேசும் கூட்டத்திலே என்னால் கலந்து கொள்ள முடியவில்லை. எந்த விஷயத்திற்கும் என்னால் வாய்விட்டுச் சிரிக்க முடியவில்லை. சிரிக்கத்தான் முயலுகிறேன். வாய்விட்டுக் 'கலகல' வென்று சிரித்து என் நெஞ்சை லேசாக்கிக் கொள்ள எனக்கு ஆசைதான். ஆனால் முடியவில்லையே!

எல்லோரும் வயிறு வெடிக்க விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். அதைப் பார்த்து நானும் வலுவில் சிரிக்க முயலுகிறேன். நெஞ்சிலிருந்து உத்வேகத்துடன் 'குபுக்' என்று சிரிப்பைக் கிளப்பிக் கொண்டு வருகிறேன். ஆனால், தொண்டைக்கு வந்ததும், சிரிப்பின் முழுவேகமும் குறைந்து போகிறது. சிரிப்பு வந்த வேகத்தில் பிறந்த காற்று என் இரண்டு உதடுகளையும் மெல்லப் பிரிக்கிறது. உதடுகள் மெல்லப் பிரிந்த சந்தில் பற்கள் லேசாக வெளியே தெரிகின்றன. இது தான் நான் சிரிக்கும் சிரிப்பு! இவ்வளவு தான் என்னால் சிரிக்க முடிகிறது. 'இது செத்த சிரிப்பு. சிரிப்பில் வேகம் இல்லை. பிரேதத்தின் உதடுகளை பிரித்து மூடியது போல் இருக்கிறது.' இவைகள் எல்லாம் எனக்குத் தெரியும். ஆனாலும் இவ்வளவு தானே என்னால் முடிகிறது!

துக்கம் கலந்து ஊறி நிற்கும் இந்த நினைவுகளை என்னால் எந்த நிலையிலும் மறக்க முடியவில்லை. தனிமை நிலையில் இந்தத் துக்க நினைவுகள் அலை அலையாக எழும்பி என் உயிர்ப்பை அலைக்கின்றன. நான் அறிய, நடந்த மகிழ்ச்சி நினைவுகள் ஏனோ எனக்கு நினைவுக்கு வரமாட்டேன் என்கின்றன!

இப்படி இந்த வேதனை என் உடம்பு முழுவதும் பரவிக் கிடக்கிறது. இந்த வேதனைக்குக் காரணத்தை என்னால் எந்த விதத்திலும் அறிய முடியவில்லை. உங்களாலாவது முடியுமா? ★

நினைவுப் பாதையில்

இளமைப்பித்தன்

நான் ஒரு பிரபல கதாசிரியை அல்ல. அப்படியிருந்திருந்தால் காதல் கட்டத்தையோ, அல்லது நெஞ்சு திடுக்கிடும் படியான நிகழ்ச்சிகளைக்கொண்டோ கதையை ஆரம்பித்து இருக்கலாம். ஆனால் இது கதையல்லவே! என் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களே அவ்வளவும். இனி, மேலே படியுங்கள்.

'நீலா'

* * *

'கல்யாண மாகியும் பிரம்மசாரி,' கடன் வாங்கியும் பட்டினி' என்று சாதாரணமாகச் சொல்லுவார்கள். என்னைப் பொறுத்தவரையில் 'கல்யாணமாகியும் கன்னிப் பெண்' என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. நல்லவேளையாக யாரிடமும் கடனும் வாங்கவில்லை. பட்டினியாகவும் இருக்க வில்லை. சர்வசாதாரணமான குடும்பந்தான் எங்களுடையது. என் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நான் ஒரே பெண். என் கல்யாணத்திற்குப் பிறகு, அப்பா கிராமத்திலேயே குடும்பத்தை நடத்திக்கொண்டிருந்தார். அந்த கிராமத்திற்குப் 'பூங்குளம்' என்று பெயர்! காவேரி நதிக்கரையின் மீது உள்ளது!.

ஒருநாள் மாலை.

குடத்தை என் பக்கத்தில் வைத்துவிட்டு, படித்துறையின் மீது உட்கார்ந்தபடியே தண்ணீரில் கால்களைத்தொங்கப் போட்டுக் கொண்டிருந்தேன். மேற்குத் திசையில் செவ்வானம் காட்சிஅளித்தது. கீழ்த் திசையிலோ மழைமேகங்கள் சூழ்ந்து இருண்டு கொண்டு வந்தது வானம்! அங்குமிங்குமாக மின்னல்கள் தெறித்தோடிக் கொண்டிருந்தன. இடிகள் முழங்கும் சப்தம் மந்தமாக கேட்டது. நான் இருந்த நிலையைத்தான் அது அப்படி எடுத்துக்காட்டுகிறதோ என்று எண்ணினேன்.

ஒருபுறம் அந்தி வானத்தின் அழகு, மறுபுறம் கோரமான காட்சி! என் மனத்திலெழும் எண்ணங்களைப்போல அங்கே மின்னல்கள். எழுந்த எண்ணங்கள் குமுறுவதைப்போல இடிகளின் கர்ச்சனை! வாடைக் காற்று சிலு, சிலுவென்று வீச ஆரம்பித்தது.

அந்த வேளையில் என்னை யாராவது பார்த்திருந்தால் வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டு ஆற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளவந்திருக்கிறாளோ என்றுதான் எண்ணுவார்கள்.

மாலே நேரங்களில் கணவனு டன் கைகோர்த்துக் கொண்டு வெளியில் உலாவி உல்லாச மாக வாழவேண்டிய பருவத் தில், இப்படித் தன்னந்தனி யாக, ஒரு குக்கிராமத்தில், கவலேப்பட்டுக் கொண்டு உட் கார்ந்திருப்பது எனக்கே அரு வருப்பாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது?

உண்மையாகவே எனக்கு வாழ்க்கையில் வெறுப்பென் பது அடியோடு இல்லவே இல்லே. வாழவேண்டும் என்றுதான்தோன்றுகிறது.

ஆனால், உலகம் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலருக்குத் தான் 'வாழ்க்கை' என்ற பதத் திற்குச் சரியான அர்த்தத் தைக் காண்பித்திருக்கிறது. அவர்களெங்கே, நான் எங்கே? காற்று பலமாகவிசவே மழைத் துளிகள் விழத்தொடங்கின. குடத்தில் தண்ணிரை எடுத் துக் கொண்டு விடுதிரும்பி னேன்.

அப்பா அறையில் உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந் தார். அம்மா கூடத்தில் விளக் கேற்றி வைத்து விட்டுச்சுவாமி படத்திற்குப் பூஜை செய்து கொண்டிருந்தாள். அப்பா என்னே அழைத்து 'நிலா' சிக் கிரம் உன் அம்மாவை, இங்கே வரச்சொல்லு என்ருர்.

அப்பாவின் போக்கே தனி! அம்மா படத்திற்குப் பூஜை செய்யவோ, நாள் கிழமைகளில் விரதமிருக்கவோ, ஆரம்பித் தாளானல் அவ்வளவுதான் தாண்டி விட்டு வேடிக்கை பார்ப்பது தான் வேலே. அப்பொழுது அம்மாவின் முகத்தைப்பார்க்க வேண்டுமே!

"என்ன வேணும் அப்பா?" என்றேன்.

"குடிப்பதற்குத் தண்ணிர் வேண்டும்"

அம்மா, பூஜை செய்து கொண்டிருப்பதை அப்படியே விட்டு விட்டு "என்றைக்குத் தான் எனக்குக்கதிமோட்சம் கிடைக்குமோ பகவானே" என்று எரிந்து விழுந்து கொண்டே அவர் முன்னுல் போய் நின்ருள்.

"பூஜையும், புனஸ்காரமும் என்றையதினம் இந்தநாட்டை விட்டு வெளியில் ஓடுகின்ற னவோ அன்றைக்குத்தான்" என்ருர் சிரித்துக்கொண்டே.

"இல்லே! தாடிக்கிழவன் தொலேந்தால்தான்" என்ருள் அம்மா!

பெரியாருக்கு அவள் வைத்த செல்லப் பெயர் அது.

"சரி, சரி, என்ன வேணும் சிக்கிரம் சொல்லுங்கள்"

"காவேரி"

"ஏன்? உங்கள் பெண்ணைக் கேட்டு வாங்கிக் கொள்ளக் கூடாதோ?"

"தண்ணீரும் காவிரியே" என்ற கம்பன்பாட்டு என் கவனத்திற்கு வந்தது. நான் மௌனமாக நின்று கொண் டிருந்தேன்.

"அது ஊற்றுநீர், அங்கே தண்ணீர் கிடைப்பதற்குக் கொஞ்சம் நாழியாகும்" என்ற அப்பாவின் சொல் என் மனத் தில் ஊடுருவிப்பாய்ந்தது.

"தண்ணீரும் காவிரியே, தார்வேந்தன் சோழனே; மண் ணாவதும் சோழ மண்டலமே;" என்றபாட்டின் கடைசி வரியை

மாற்றி "மன்னனும் என் மன மண்டலமே" என்று பாடவேண்டும் போலத்தோன்றியது'.

என் மன்னன மனமண்டலத்திலிருந்து அன்பு ஊற்று பெருகத்தான் செய்தது. கண்களில் அதன் பிரதிபலிப்பாகக் கண்ணீர் கசிந்தோடிற்று; நான் அங்கிருந்து நகர்ந்தேன். வெளியில் மழை பொழிய ஆரம்பித்தது.

அன்றிரவு நான் தூக்கத்தின் வாசலைக்கூட எட்டிப் பார்க்கவில்லை, படுக்கையில் படுத்துக்கொண்டு சாளரத்தின் வழியாக வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தேய்பிறைக் காலமானதால், நிலவின் ஒளிவட்டம் பின்னப்பட்டுப் போயிருந்தது, அந்த மதுரமான நிலவு பொழியும் வேளையில், எனக்கு உடலின்பத்தைப் பற்றிய எண்ணம் எழாமலில்லை.

படக்காட்சியின் முதல் ஆட்டம் முடிந்த பிறகு இரண்டாம் காட்சி துவக்கப்படுகிறதல்லவா? அப்பொழுது படக்கதையும் முதலிலிருந்துதானே ஆரம்பமாகும்! அதேமாதிரியாக 'அவற்றைப்பற்றியநினைவும் என் மனத்தில் திரையிட்டது. அந்தத்திரையின்மேல்-அப்பாவும், அம்மாவும், என் கணவன் வீட்டில் கொண்டுவந்து விட்டு விட்டு ஊருக்குப் புறப்படத்தயாராக நிற்கிறார்கள். வாசலில் வண்டி ஒன்று நிற்கிறது. அதில் இரண்டு மாடுகள் பூட்டப்பெற்றிருக்கின்றன.

அப்பா, அதை என் கணவருக்குச் சுட்டிக்காண்பித்து "மாப்பிள்ளை, பார்த்தீர்களா இந்த வண்டியை? குடும்பமாகிய வண்டியையும், இதே மாதிரிதான் கணவனும், மனைவியும் இழுத்துச்செல்லவேண்டும்' என்கிறார்.

"அப்படியானால் வண்டிக்காரன் யார்? வண்டியை எந்தப்பாதையில் ஓட்டிச்செல்லுவது?" என்ற கேள்விக்கொக்கி எங்களிருவருடைய பார்வைகளிலுமே தோன்றுகிறது.

"உங்கள் அறிவே வண்டிக்காரன், அன்புதான் வண்டி செல்லும்பாதை" என்ற பதில் விடுப்பதைப்போல அப்பா சிரிக்கிறார். "அப்பொழுது இன்னும் கொஞ்ச நாட்கள் கழிந்ததும், வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு, கீழே இறங்காமல் பிடிவாதம் பிடிக்கும் பிரயாணிகளுக்குப் பஞ்சமே இல்லை" என்று சொல்லிவிட்டு என் மாமியாரும், மாமனாரும் நகைக்கிறார்கள். வெட்கத்தால் எங்களிருவருடைய முகமும் சிவக்கிறது. அம்மாவின் பாசம் என்னைப் பிணிக்கிறது; அதில் கட்டுண்டு நான் தவிக்கிறேன்.

வண்டி நகர்ந்து செல்லுகிறது.

கண்களில் நீர்கசிய, நான் சக்கரங்களின் அடிச்சுவட்டைப் பார்த்துக்கொண்டே நிற்கிறேன். இந்த இருபது வருஷ காலமாகப் பார்த்துப் பார்த்துப் பழகிப்போன அந்த இரண்டு பேர்களுடைய முகங்களையும், இனி வருஷத்திற்கு ஒரு முறையோ இரண்டு முறையோ அல்லது—

நான் திரும்பிப்பார்க்கிறேன். என்னைச் சுற்றிலும் புதியமுகங்களே தென்படுகின்றன. சுதந்

திரமாக வானவெளியில் திரிந்துகொண்டிருந்த கிளியை வீட்டிற்குள் விளையாடவிட்டால் அதற்கு மனிதர்களின் முகங்கள் எப்படித் தோன்றுமோ அதேபோலத்தான இருந்தது என் நிலையும். இந்தக் கிளிக்கும் ஒரு புதிய கூண்டு ஒன்றை என் கணவர் தயார் செய்தே வைத்திருந்தார். அதுதான் படுக்கையறை! எங்களுடைய விளையாட்டு மைதானம் அது.

சீர்திருத்தம் என்ற இலட்சியத்தியில் தன்னுடைய வாழ்க்கையைச் சாம்பராக்கிக் கொண்ட ஒரு தியாகியினுடைய மகள்; உத்தியோகங்களை யெல்லாம் உதாசினமாக உதைத்துத் தள்ளிவிட்டுத் தமிழுக்காக—தமிழ் நாட்டிற்காக உழைக்கும் ஒருவருடைய மகள் ஒரு சீர்திருத்த வாதியை மணம் செய்து கொண்டோம் என்ற பூரிப்பினால் உள்ளம் மகிழ்ந்திருந்தேன். என் கணவர்—பெயரைத்தான் சொல்லிவிடுகிறேன்; அவர் பெயர் ராகவன்—வெளியுலகத்தில் ஒரு பெரிய சீர்திருத்தவாதி: சீர்திருத்தமென்ற பெயரால் குடும்பத்தை நடுத்தெருவில் நிறுத்துபவர் அல்ல! ஒரு மோட்டார்த் தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டிருக்கிறார்!

ஒருநாள் மாலை! வெள்ளிக்கிழமை; "வருகிறீர்களா வெளியில்போய்ச்சற்று உலாவிவிட்டு வரலாம்" என்று கேட்டேன். அன்றுதான் நான் அவரை முதன் முதலாக வெளியில் போக அழைத்தேன்.

ஒரு குழந்தை ஆசையோடு 'பலூன்' ஒன்றைக் கையிலெடுக்க அது 'பட்' டென்று உடைந்து விட்டால் எப்படியிருக்கும்? "இன்று வெள்ளிக்கிழமை, கோயிலுக்குப் போகலாமே; கொஞ்சம் இருட்டட்டும்" என்றார். அவர் பதிலைக் கேட்டதும் 'சுரீல்' என்று என்னுள்ளத்தை முள் கொண்டு குத்துவதைப் போலிருந்தது; சீர்திருத்தம்! சமூகத்தொண்டு என்ற சொற்களை அவர் வெறும் மேலங்கியாகவே இத்தனை நாட்களாகப் போட்டுக் கொண்டிருந்திருக்கிறார் என்று தெரியவந்தது. உள்ளத்திலெழுந்த வேகத்தை அமுக்கிக் கொண்டு "ஏன் கடற்கரைக்குப் போகலாமே" என்றேன்.

"சட்! கடற்கரையில் 'காலி' களின் கூட்டம்தான் இப்பொழுது நிரம்பியிருக்கின்றது!" என்றார் முகத்தைச் சுளித்துக் கொண்டு. "கோயிலில் மட்டும் என்னவாம்?" என்ற சொல் என் உதட்டை வந்து தொட்டுத் திரும்பிவிட்டது. சொல்லியிருந்தால் அன்று ஏதாவது நடந்து தான் இருக்கும்!

கடற்கரை—கோயில்!

இரண்டு இடங்களிலும் கூட்டம் இருக்கத்தான் செய்கிறது! எல்லோரும் மனிதர்கள் தாம்.—இதில் 'காலி'கள் யார்? வாலிபர்களா? கிழவர்களா? 'கோயிலென்பது தாசிகளின் வீடு' என்று உலகப் பெரியாரான மகாத்மா சொல்ல வில்லையா? அந்தத் தாசியின் வீட்டிலா நான் காலடி எடுத்து வைப்பேன்? அப்படி யென்றால் நானும் ஒரு தாசியா? நான் தாசியானால், எனக்குக் கணவனென்று உரிமைகொண்டாடும் இவரும் ஒரு "காலி" தானே?

என் மூளை கொதிக்கத் தொடங்கியது.

அன்றிரவு படுக்கையின்மீது படுத்துப் புரண்டு கொண்டிருந்தேன். உடைந்துபோன என் கண்ணாடி மனம் சிதள், சிதளாக இதயத்தை அறுத்துக் கொண்டிருந்தது! எங்கிருந்தாவது ஒரு பெண்நாகம் ஓடிவந்து என்னை 'வெடுக்' கென்று கடித்துவிட்டால்கூட நான் அந்தச் சாவை முகம் சுளிக்காமல் ஏற்றுக்கொண்டிருப்பேன்.

இருளில் போடும் சிவப்பு விளக்கைப்போல, அப்பாவின் அந்த வாக்கியம்-

"குடும்பமாகிய வண்டியையும் இதேமாதிரிதான் கணவனும் மனைவியும் இழுத்துச் செல்ல வேண்டும்" என் இருளடைந்த மனத்தில் ஒளிவிட்டது! ஆனால் அது எப்படி முடியும்? நொண்டி மாட்டை வண்டியில் பூட்டிக் கொண்டு எவ்வளவு தூரம் அதை இழுத்துச் செல்ல முடியும்? அப்பா ஏமாந்துபோய் விட்டார்! அவர் மட்டுமா? நானும் கூடத்தான் ஏமாந்து போய் விட்டேன்; இதே சிந்தனையில் நான் அயர்ந்து தூங்கிப்போனேன். நல்லநிசி நேரம்!

மாமாவும், மாமியும் வெளியில் படுத்து நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். என் கையை யாரோ தொடுவதால் 'ஜில்' லென்ற உணர்ச்சி பரவிற்று என் உடல் முழுவதும்!

விழித்துப் பார்த்தேன்! 'அவர்' தான்!

கலைந்து போயிருந்த கிராப்புத்தலை! அகன்ற நெற்றியின் மீது மூன்று திருநீற்றுக் கோடுகள்; அதன் நடுவில் குங்குமப் பொட்டு; விளக்கைப்பொருத்தி விட்டு அவர் என்னருகில் உட்கார்ந்திருந்தார். அவருடைய கண்களில் ஏதோ ஒரு ஒளி மின்வெட்டியது!

"ஏன் எழுப்பினீர்கள்?" என்றேன்.

அதற்கு அவர் பதில் சொல்லாமல் மெள்ள நகைக்கலானர்; விஷயம் புரிந்து விட்டது எனக்கு! மேட்டூர் அணைக்கட்டில் தேக்கி வைத்திருக்கும் தண்ணீரைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் திறந்து விடலாம்- ஒரே அடியாகத் திறந்து விட்டால்? எத்தனை ஜில்லாக்கள் தண்ணீருக்குள் மூழ்க நேரிடும்?

நான் மெள்ளப் பேச்சைத் திறக்க ஆரம்பித்தேன்.

"இன்று உடம்பு சரியில்லை"

"நாளைக்குக் காலையில் எழுந்ததும் ஞாபகப்படுத்து; நல்ல மருந்தாக வாங்கி வருகிறேன்"

"தலைவலி இப்பொழுதே மண்டையைக் குடைகிறது"

என் பேச்சுக்கள் ஒன்றும் அவர் காதில் விழவில்லை! எழுந்து விளக்கை அணைக்கப் போனர். என் மனதில் வேதனை மூண்டது!

முன்பு ஒரு தடவை அவரை நான் தொட்டபோது "இன்றைக்குச் சோமவார விரதம்" என்று சொல்லியது நினைவுக்கு வந்தது. ஆனல் இன்று 'வெள்ளிக்கிழமை' என்பதை மறந்து விட்டார் போலிருக்கிறது!

"நிலா" என்று என்னைச் சீண்டினர்.

"த்சொ, த்சொ, மறந்து விட்டீர்களா?"

"என்ன?"

"இன்று வெள்ளிக் கிழமை யாயிற்றே!"

அணைந்த விளக்கு மீண்டும் எரிய ஆரம்பித்தது! குத்துச் சண்டையில் தோற்றுப்போன பயில்வான் மேடையிலிருந்து திரும்பிப் போவதைப்போல என் அறையிலிருந்து வெளியேறினார் அவர்!

உடலின்பத்தைப் பற்றிய, எண்ணம் எங்களிருவருக்கும் எப்பொழுதுமே ஏககாலத்தில் ஏற்பட்டதில்லை. அப்படியே அது தலைதூக்கினாலும், அவருக்கு 'நாள்' நட்சத்திரமும், எனக்குப்பழி வாங்கும் சுபாவமும் அதைத் தரை மட்டமாக்கி விடும்.'

எப்படியோ மாதங்கள் ஓடி மறைந்தன.

இந்த இலட்சணத்தில் நான் 'கர்ப்பவதி' யாகவில்லை என்பதற்காக மாமாவும், மாமியும், ராமேசுவரத்திற்கு எங்களை அழைத்துக்கொண்டு போகத் திட்டம்போட்டார்கள். சேது அணைக்கட்டும் - பாம்பன் பாலமும் என் நினைவுக்கு வந்தன! எங்களிருவருடைய இதயப் பாலமே முறிந்து போயிருக்கும் போது புராணத்தின் பெயரால் அவர்கள் ஒருபுதிய பாலமிட நினைத்தார்கள். பிள்ளைவரம் வாங்க ராமேசுவரம் கடலில் நீராட வேண்டுமாம், கைகளைக் கோர்த்துக்கொண்டு!

அவர் 'சரி' யென்று தலையசைத்துவிட்டார் ராமேசுவரம் போவதற்கு! யாரோ அவருடைய உறவினர்களைப் பார்க்கப் போவதாகச் சொல்லி 'லிவு' பெற்ற கதையைச் சொல்லிச் சொல்லி சிரித்தார். எவ்வளவு நெஞ்சழுத்தம் அவருக்கு! கடற்கரைக்குப் போக நான் அழைத்தபோது மட்டும் அங்கே 'காலி' களின் கூட்டமாம். இப்பொழுது-?

வெளிக்கும் மட்டும் சீர்திருத்தம் பேசிவிட்டு, பிள்ளைவரம் வாங்கக்குடும்பத்துடன் ராமேசுவரம் போகும் என் கணவன்; தமிழ்நாட்டின் விடுதலைக்காகப் போராடும் என் தந்தை; "கண் மூடி வழக்கங்களெல்லாம் மண் மூடிப் போகவேண்டுமென்று கர்ச்சிக்கும் பெரியார்; தகாத செய்கைகளைத் தவிடுபொடியாக்க வேண்டுமென்று தன் மானப் போர்முரசு கொட்டும் தளபதி அண்ணாத்துரை; மொழியின் மூலம் புரட்சிப் பொரியைப் பறக்கச்செய்யும் கவிஞர் பாரதிதாசன்; மற்றும் அந்தத் தலைவரின் கீழ் நின்று எதிர் நீச்சுப்போடும் தொண்டர்கள்—

இவர்களை யெல்லாம் என் மனம் விதவிதமாகச் சித்தரித்துப் பார்க்க ஆரம்பித்தது; அதையும் பார்த்து விட்டு, சீர்திருத்தமென்ற பெயரால் வேதாந்தியான என் கணவர்; விரக்திக்குப்பின் வேதாந்த வழியில் செல்ல ஆசைப்படும் அவருடைய பெற்றோர்கள்—

மலர்வனத்தைப் பார்த்து விட்டு, மறுபக்கம் மண்ணெண்ணெய்க்கிடங்கு தீப்பிடித்து எரிவதைப்பார்த்தால் எப்படியிருக்குமோ, அப்படி இருந்தது அந்த இரண்டு சித்திரங்களும் என்கண்களுக்கு!

[அடுத்த இதழில் முடியும்]

நிலையாமை

க. தங்கவேலன்

நிலையாமை என்று கூறும் பொழுதே இன்றைய மாணவர்களின உள்ளக்கிழியில் உருவாகி இயங்கும் கருத்தலைக் காட்சிப் படங்களில் முதன்மையானவை மூன்று. அவை செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்பனவாகும். இவற்றைத் தொடர்ந்து 'உலகம் மாயை, பெண்ணைப்பழி . ...' என்பன போன்ற எண்ணத்திரைகள் சிந்தனைக் கரையில் மோதிக் கொண்டேயிருக்கும். இதன் காரணம் என்ன? இன்றைய கல்வி முறைப்படி மாணவருக்குக் கற்பிக்கப்படும் பாடநூல்களில் முதற்பக்கம் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் நிறைந்திருக்கும். அடுத்து வருபவை நாலடியாரிலுள்ள 'மணி' யான செய்யுட்கள். இவற்றுள் முதற் பகுதி செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை ஆக இவற்றை வற்புறுத்தும். அடுத்த பகுதி துறவின் இறைமை, வினையின் வலி ஆகஇவற்றைப் பற்றி வலியுறுத்தும். அடுத்த பக்கத்தில் ஏதாவதொரு தல புராணம் அல்லது திருவிளையாடற் புராணத்திற் பொதிந்துள்ள ஒருண்மைக் கதை! அறிவுப்பெருக்கத்திற்கு ஆக்கந்தேட வந்த கன்னியற்கும் காளையற்கும் அறிவுக்கருவூலம் வழங்கும் அறவுரைகள் இவை! இத்தகைய பாடநூல்களைக் கூர்ந்து கற்றுத்தேர்ந்த மாணவரின் உள்ளத்தே ஓயாது வீசிக் கொண்டிருக்கும் கருத்தலை 'நிலையாமை' என்ற ஒன்று தான்.

இந் நிலையாமைக்கோட்பாடு பண்டைய தமிழகத்தில் தலைகாட்டவில்லை என்பது இலக்கியங் கூறும் உண்மை. இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையைப் பற்றியே தம் கூர்மதி முழுதும் செலுத்தி ஆய்ந்தாய்ந்து முடிபுகாணத் துணிந்திருப்பரேல் அவர்களுடைய நாகரிகச் சிறப்பிற்கும், பண்பாட்டுப் பெருமைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கும் என்பது திண்ணம். இத்துறையிலேயே தம் நுண்மாண நுழைபுலம் முழுவதையும் செலுத்தியிருப்பரேல் அவர்கள் தங்கள் வாழ்க்சைச்சோலையில் நீலவானத்தையும், கோலமயிலையுங் கண்டு, தென்றலும் மணமும் உண்டு தெவிட்டா இன்பம் துய்த்திருக்கக் கூடுமா? துய்த்த இன்பத்தை இலக்கியச் சுவடிகளால் எடுத்துரைத்திருக்க ஒல்லுமா? மறமே அறமெனக்கொண்ட ஒரு சேரன் செங்குட்டுவன் வடவரை வில்லால் வென்று, கனகவிசயரின் தலைமேல் கல்லேற்றிக் கொணர்ந்து, கண்

ணடிக்குக் கோயிலெடுத்திருக்க முடியுமா? மெல்லியலாள் கண்ணகி ஒருத்தி நாடோள்வோளின் நாளோலக்கம் புகுந்து இறைமுறை பிழைத்தோனை மடித்திருக்க இயலுமா? ஒரு சோழன் கங்கையைக் கொண்டிருக்கக் கூடுமா? ஒருபராந்தகன் கடாரம் என்னும் பர்மாவைப் பணியவைத்திருக்க ஒல்லுமா? எனவே தமிழ்ப் பண்பாட்டிற்கு முற்றும் முரணானது நிலையாமைக் கொள்கை என்க.

கடைச் சங்க காலத்தின் இறுதியிலேயே நிலையாமைக் கரையான் தமிழ்நாட்டில் புகுந்து விட்டது. கி. பி, இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் புத்த சமண மதத்தினர் தமிழ் நாட்டில் புகத்தலைப்பட்டனர். அவர்கள் தம் தலையாய சமயக் கொள்கைகளை நூல் வாயிலாகத் தமிழ் நாட்டினருக்கு எடுத்தோதினர். பெரும்பாலான நீதிநூல்களும், பலகாவியங்களும் இவ்விருசாராரால்தான் இயற்றப்பட்டன என்று இன்றும் வழங்கப்பட்டு வருகின்றன. மணிமேகலை ஒரு புத்த மதக் காவியம். இதில் இந் நிலையாமைக் கொள்கையும், மனிதப்பிறவியின் இழிதகையும் பெரிதும் வற்புறுத்தப் படுகின்றன. எடுத்துக்காட்டாக ஒன்று கூறுவேன், மலர்வனத்தில் காமக் கண்ணோடு உதயகுமரன் பளிக்கறையை யண்டிய போது சுதமதியின் வாய்மொழியில் ஆசிரியர் சாத்தனார் தம் கருத்தை விளக்குகிறார். 'வினையின் வந்தது' எனத் தொடங்கி 'புலால் புறத்திடுவது, பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்' எனக்குறித்து 'மக்கள் யாக்கை இதுவெனவுணர்ந்து மிக்கோய் இதனைப்புறமறிப்பாராய்" என முடிக்கிறாள் தோழி சுதமதி. இக்கருத்து கதைப்பகுதியை நோக்கும்போது பொருத்தமுடையதாய் இவ்விடத்தில் இருக்கலாம். ஆனால் இத்தகைய கருத்துக்களைப் பச்சை மரத்திற் பதிக்கும் ஆணியைப் போல அக்கால மக்களின் நெஞ்சில் ஆழமாக அழுத்திப் படிய வைக்கும நோக்கத்துடன் தான் மேற்கண்ட வரிகள் இடப்பட்டன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அவர்கள் எண்ணம் நிறைவேறிற்று என்பதும் திண்ணமாகும். எனவே இத்தமிழகத்தில் நிலையாமையின் நிலைபேற்றிற்குப் புத்தமதத்தினர் ஒரு காரணம் என்பது ஒரு தலை. அடுத்தகாரணம் சமணர்களாகும். நாலடியாரைச் சமண முனிவர்களே இயற்றினர் என்பது ஒரு கற்பனைக் கதையென வெறுத் தொதுக்கிவிடினும, அதில் சமணசமய நிலையாமைக் கொள்கை வலியுறுத்தப்படுகின்றதென்பதை எவரும் மறுக்கமுடியாது. கற்றறிந்தார் கருத்துடன் ஏற்றிப் போற்றும் சீவகசிந்தாமணியிலும் இக் கொள்கை முதன்மை பெறுகின்றது. எனவே புத்த சமண மதத்தினரின் காலத்தில்தான் இக்கொள்கை முதன்மை பெற்றும், வற்புறுத்தப்பட்டும் வந்தது என்பது வெள்ளிடைமலை.

நிலையாமைக் கொள்கை உண்மையானதுதான். மறுக்க முடியாததுங்கூட. நெருநல்உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்து இவ்வுலகம். இன்றைய இளைஞன் நாளைய

கிழவன். கண்ணைக் கவரும் கவின்குவிக்கும் கன்னிக் கட்டழகியும் ஒருநாள் கோற்கண்ணள் ஆவாள். நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் செல்வம். அது சகடக்கால் போல வரும் ...ஆக இவை யனைத்தையும் பொய்யென்று மறுத்துக் கூறிப் புறக்கணித்து விடமுடியாது. ஆனால் இந்நிலையாமைக் கோட்பாட்டையே தலைமையாய்க் கொண்டு அல்லும் பகலும் அயர்வின்றி வற்புறுத்தி வந்ததனல் - வருவதனல் நாமடையும் நன்மை ஒரு சிறிதேனும் உண்டா? நன்மை இருப்பின் இத்துணை ஆண்டுகட்குப் பின்னும் நம்மில் ஒருவராவது என் அந்நன்மையை அடையமுடியவில்லை! நன்மைக்கு நேர்மாருக, நம்மனேருக்கு நேர்ந்துள்ள தீங்குகள் பலவாகும். யாவும் நிலையற்றன என்று எண்ணியெண்ணி முதன்மையாக நாம் முதன்மையான தன்னம்பிக்கையைத் தளரவிட்டது மன்றித் நிக்கிரையாக்கினேம். உலக வாழ்க்கை மாயமானது என மயங்கி, வெறுத்துக்கூறி ஒதுக்கிவிட்டு அதே உலகிலுள்ள காட்டில் வாழக் கடுகிச் சென்றேம். இன்ப ஊற்ரும் பெண்ணைத் துன்பப்பேயெனப் பழித்துக்கூறிப் பேரின்பத்திற்கு வானுலகில் விண்ணப்பமிட்டோம். இவை மட்டுமா? இன்னும் எத்துணையோ இன்னல்களை ஏந்தி இடர்ப்பட்டோம். இன்றும் படுகின்றேம். எனவே நிலையாமைக்கொள்கை உண்மையெனினும் அதனையே சிறப்பாக வற்புறுத்தி வருவதால் நம்மை யறியாது நாமே நமக்கு இழைத்துக் கொள்ளும் இன்ன பல இன்னல்களை இனியேனும் கண்விழித்துக் காணுங்கள். கண்டவற்றை அண்டிச் சென்று மண்டையிலடித்து மாய்க்க வழிகோலுங்கள்!

'நீரிற் குமிழி இளமை. கானையாம் பருவம சாகும். எனவே இளமை யொழுகும் எழிற் கன்னியைக் கனவிலும் கருதாதே. இறைவன் திருவடி நிழலையடைவதே — இறப்பதைக் - குறிக்கோளாகக் கொள்' இவை வாழ்க்கைப் பூங்காவில் எழில் குவித்துத் தேனுண்ண எண்ணிய இளைருனுக்குக் கூறப்படும் அறமொழிகள். பெண்ணை இப் 'பெரியோர்' ஏன் இப்படித் தூற்றுகின்றனரோ தெரியவில்லை. 'ஆலகால விஷத்தையும் நம்பலாம், ஆற்றையும் பெருங் காற்றையும் நம்பலாம் ....சேலைகட்டிய மாதரை நம்பினல் தெருவில் நின்று திகைத்துத் தவிப்பரே!' இது 'அறிவுச் சிந்தாமணி'யில் பொறிக்கப்பட்டுள்ள செய்யுளின் ஒரு பகுதி. நல்லவேளையாகச் 'சேலை' என்ற சொல்லைப் போட்டுவைத்தார் 'புலவர் பெருமகனர்'. இக்காலத்தே தான் மேலை நாட்டு மாதர்கள் சேலைகட்டும் வழக்கத்தை யழித்து விட்டனரே! ஆடையன்றே அணிகின்றனர்! எனவே அவரையாவது நம்பலாம் போலும்! பெண்ணுக்குப் பழிப்பும் அடிமையும் கற்பிக்கப்பட்ட நாள்... இல்லை நாழிகை முதல் தமிழ் நாட்டின் அறிவு, வீரம், கலை, கல்வி, ஆக அனைத்திற்கும் ஒருங்கே சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது. பெண் அடிமைப்பட்டதும் பிற்காலத்தில்தான். பண்டைய தமிழ்ச்

சுவடிகளைப் புரட்டிப் பார்த்தால் அவற்றின் ஒவ்வொரு ஏட்டிலும் பெண்ணின் பெருமை பொறிக்கப்பட்டிருப்பதை, -பொலிவுற்றிருப்பதை - ஓரளவாவது காணலாம். பெண்ணிற் பெருந்தக்க யாவுள? இது வான்மறை வகுத்த வள்ளுவர் வாய்மொழி. சங்க இலக்கியப் பூங்காவை வெள்ளிவீதியார், காக்கை பாடினியார் பொன்முடியார், இளவெயினி, ஔவையார் போன்ற புலவர் போற்றும் புலமைப் பெண்மணிகளின் கருத்தாழம் கனியும் செய்யுட்கள் இன்றும் நன்றும் அணி செய்கின்றன. ஆனால் பிற்காலத்தே ஆண்டான் — அடிமை, பார்ப்பான் — பறையன் என்ற பகுத்தறிவிற் கொவ்வாத - இல்லை முரணான வேற்றுமை கற்பிக்கப்பட்ட காலத்தில் தான் பெண்ணைப் பழித்தனர்; இழித்தனர்; தூற்றினர் கொடு நெஞ்சினோர். மடமையால் அடிமையாக்கினர். அவர் நெஞ்சங் கல்லோ, இரும்போ அன்றிக் காழ்ப்பேறிய மரமோ அறியேன். பெண்ணென்றால் பேயும் (அஃது இருப்பின்) இரங்கும் என்பர்! பேயினும் கொடியர்போலும் அன்னோர்! பெண்ணைத் தூற்றுகின்றவர்களை நோக்கிக் கேட்கின்றேன் ஒரு வினா! தக்க விடை தரட்டும். பெண்ணைப் பழிக்கும் உங்களின் தோற்றத்திற்கு மூலகாரணம் யாரென்பதை நீவிர் அறிவிரா? பெண்ணைத் தூற்றும் நீங்கள் பெண்மையின் ஒரு வடிவமான தாயைத் தூற்றினவர் ஆவீரன்றோ? இதை என் நீவிர் உணரவில்லை? சிந்தித்து முடிவு காணுங்கள். நிற்க, பெண்ணை இழித்துக் கூறியதுமன்றி பெண்ணின் கண்ணனைய கல்வியையும் களவாடினர் கொடுநெஞ்சினோர். அதனாலன்றோ இன்றையத் தமிழ்மகள் கண்ணிழந்த கருநாகம் போன்று கலங்கி, ஒளியிழந்த முகத்தினளாய், எண்ணும் எழுத்தும் நண்ணாது, குழவி போற்றும் வழியறியாது, நோஞ்சல் சிட்டிகளை ஈனும் பொறியாக அமைக்கப்பட்டுள்ளாள்! என்று தீருமிக் கொடுமை? இத்தீங்கு அகலாவிடில், தமிழ் நாட்டில் எவ்வளவுதான் முன்னேற்றம் முந்துறினும் அது உண்மையான முன்னேற்றம் அல்லது மறுமலர்ச்சி என்று கொள்ளமுடியாது.

இளமை நிலையாமையை ஒருசேரத் தொடர்ந்து வருவது யாக்கை நிலையாமை. யாக்கை நிலைக்காது என்ற கொள்கையைச் சிறுவனொருவன் செந்நெஞ்சில் நம்பிக்கை என்னும் சுத்திகொண்டு ஆழ அறைந்துவிட்டால், அவ்விளைஞனின் மனத்தகத்தே மலரும் கருத்தலைகள் எவ்வாறு தன்னம்பிக்கையுடையனவாய்த் திகழும்? இறப்பதற்கென்றே தான் பிறந்ததாக எண்ணுகின்றான். அவன் 'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்' என்றும் 'காயமே இது பொய்யடா இது காற்றடைத்த பையடா' என்றும் 'பஜனை' பண்ணுவதில் இறங்கிவிடுகின்றான். உலக வாழ்க்கை அவனுக்குக் கசந்து காணப்படுகிறது. வாழ்க்கையில் வெறுப்பு மட்டுமின்றி அசட்டையும், அக்கரையின்மையும்

அவனுக்கேற்படுவதில் வியப்பென்னவுளது? அவனுடைய நெஞ்சில் புதுமைக் கருத்துக்கள் பொலிவதில்லை. கற்பனையென்பதைக் கனவிலும் நினைந்தறியான். சுருங்கச் சொல்லின் அவன் ஒரு நடைப்பிணம். அவனால் தனக்கோ அன்றிப் பிறர்க்கோ நன்மை ஒரு சிறிதாயினும் உண்டா? இருப்பது போதும் என்ற மனம் மட்டுமல்ல, இருப்பதையும் போக்கடிக்கும் பண்பினனாகத்தானே திரிவான்? இல்லையெனில் தமிழ் நாட்டின் - தமிழரின் - வரலாற்றை விளக்கும் ஏடுகளெல்லாம் எங்கு சென்றன? ஆடிப்பெருக்கில் ஆனமட்டும் அடித்துக்கொண்டு போகட்டும் என்றுதானே சுவடிகள் பலவற்றை அழித்தார்கள். எண்ணிறந்த மருத்துவ நூல்கள் செறிந்தும், மருத்துவ நெறி முறைகள் எல்லாம் அறிந்தும் இருந்த தமிழ்நாட்டில் இன்று தேள் கொட்டினதும் பாடமபோடும் பழக்கம் வழக்கத்தில் வாழ்ந்துவருவானேன்? 'பெரியம்மை' நோய் கொண்டால் அதற்கெதிர்மருந்தைத் தேடாது மாரியம்மன் கோவில் சென்று மண்டியிட்டுத்தொழுது வேண்டுவானேன்? ஆயிரம் நரம்பமைந்த பேரியாழில் பண்ணிசைத்து இசைகொழித்த இந்நாட்டில்- இசைக்கணக்கு, இசை நுணுக்கம், முருகு போன்ற இசைநூல்கள் பல்கிப் பெருகியிருந்த இத்தமிழ் நாட்டில் - தமிழில் நல்ல இசை இல்லை யென்று வாய் கூசாது மானமின்றி வம்பளக்கும் கயவர் கூட்டம் இன்றும் இருக்கக்காரணம் என்? நன்னூலுக்குப்பின் ஏன் ஒரு செவ்வையான இலக்கண நூல் எழுதப்படவில்லை? சிந்தனைக்கு வேலை கொடுங்கள் சிறிதுநேரம். உண்மை விளங்கும்.

செல்வ நிலையாமை அடுத்து வரும். செல்வம் சகடகால் போல வரும் என்பது உண்மை தான. ஆனால் இத்தொடர்மொழி 'செல்வம் நிலைக்காது. எனவே அதைத் தேடுவதில் பயனில்லை. இருந்தால் தொல்லை தான்' என்னும் அளவிற்கு மக்களின்மனத்தை மாற்றியமைத்து விட்டது. செல்வத்தின் நிலையாமையை அறிந்திருந்தனர் பழந்தமிழர். ஆனால் வற்புறுத்தவில்லை. வலியுறுத்தியிருப்பரேல் வளிதொழிலாண்டு நளியிருமுந்நீர் நாவாயோட்டி கிரேக்கம், உரோமம் முதலிய நாடுகளினின்றும பெருஞ்செல்வம் திரட்டி வந்து தமிழ் நாட்டில் குவித்திருக்கக் கூடுமா? உரோமானிய வரலாற்றுசிரியன் பிளினி என்பான் 'என் பிறந்த பொன்னாட்டினின்றும் ஆண்டு தோறும் ஐம்பது இலட்சம் சவரன் பெறுமான பொன்னும், வெள்ளியும் தமிழகம் கொள்ளை கொள்கின்றதே!' என்று கவன்று கூறும் நிலை நிலத்திருக்க முடியுமா? செல்வத்தைத் திரைகடலோடியும் சேர்த்தனர் பண்டைத் தமிழர். அதன் சிரையும் சிறப்பையும், இன்றியாமையும் யாமையையும் செவ்விதின் உணர்ந்திருந்த காரணத்தால்! செல்வத்தை வெறுத்ததால் இன்றையச்சீரழிவு ஏற்பட்டது. அமெரிக்கரைப் பாருங்கள்! செல்வத்தால் அவரடையும் பேற்றை! அவர்கள் குழந்தைகள் வளர்க்கப்படும் பாங்கை! நமக்குப் பெருஞ் செல்வம்

வேண்டும். ஆனல் அவ்விழுச் செல்வம் தமிழகத்தின் கருவூலத்திற்கு உரிமையாக்கப் பெற்று செம்மையாய்ச் செலவழிக்கப்பட வேண்டும். தனிப்பட்டவரிடம் பொருள் சேர்ந்ததால் மற்றபலர் வறுமையை வலியத் தழுவி வாடி வருந்த வேண்டியுளது. எனவே எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான பொதுவுடமைப் பெருஞ் செல்வம் நமக்கு வேண்டும். இன்று நம் நாட்டை சீர்திருத்த வேண்டுமாயின் செல்வத்தைப் பன்மடங்கு பெருக்கியே தீரவேண்டும். செல்வ நிலைமையை வலியுறுத்துவதால், செல்வம் சேர்க்கும் எண்ணம் குலைந்து, நாடோறும் வீதிதோறும் குக்கல் குழுவுடன் சண்டையிட்டுக் கடிபட்டு எச்சிலிலையைப் பறித்தோடும் இரவலரின் எண்ணிக்கை பல்கிப் பெருகிக்கொண்டே யிருக்கும். எனவே இனிமேலாவது, செல்வத்தை விரும்பி முயன்று சேர்த்து, தமிழ் நாட்டை வளம் பெறச் சமைப்போமாக!

ஏடெழுதும் எழுத்தாளரே! பாட்டெழுதும் பாவலரே! பழமையே பேசும் புலவர்களே! கவி கோச்கும் கவிஞர்களே! துடிதுடிக்கும் இளமையுள்ளத்தினின்றும் கிளர்ந்தெழும் கருத்தொன்றைக் காது கொடுத்துக் கேளுங்கள். 'நிலையாமையை வற்புறுத்தித்தான் தீருவோம்' என நீங்கள் கூறுவீரேயாயின் அக்கொள்கைக்குப் பொருந்தும் நிகழ்ச்சிகள் இன்றைய தமிழ் நாட்டில் பல்கிப் பெருகியுள்ளன. அவற்றிற்கேற்றிக் கூறுங்கள் உங்கள் நிலையாமைக் கொள்கையை, நாடு நலம்பெற வேண்டுமென உண்மையில் நீங்கள் நினைத்தால்!

இன்றைய தமிழகத்தில் எட்டுக் கல்வியற்ற தமிழர்களின் எண்ணிக்கை எண்ணிறந்ததன்றோ? எட்டுக் கல்வி பெற்றோரிலும் எத்துணை பேர் அறிவுக் கல்வி பெற்றனர்? ஐரோப்பாவில் அணுவினது ஆற்றலைப்பற்றி ஆய்வு நடத்துகஅதே வேளையில், மயில் வாம்னப் பெருமை பற்றி பேசுவோர் பலர். வியாழனில் மனிதர்கள் உறைகிறுர்கள் என்று கண்டறிந்த அந்நேரத்திலே, பாதாள லோக அசுரர்களின் பெயர்களை அகர வரிசைப் படுத்துபவர் பலர். ஆக கற்றோரும கல்லாதாரே! அறிவுக் கல்வியில் ஆர்வமுள்ளோரும் உளர். ஆனல் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. கண்மணியன்ன கூர்மதியின்றிக் கரையறியாக் கலம்போல, செய்வகையறியாது தவிக்கின்றனர், திகைக்கின்றனர், பதைக்கின்றனர். ஐயகோ! அவர்களால் என்ன செய்ய இயலும்? இக்கல்வி யறிவில்லா விலங்கு நிலையின் நிலையாமையைப்பற்றிப் பேசினல் நாட்டுக்கும் நமக்கும் பயனுண்டு. எனவே எழுதுங்கள் ஏடுகளிலே! பேசுங்கள் மேடைகளிலே!

மதத்தின் பெயரால் நம்மைப் போன்றே பகுத்தறிவு பெற்ற ஒரு சாராருக்கு-மாண்பு பெற்ற மக்களினத்தின் ஒரு சாராருக்கு-நமக்கு நன்மை பயக்கும் செயல் பல மிகுதியாகக் செய்த காரணத்தால்-ஒறுக்க வலியிருந்தும் பொறுத்துக் கொண்டுள்ள காரணத்தால்-இழைக்கப்படும் முறைகேடான

நீங்குகளைப்பற்றி நீங்கள் என்றேனும் சிந்தித்ததுண்டா? குளத்தில் நீரெடுத்தால் குற்றம்; பார்ப்பனச் சேரிப் பக்கம் போனால் பழி. அவரைத் தொட்டால் தீட்டு. கண்டால் குற்றம்...., நேற்றுவரை கோயிலுக்குள் நுழைந்தால் கொடுங் குற்றம்! இவை மட்டுமா? இன்னும் எத்துணைத் தடைகள், கட்டுப்பாடுகள்!......இத் தகைய முறைகேடான கொடுமைகளின் நிலையாமையைப்பற்றித் தீட்டுங்கள் இருத்தாளில்! பொழியுங்கள் பொதுமன்றில்!

எண்ணிறந்த பெரும் பொருள்-கல்விக் கருவூலத்திற்கென்று தமிழரால் ஒதுக்கப்பட்ட பெருஞ் செல்வம் இன்று தமிழ் நாட்டுக் கோயில்களில் முடங்கிக் கிடக்கின்றது. தேவதாசிகளை வளர்க்கவும் கோயில் தர்ம கர்த்தாக்களின் இன்ப வாழ்விற்கும், மற்றும் பல சோம்பேறிகளை உண்டு கொழுத்துச் செரியாத காரணத்தால் உருண்டுருண்டு புரளும் கரையான்களை-வளர்க்கும் மடைப்பள்ளிகளின் ஆக்கத்திற்கும் செலவிடப்படுகின்றது அச்செல்வம். மறு பக்கத்தில்லாவெனில் வருங்கால மக்களை வளமாக்கும் கல்விச்சாலைகளை மிகுதிப்படுத்த அரசியலாரிடம் பொருளில்லை என்ற நிலை. எனவே இத்'தலைகிழ்' முறையின் நிலையாமையைப் பற்றிக் கூறுங்கள் இதழ்களிலே! மாற்ற வழி கோலுங்கள் மேடைகளிலே!

இளமை ததும்பும் ஒரு செழுங்கன்னி! ஆம். காண்போர் அவளை அன்று பூப்படைந்த இளங்கன்னியென்றுதான் கூறுவர். ஆனால் அவள் முகத்திலே ஒளியில்லை. ஏன்? அவள் ஒரு கைம்பெண். மணமான மறு ஆண்டே கைம பெண்ணெனப் பெயர் சூட்டப் பெற்று மக்கட் குழுவின் முன்னர் தெருமந்து தேய்ந்து, அலமந்து! அலர நிறுத்தப்பட்டுள்ளாள்! அவள் வாழ்க்கையில் துய்த்துக்காண வேண்டிய இன்பம் இதுதானா! இல்லை இதுதான் அவள் ஊழ்வினைப் பயனா? ...... இவ்விரக்கமற்ற மக்கட் குழுவின் கட்டுப்பாடுகளைத் தட்டிக் களைந்து விட்டு, கைம்பெண்ணின் கலங்கு நெஞ்சிற்கு நல்லின்பம் சேர்க்கும் செய்தியைக் கொடுக்க—கைம்மைத் துயரின் நிலையாமையைப் பற்றிப் பக்கம் பக்கமாய் வரையுங்கள்! கருத்தலைகளை மேடையிலே வீசுங்கள், வைதிகத்தன் வாள்விச்சுக் கஞ்சா நெஞ்சுடன்!

கனலில் காயினும், புனலில் படியினும் பனியில் நனையினும் புயலில் தோயினும் முணுமுணுக்காது மனமார உழைப்பவன் தொழிலாளி. காடு கொன்று நாடாக்கிக் குளந் தொட்டு வளம்பெருக்கியவன் தொழிலாளி. நெற்றிநீர் நிலம் சேரப் பச்சைக்குருதி பரிந்தளித்து, உணவெடுத்து, உணவளித்து உலகைப்புரப்பவன் உழவன். அவன் ஒரு தொழிலாளி! ஞாயிறு தோன்றும் நாழிகையளவே நயந்து விரைந்து ஆலை சென்று சேயிருள் கவிந்த பின்னரும் உழைத்து, உடையளித்து உலகோரின் அற்றங்காப்பவன் ஒரு தொழிலாளி! ஆனால் அவன் உழைப்பால் அவனடைந்த பேறு? இன்னலுற்றதால் அவ

...யும் நன்மை?......அவன் ... ஏழை! அரைவயிற்றுக் ...க்கும் அலறி நிற்கும் வறுமை! வயிறார கஞ்சி குடிக்க ஊதியத்தில் உயர்வு வேண்டும் என அரசியலாரை - முதலாளியை - அணுகுகின்றான் அவன். நல்லாடை அணிந்து நெய்யாவி வண்டியில் வந்திறங்கும் 'மேதலா' ரைக் கண்ணுற்று கண்டு சலித்த அரசாங்கத்தின கண்ணில் இவன் நிலை எவ்வாறுபடும்? கட்டுப்பாடான வேலை நிறுத்தம தொடங்கப்படுகின்றது தொழிற் சாலையிலே! ஒட்டிய வயிற்றில் முழுக்கஞ்சிக்கு மாறாகத் தொடர்ந்து 'சுளிர் சுளி'ரென அடிகள் விழுகின்றன. ஏழையின் கண்கள் துயரத்தால் உகுக்கும் கண்ணீரினும் மிகுதியான செங்குருதி பீறிட்டுக் கொண்டு வெளிவர வேண்டுவது இயற்கை - அடிக்குமபடி ஆணையிட்டவன் - அடித்தவன். பகுத்துண்டு பல்லுயிரோம்பும் நெறியை உலகுக்கு வகுத்துக் கூறிய தமிழ் மகன் பிறந்த தமிழ்க்குடியின் தோன்றலா என்றுகாண!- ஆனால் அந்தோ ஒரு துளி செங்குருதியும் வெளிவரவில்லை. பட்டினியால் பட்டுப்போன அவனுடலில் ஒரு துளிக்குருதியாவது இருந்தால்தானே! அவன் இறந்துவிட்டான். இல்லை. அவன் என்று வாழ்ந்திருந்தான்? எந்நாளும் வாழ்ந்திருக்கவில்லையே! அவன் முன்னரே செத்துவிட்டான். அவன் கேட்டதோ வாழ்வு, ஆனால் கிடைத்ததோ சாவு! ஆம்! இந்நிலையை நேரில் கண்டும், கேட்டும் இரங்காத அரசாங்கத்தின் - முதலாளி

> ## தமிழ் அறிவுக் - - களஞ்சியம்
>
> அறிஞர் கா. அப்பாத்துரை அவர்கள் எழுதிவரும் இத்தொடரின் இரண்டாம் கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும்
>
> — ஆசிரியர்

யின் - நிலையாமையைப் பற்றி ஒரு புராணமோ, அந்தாதியோ அன்றி ஏழையின் இறுதி வெற்றியைப் பற்றி ஒரு பரணியோ பாடுங்கள்! தேனூறும் தமிழ்ச் சொற்களை இன்று திமூட்டும் கனற்சொற்களாக்கிச் சொற்பெருக்காற்றுங்கள் பொது மன்றிலே!

எனவே நாடு நலம் பெற வேண்டுமாயின் இத்தகைய நிலையாமையை வலியுறுத்தி மக்களுக்கு நல்லறிவைப் புகட்டுங்கள். மடமை மாயும். கொடுமை வீயும். செல்வஞ் சிறக்கும். வளங்கொழிக்கும். வாழ்க்கையில் மணமும், இனிமையும், புதுமையும் பொலியும். சீரும், சிறப்பும், தொழிலும், எழிலும, அறிவும, ஆய்வும் செறிந்த புதிய தமிழகம்— இருட்டறையில் இன்றுள்ள நிலை நீங்கி எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம்நோக்கி நடக்கின்ற தமிழகம் அன்றுதான் மலரும்! ★



அவள்

சாமி பழனியப்பன்

பொன்னொளி வீசி, அந்நாள்
புதுமுகங் காட்டி நின்ற
மின்னிக ரிடையாள்; அவளின்
மேனியி னெழிலிற் சொக்கி,
புன்னகை பூத்தே அன்னாள்
பொன்னிதழ் நோக்கி நின்றேன்.
அன்னவள் எனைம திக்கா (து)
அவ்விடம் விட்ட கன்றாள்.

வங்கிழை நடந்த தாலே
என்மனம் நொந்து, கண்ணீர்
மாந்திய விழிக ளோடு
வழியினைப் பார்த்து நின்றேன்.
ஏந்திய அன்பி னோடு
என்னிடம் வந்த தோழன்
"தீர்ந்ததோ ஆசை?" என்றான்.
"தீருதல் உயிரோ" டென்றேன்.

"தொண்டுசெய் நாட்டிற்" கென்றான்;
துடுக்குடன், "எனதெண் ணத்தைத்
துண்டுசெய் யாதே!" என்றேன்;
"தாயுன் நாட்டிற்" கென்றான்;
"கண்டனம் வேண்டா" மென்றேன்;
"கனிதமிழ் வளர்ச்சிக் காகத்
தொண்டுசெய்!" என்றான். நானும்
"தோழனே, வாழி!" என்றேன்.

''வீழ்ந்தநந் தமிழ கத்தின்
வீழ்ச்சியை வீழ்த்தி'' டென்ருன்;
“தாழ்ந்ததன் கார ணத்தைச்
சாற்றிடாய்,'' என்றேன். அன்னேன்,
“சூழ்ச்சியே'' என்ருன்; “இன்னே
தொலேந்திடு'' மென்று பாய்ந்தேன்.
“வீழ்த்திளுன்'' என்று கூவி
வீழ்ந்தது சூழ்ச்சித் தொல்லே!

ஆண்டிரண் டிதற்குள் ளாக
ஆயின. அந்நா ளென்முன்
மீண்டுமத் தையால் வந்து,
மென்கரத் தாலே தொட்டாள்.
“ஈண்டுனே நத்த விலலே,
எட்டிப்போ!'' என்றேன். அன்னுள்
“தாண் டிடே'' னென்று சாற்றித்
தளிர்க்கரத் தாலே தொட்டாள்.

''என்னேடி கள்ளி! அன்றுன்
எழிலுடல் சுவைக்க எண்ணி,
நின்றதைக் கண்டாய், கண்டும்
நின்றிலே பறந்து சென்ருய்,
இன்று நீ, என்பால் வந்து
ஏற்றுக்கொள் ளென்கின் ருயே!
உன்னெழில் பறிக்க இந்நாள்
ஒருவரு மில்லே போலும்.''

என்று நான் கேட்டேன், அந்த
ஏந்திழை வாயு ரித்து,
“நன்று கேள் தம்பி! இந்த
நானில மறியச் சொல்வேன்!
என்பெயர் புகழென் பார்கள்.
இப்புவி மக்க ளாற்றும்
நன்மைசேர் தொண்டை யல்லால்
நானேதும் நத்த மாட்டேன்;

“எனேவிரும் பாது தொண்டு
இப்புவிக் காற்று கின்ற
மனிதரை மட்டு மே,நான்
மகிழ்வுட னேற்றுக் கொள்வேன்.
உனேயின்று நத்து கின்றேன்
உன்பெருந் தொண்டுக்'' கென்று
என துட லணைத்துக் கொண்டாள்.
“இன்பமே! வாழி!'' என்றேன்.

பொது மேடை

துறையூர், 26—2—48

தங்களின் 'பொன்னி' இரண்டாம் ஆண்டு துவக்கம் கண்டு மகிழ்வெய்துகிறேன். வெகு விரைவில் தமிழ்நாட்டில் பொன்னி எல்லா வகையிலும் முன்னணியில் நிற்கவேண்டும் என்று எதிர் பார்க்கிறேன். தங்கள் பொன்னிக்கு ஒரு சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன், எழுத்துக்கள் யாவும் சுத்தமான தமிழ்முறையில் இருக்கவேண்டும் என்பது எனது ஆவல். விடுதலை, குடியரசு முதலிய பத்திரிகைகளில் கையாளப்படுவதுபோல் தங்கள் பொன்னியிலும் எழுத்துப்புரட்சி செய்யவேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டு கொள்கிறேன்.

—அரு. ஆதிமூலம்

[உங்கள் ஆசையை ஓரளவு பிப்ரவரி இதழிலேயே நிறைவேற்றியிருக்கிறோம். முதற்படியாகத் தலையங்கத்தை மட்டும் சீர்திருத்த எழுத்துமுறையில் அச்சடித்து வருகிறோம். முற்றும் நிறைவேறுவது சகோதரப் பத்திரிகையாளர்களின் ஒத்துழைப்பையும், தமிழ் மக்கள் காட்டும் ஊக்கத்தையும் பொறுத்திருக்கிறது. —ஆசிரியர்]

எர்ணாகுளம், 8—3—48.

பொன்னியின் பெருமைதரும் வளர்ச்சி காண மிக மகிழ்கிறேன். அறிவுக் களஞ்சியத்தைப்பற்றிய தொடர்ந்த எழுத்தோவியங்கள் மிக்க பயன் தரத்தக்கவை. பொங்கல் மலரில் நமது நாச்சியப்பரின் பாடல் அழகாக அமைந்திருக்கிறது. அதுவும் தனித்தமிழைப்பற்றிச் சொல்லுமிடம் சிறப்புறுகிறது. வரிச்சுவடி போன்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வரவேண்டும்.

—இராம. வே. சேதுராமன்

திருவாரூர், 10—3—48.

போர்க்களத்திலே வெற்றிகண்ட யானையின் மந்தகாசமான நடையைப்போலப் 'பொங்கல் மலரில்' புகழெய்திய "பொன்னி" தன் இரண்டாம் ஆண்டில், தமிழ் நிலத்திலே அசைந்தசைந்து பவனிவரும் காட்சியைக்கண்டு தமிழகம் களிப்பெய்துகிறது.

—து. இரா. மதியன்

குமாரபட்டி, 10—3—48.

ஆதிக்கம், சுரண்டல், சுயநலம், இல்லாத புதுமைத்தமிழகத்தை உருவாக்க முயற்சிசெய்யும் பொன்னி பல்லாண்டு வாழ்க! திராவிடநாட்டில் பரவிக்கிடக்கும் அறியாமை, மூடநம்பிக்கை, அனுவசியமான வரட்டுக் கோட்பாடுகள், இவைகளைத் தொலைக்கப் பொன்னியின் வளர்ச்சி பெருகட்டும்! பொன்னி பத்திரிக்கையை இரண்டு இதழ் வாசித்தேன். அப்புறம் மறக்கவே முடியவில்லை...

—ச. சேதுராமலிங்கம்

விழுப்புரம், 10—3—48.

தாங்கள் எனக்கு அனுப்பும் பொன்னியின் மூலம் கண்கவரும் வனப்புடன் கருத்தோவியங்கள் குவியப்பெற்று இன்பம் அளிப்பது குறித்து உளமார்ந்த நன்றி. வள்ளுவர் விருந்து மூலம் திரு. வி. முனுசாமி அவர்களின் கட்டுரைகளைப் பார்க்க நானும் மற்ற அன்பர்களும் பெருங்களிப்பு அடைகின்றோம். இன்னும் பல்லாண்டு பொன்னி வளர்வதாகுக!

—வே. நு. கண்ணப்பர்,
நகராண்மை உறுப்பினர்.

கோவை, 27—2—48.

நமது "பொன்னி" இரண்டாமாண்டு முழுச்சோபையுடன் முன்வந்து நின்றாள். கண்டதும் என் கனவு நனவாகியது கண்டு களிபெருவகை யடைந்தேன். நறுமண மலர்மிக்க "திராவிடப்பூங்கா"வில் உலவுவதற்கேற்ற நங்கை "பொன்னி" தான். அவளின் இன்றைய எழிலும் இளமையும் வசீகரமும் என்றும் குன்றாதிருக்க விழைகின்றேன். வாழ்க பொன்னி வளமார் திராவிடத்தின் இளவரசியாக.

—ஜி. என். இராஜு,
அமைப்பாளர்
கோவை மாவட்ட திராவிடர் கழகம்.

கரூர், 28—2—48.

தங்கள் பொன்னி இதழில் வெளியாகும் "கண் திறக்குமா?" என்ற தொடர் கதையின் முன் கதைச் சுருக்கத்தைத் தங்களது இதழில் வெளியிட்டால் நன்றாயிருப்பதோடு இடையே வாங்கிப் படிப்போருக்கும் மேற்கொண்டு கதை படிக்க ஆவலேற்பட்டுத் தொடர்ந்து வாங்க ஏதுவாகும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். தவிர, விஞ்ஞானப் பகுதிகளையும் தங்கள் இதழில் சேர்த்தால் நலமெனக் கருதுகிறேன்.

—ப. ராமசாமி

மதுரை, 27—2—48.

பொன்னியின் வளர்ச்சி கருதி ஒன்று; திருக்குறள் முனிசாமி அவர்களின் நகைச்சுவை, கேட்டு இன்புறத்தக்கது மட்டுமன்று, வாசித்தும் இன்புறலாம். இதனைப் பொன்னி, பொங்கல் மலரில்

மெய்ப்பித்தாள். ஆகவே அவருடைய நகைச்சுவைக் கவித் துணுக்குகளை இனியும் பொன்னி பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன். இந்த இதழில் நச்சியப்பன் துவக்கியுள்ள புதுப்பகுதி பாராட்டத்தக்கது. நக்கீரனின் தொடர் கதை நன்றாக இருக்கிறது. மாதமொரு பகுதியாக வருவதால் அதற்கு முன்கதைச்சுருக்கம் கொடுத்தால் பொருத்தமாயிருக்கும் என்று கருதுகிறேன்.

—தமிழரசன்

[அன்பர்கள் விருப்பத்திற்கேற்ப, இனி ஒவ்வொரு இதழிலும் "கல் திறக்குமா?" தொடர்கதையின் முன்கதைச்சுருக்கம் வெளி வரும்; திருக்குறள் முனிசாமி அவர்களின் நகைச்சுவைத் துணுக்குகளும் இடம்பெறும். —ஆசிரியர்]

பொள்ளாச்சி, 24—2—48.

முதல் ஆண்டு நிறைவுபெற்று இரண்டாம ஆண்டின் துவக்கத்திலே மேலும் தமிழ் நாட்டினருக்குப் புதுச்சுவையும் புதுமுறையும் புதுவளமும் தரப் புத்தொளிபூண்டு அன்புடன் உறுதி கொண்டு வருவதுகாண மிகவும் மகிழ்ச்சி. "பொன்னி" அப்பணியை மேலும் தளராது, அயராது பணியாற்றித் தமிழர்களை, தமிழ்மொழியை உலகம் முழுதும் சிறக்கச் செய்ய என் அன்பு வாழ்த்து உரித்தாகுக.

—வ. பா. அக்கலாஞ் செட்டி

பகுத்தறிவுக்குழாம், சிதம்பர நகர், 19—2—48.

சென்னை நகரில் பொங்கற் 'பொன்னி'யைக் கண்களால் மட்டும் கூடக் கண்டு களிக்க முடியாது ஏமாந்த பலருள் நாங்களும் ஒருகூட்டம். 15-ம் நாளுக்குப்பின் முன்கூட்டியே பணம்கொடுத்து வைத்திருந்தும் குறைந்த படிகளே வந்தன என்ற காரணம் கேட்டு ஏமாற நேர்ந்தது. எங்கு முயன்றும் கிடைத்திலது. இந்நிலையில் தங்களிடம் கைவசம் படிகள் உள்ளனவோ என்ற ஐயப்பாடு காரணமாய் இதுவரை எழுதத் தயக்கம் கொண்டோம். படித்த தெரிந்த தோழர்களிடம் கூட மறுவிலைக்குக் கேட்டு ஏமாற நேர்ந்தது; கொடுக்க மறுக்கிறார்கள் பிரிய மனமில்லாதவர்களாய். எவ்விதமாகிலும் புதுப்படியோ அல்லது உபயோகப் படுத்தப்பட்ட படியோ அனுப்புவீர்கள் எனும் ஒரே நம்பிக்கை தான் இதை நாங்கள் எழுதத் தூண்டியது. அன்புகூர்ந்து மறு அஞ்சலில் வி. பி. பி. மூலம் அனுப்பவும். மற்றும் அதுபற்றிய செய்தியை விடை அஞ்சல் அட்டைமூலம் தெரிவிக்க வேண்டுகிறோம். அடுத்த ஆண்டிலாவது குறைந்த படிகள் என்ற காரணத்தால் பல அன்பர்களை ஆசைகாட்டி மோசம் செய்யாமலிருக்க வேண்டுகின்றோம்.

—கு மி. சுந்தரம்

[உங்களைப்போன்று பலர் ஏமாறும்படியான நிலை வரவேண்டுமென்று நாங்கள் முன்கூட்டி ஒன்றும் முடிவு செய்யவில்லை; மலரின் சிறப்பும் தமிழ்நன்மக்களின் ஆர்வமும்தான் 'மலர் நெருக்கடி'யை உண்டாக்கி விட்டன. என் செய்வது? அடுத்த ஆண்டில் நிச்சயம் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைப்போம். — ஆசிரியர்]

அழுதார்!

''ஊசி''

''ரார்'' என்று சத்தம் போட்டுக் கொண்டே பங்களாவிற்குள் நுழைந்தான் தந்திப் பியூன் தங்கவேலு. பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த பஞ்சநத சாஸ்திரி நிமிர்ந்து பார்த்தார். அதற்குள் அருகாமையில் நெருங்கிவிட்ட தங்கவேலு, சாஸ்திரியாரிடம் தந்தியைக் கொடுத்து அசையாமல் நின்றான். தந்தியைப் பிரித்தார் சாஸ்திரியார். நிமிட நேரத்தில் தந்திக் காகிதத்தை மார்பில் அணைத்துக் கொண்டு தேம்பியழ ஆரம்பித்தார்; ஒருமுறை தங்கவேலுவையும் பார்த்தார். துக்க சமாசாரம் வந்திருக்கிறது என்று தங்கவேலு தெரிந்து கொண்டான். சைக்கிளைத் திருப்பி ஏறிக் கொண்டு வேகமாக வெளியே சென்று விட்டான்.



தங்கவேலு சென்ற சில விநாடிகளில் சாஸ்திரியார் முகம் மலர ஆரம்பித்தது. சாஸ்திரியாரின் அழுகுரல் போலக் கேட்கவே அவர் மனைவி அறைக்குள்ளிருந்து வெளியே ஓடிவந்து பார்க்க, அவர் முகம் மலர்ந்திருந்தது. அந்த அம்மாளுக்கு ஒன்றும் புரியவில்லை. ''என்ன சமாச்சாரம் தந்தியில்?'' என்று படபடப்புடன் கேட்டாள்: ''எல்லாம் அதிர்ஷ்டம் தான். பையனுக்கு ஐ. சி. எஸ். பாசாகி விட்டதாம்.''

''அடபாவமே! இதற்கு என் அழுதீர்கள்'' என்றாள் அந்த அம்மாள்.

''அடி போடி பைத்தியக்காரி, உனக்கென்னடி தெரியும்? சந்தோஷ சமாச்சாரம் என்று சந்தோஷப் பட்டால், அந்தத் தந்திப் பியூன் சும்மா விடுவானடி. ஒரு இரண்டணாவாவது வாங்காமல் விடுவானா? அதற்குத் தான் அழுதேன்: துக்க சமாசாரமாக்கும் என்று நிற்காமலே ஓடி விட்டான்'' என்றார் சாஸ்திரியார்.



பாரதிதாசன் பரம்பரை

[அன்பர் கே. டி. தேவர் பம்பாய் மாதுங்காவிலிருந்து தமிழ்த் தொண்டு செய்பவர். இங்கே ஒரு சிறிய நிகழ்ச்சியைக் கவிதையாக்கி வழங்கியிருக்கிறார்.
—ஆசிரியர்]

வந்தால் போதும்

"அத்தானே வேட்டைக்கா செல்லுகின்றீர்?
அடர் காட்டில் எனக்கென்ன கொணர்வீர்?" என்றாள்.
"இத்தரையில் உனக்கில்லாப் பொருள்கள் ஏதும்
இருப்பதற்கு நான் ஒவ்வேன்! எதுதான் வேண்டும்?
சித்தத்தைத் திறந்தெனக்குக் காட்டாய்" என்றான்.
சேயிழையாள் சிரிக்கின்றாள்: அதனில் சொக்கி
நத்திவரும் பார்வைக்குத் தனை இழந்தான்
நல்லுலகம் அணு அணுவாய் இனித்த தன்றே!

"மான்கொம்பு கொணர்வீரா அத்தான்?" என்றாள்
"மடமானை ஒருநாளும் சுட மாட்டேனே!
ஏன் கண்ணே! மான்கொம்பைக் கேட்டாய்! அங்கே
இருமான்கள் நடைபயிலும் வேளை தன்னில்
நான்தானா ஆண்மானை வீழ்த்த வேண்டும்?
நங்கையுனை நான்மருவி விளையாடுங்கால்
தேன் போலச் சுவைதருமே அதனைக் கண்டும்
தீராத வசைச் செயலைச் செய்வேனா நான்?

"வான்தாவும் வேங்கையினைக் கொணர்வாய் என்று
வாள் விழியே நீ கேட்டால் மகிழ்வேன்" என்றான்.
"மான் வேண்டாம் மரமேறும் வேங்கை வேண்டாம்
அந்திக்கு முன்னால்நீ வந்தால் போதும்!
மீன்வாங்கி நெய்விட்டு வறுவ லாக்கி
மிளகாயின் பொடிதூவி வைத்திருப்பேன்
நான் இருக்க நீயிருந்து சுவைப்பதற்கு
நண்ணுவையேல் அதுபோதும் மகிழ்வே" னென்றாள்!



ராஜா நாய்

— அத்தான் —

மணிநாதன் முதலியார் பெரிய பணக்காரர். அவருக்கு ஏழு வயதில் ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் செல்லம். செல்லம் பணக்காரர் வீட்டுக் குழந்தையாய் இருந்ததினால் எடுக்க வைக்க எல்லாவற்றிற்கும் ஆள் உண்டு. செல்லம் செல்லமாகவே வளர்ந்து வந்தாள். அவளோடு விளையாடுவதற்கென்று முதலியார் 'சடைக் கொச்சு' நாயொன்று வளர்த்துவந்தார். அதை 'ராஜா' என்றுதான் செல்லம் கூப்பிடுவாள். முதலியார், அவர் மனைவி எல்லோருமே அதை அப்படித்தான் கூப்பிடுவார்கள்.

'ராஜா'வுக்கு வேளைக்கு வேளை பால் வைப்பார்கள். எலும்பு, கறி, நெய்பிசைந்த சோறு இவைதான் அதற்கு மத்தியான ஆகாரம். சாயந்திர நேரங்களில் செல்லம் தின்கின்ற ரொட்டி, பலகாரங்களில் ராஜாவுக்கும் பங்குண்டு.

சொர்ணம் முதலியார் வீட்டு வேலைக்காரி. அவளுக்கு ஆறு வயதில் ஒரு மகளிருந்தாள். அவள் பெயர் காமாட்சி. பனியாயிருந்தாலும் குளிராயிருந்தாலும் காமாட்சி அதிகாலையில் எழுந்திருக்கவேண்டும். எழுந்தவுடன், அவ்வூர்க் கோவில், பள்ளிக்கூடம், பெரியதெரு சுப்பிரமணியன் செட்டியார் வீடு, மணியம் கோபாலய்யர் வீடு முதலிய இடங்களுக்குச் சென்று வெளிவாசலைப் பெருக்கிச் சாணி தெளிக்கவேண்டும். பிறகு வீட்டிற்குவந்து கஞ்சியோ, கூழோ குடிப்பாள். ஒவ்வொரு நாளில் அதுவும் இருக்காது. மனிதர்களுக்குத்தான் அவளிடம் இரக்க



மில்லை-ஐயோ பாவம்! அவளைப்படைத்த கடவுளாவது அவளுக்கு இரக்கப் படக்கூடாதா?



மார்கழி மாதம். ஒரு நாள் காலை ஐந்து மணி இருக்கும். பனிக்குல்லா, கம்பளிச் சட்டை எல்லாம் போட்டுக்கொண்டு அடுத்த ஊர் போவதற்குக் காரடிக்குப் போய்க் கொண்டிருந்தேன். 'உரிச்ச ஆட்டுக் குட்டி போல' மேலே போடுவதற்கு ஒரு சட்டைகூட இல்லாமல் காமாட்சி ஒரு வீட்டு வாசலைப் பெருக்கிக்கொண்டிருந்தாள். அதைப் பார்ப்பதற்கே மிக வருத்தமாயிருந்தது. நீ அந்தச் சமயத்தில் அவளைப் பார்த்திருந்தாயானால் நிச்சயமாய் அழுதிருப்பாய்! ஆனால் அந்த நேரத்தில் நீயோ போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு நல்ல தூக்கத்திலல்லவா இருந்திருபபாய்!

அன்று வேலையெல்லாம் முடிந்ததும் காமாட்சி வீட்டுக்குப் போனாள். வீட்டில் சாப்பிடுவதற்கு ஒன்றுமே இல்லை. சாயந்திரம் வீட்டிற்கு வரும்பொழுது அரிசி வாங்கிக் கொண்டுவந்து 'அரிசிக் கஞ்சி' வடித்துத் தருவதாக அம்மா சொன்னாள். காமாட்சி 'அரிசிக்கஞ்சி' என்று கேட்ட உடனேயே அதை நினைத்துக் கொண்டு சாயந்திர நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் நேரம் ஆக ஆகக் காமாட்சிக்குப் பசியெடுக்கத் தொடங்கியது. அம்மாவைப் பார்க்க முதலியார் வீட்டிற்குப் போனாள். சொர்ணம் காமாட்சி கையில் 'ஓரணா'வைக் கொடுத்து காலணாவுக்கு முறுக்கு 'வாங்கிக்கொண்டு பாக்கியைக் கொண்டு வந்து தரச் சொன்னாள்.

முறுக்கை வாங்கிக்கொண்டு முதலியார் வீட்டு வாசற்படியேறிய காமாட்சியின்மேல் செல்லத்தினுடைய நாய் 'லபக்கென்று' பாய்ந்து முறுக்கைக் கௌவிக் கொண்டது. ஏழைகளைக் கண்டால் நாய்களுக்குக்கூடப் பிடிக்காது போலிருக்கிறது! 'ஐயோ, நாய் கடிக்குதே' என்று அலறி அடித்துக்கொண்டு காமாட்சி படிக்கட்டில் விழுந்தாள்.

'நம்ம ராஜாவைப் பார்த்து நாயென்று சொல்றும்மா,' என்று செல்லம் கத்தினாள். 'அது கிடக்குது கழுதை' யென்று அவளுடைய அம்மா பதில் சொன்னாள்.



வளரும் இலக்கியம்

★★★ உயர்தரம் ★★ நடுத்தரம் ★ பரவாயில்லை ○ மட்டம்

[மதிப்புரை பெறவிரும்புவோர் இரண்டு புத்தகங்கள் அனுப்பவேண்டும்]

தாமரைக்குமரி ★★★

இதன் ஆசிரியர் மு. அண்ணாமலை பாரதிதாசன் பரம்பரையினர். கவியரசர் வாழ்த்துடன் நூல் துவங்குகிறது. நிமிர்ந்த போக்கில் தற்சிறப்புப் பாயிரம் எழுதியுள்ள நெஞ்சுத்துணிவு நமது வெறுப்பைப் பெறவில்லை - மாறாக வியப்பை நல்கி வாழ்த்துப் பெறுகிறது. இத்தொகுப்பில் உள்ள பாடல்கள் அனைத்தும் உவமைக்கடல், கற்பனைக் களஞ்சியம், தேனூற்று, தமிழ்த்தோட்டம் என்றுசொல்லக் கூடியநிலையில் சிறந்து விளங்குகின்றன. "தாமரைக் குமரி" என்ற தலைப்பில் உள்ள பாடல்கள் கற்பனையின் உயர்வை மட்டுமல்ல, பகுத்தறிவுக் கருத்துக்களையும் எடுத்துக்காட்டுகின்றன "முகிலே நில்!" என்ற பாடல் கோர்வை சுவைக்கச் சுவைக்க விழைவை எழுப்புகிறது. சங்கத் தமிழை மேகத்திற்கு ஒப்பிடும் பகுதியும், துடியிடையைப் பற்றிக் கூறும் கட்டமும் உணர்வுக்கு வேலை தருகின்ற இடங்கள். தமிழ் இலக்கியம் வளருகிறது என்பதற்குத் "தாமரைக் குமரி" பாடல்கள் ஒரு சான்று. விலை ஒரு ரூபாய். கரும்பு பதிப்பகம், புதுக்கோட்டை.

திராவிடஸ்தான் வேண்டாமா? ★★★

சிலமாதங்களாக, விறுவிறுப்பான அழகிய தமிழ் நடையில் பகுத்தறிவாளர் கருத்துக் குவியலைத் தமிழ் நாட்டுக்குத் தந்து வருகிறது போர்வாள் பத்திரிகை. அதில் இன்றைய முக்கிய பிரச்சினையான திராவிட நாட்டுப் பிரிவினை பற்றி கம்யூனிஸ்டுத் தோழர் சங்கரனும் போர்வாள் ஆசிரியர் இளஞ்செழியனும் நடத்திய எழுத்துப்போர் புத்தகமாகி வந்திருக்கிறது. சங்கரனார் எழுப்பிவிடும் புதிய புதிய வியப்புமிக்க கருத்துக்களும், அவற்றை எளிதிலே மறுத்துரைத்துக் காரணங் காட்டி, ஒத்துழைக்க அழைக்கும் இளஞ்செழியனின் எழுத்து வன்மையும் நம்மைக் கவர்கின்றன. கம்யூனிஸ்டுத் தோழர்களையும், சோஷலிசப் போர்வையில் உலவும் கட்சிகளின் உறுப்பினர்களையும் இந்நூலைப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். விலை அணா எட்டு. பகுத்தறிவுப் பாசறை 147, பவளக்காரத் தெரு, சென்னை. —நா. வேந்தராசன்

மதம் பிடித்த படாதிபதிகள் ★★

ஏட்டிலே மதத்தைக் காணும்போது அதனிடத்தே உண்மையையும் நன்மையையும் காண்கிறோம். ஆனால் அது நடப்பிலே வரும்போது ஆதி நோக்கம் பாழாக்கப்பட்டு விடுகிறது. மதத்தைப் பாழாக்குவதிலே பட முதலாளிகளும்

பங்கு கொண்டிருக்கின்றனர். புராணப்படம் எடுக்கப்போய் ஆபாசப்படங்களையே எடுத்து நாட்டைக் குட்டிச் சுவராக்கு கின்றனர். உண்மையான மதம் என்ன வென்று மடாதிபதிகள் ஏன் படமெடுத்துக் காட்டக்கூடாது?—என்று இந்நூலில் ஆசிரியர் சுப. நாராயணன் கேட்டு விடையிறுப்பது நன்றாக இருக்கிறது. உண்மையான மதத்தில் மடாதிபதிகளுக்கு இடமில்லை அல்லவா? இந்த நூல் ஆரம்பிக்கும் போது இருக்கும் பொருட் செறிவு முடிவு வரையிலும் வரவில்லை. விலை அணா நான்கு - எரிமலைப் பதிப்பகம் துறையூர், திருச்சி மாவட்டம்.

ஆரியப் புல்லுருவி ★★

ஆரியர்களைப்பற்றிய வெறுப் புணர்ச்சி ஈரோட்டிலிருந்து கிளம்பி, இன்று எங்கும் கொழுந்து விட்டெரிகிறது. அந்த உணர்ச்சிக்கும், ஆரியர்களிடம் அதாவது பார்ப்பனர்களின் - கயமைகளுக்கும் பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து, ஆராய்ச்சி பூர்வமாக திரு சுப. நாராயணன இந்நூலை உருவாக்கி இருக்கிறார். விலை அணா 6. எரிமலைப் பதிப்பகம், துறையூர், திருச்சி.

குட்டிக்குறள் ★

திருக்குறளில் ஏழு சீரில் சொல்லுவதை நாலு சீரில் சொல்லுகிறது இந்தக்குட்டிக் குறள்.

"குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள் மழலைச் சொல் கேளா தவர்." என்ற குறட்பாவைக் "குழலும் யாழும் மழலை முன் குழைவ" என்று குட்டிக் குறளில் காணுகின்றோம். ஆ... முயற்சி எளிதானதல்ல... அதைப்போல். பயனுள்ளது மல்ல. 'சொற் செட்டு' என்று மதிப்புரை தந்த பெரியார்கள் கள் கூறுகின்றனர். ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு அடியே உடையன. மொத்தம் நூறு அடிகளுக்கு 160 பக்கம் விரிவுரை செய்யப்பட்டிருக்கிறது என்றால் 'சொற் செட்டின்' பயனையும் பொருளையும் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆனால் இந்நூல் நிறை தமிழ் ஆய்ந்த சுகவனம் சிவப்பிரகாசரின் தமிழ்ப் புலமையை ஒருவாறு காட்ட இயலும். விலை ரூபாய் ஒன்று. கிடைக்குமிடம். ஜகதா அண் சன், 7/99, அம்மன் கோயில் தெரு, சென்னை.

அசோகவனம் ★★

ஆசிரியர் ஆ. முத்துசிவன். ஆங்கிலத்தில் இருக்கும் விமரிசன நூற்கள் போன்று தமிழ் மொழியிலும் பெருக வேண்டும் என நினைப்பவர். அந்த நினைப்பைக் கூடியவரை இந்த நூலில் எய்த முயற்சித்திருக்கிறார். ஆங்காங்கே பிராட்லே என்ற மேனாட்டு அறிஞரின் கருத்துக்களைத் தமிழ் இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காண்பித்திருக்கிறார். சோகம் என்பது "தீமையின் அழிவல்ல; தீமையினால் நன்மை பாழாகிறதே அதில் சோகம் இருக்கிறது. என்று அறிஞர் பிராட்லே கூறுவதற்கேற்ப, வஞ்சிப்பத்தனின் அழிவு சோகமல்ல; அவனால் மதுரை, பாண்டியன், கண்ணகி முதலியோர் அவலத்திற்காளக வேண்டியிருந்ததே, அதுதான்

சோகம் என்று ஆசிரியர் கூறுகிறார். மேனாட்டு அறிஞர்களின் கருத்தைத் சொல்வதோடு மட்டும் நில்லாமல் அதைப் பொருத்திக் காண்பித்தல் நல்லமுறை. எதிர்பார்க்கும் பயனை உடனே எய்த முடியும். ஆசிரியரின் தமிழ் நடையில் நொடிப்பும், நுணுக்கமும் குளிர்ச்சியும் இல்லை. சொற்றொடர்கள் சரியாக ஆக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாகத் 'சீதையைத் தேடித் தேடி இலங்கையை அலசி எடுத்தான்' என்று எழுதுகிறார். எந்தச் சொற்களையும் வரையறையின்றி எதற்கும் எதையும் பயன்படுத்தக்கூடாது. எடுப்புச் சொற்களுக்கு ஏற்ப முடிப்புச் சொற்களும் அமைவுபெற வேண்டும். ஆசிரியருக்கு 'அவை' 'இவை' என்பதே பன்மைச் சொற்கள் என்று தெரியவில்லை; அவைகள், இவைகள் என்று 'கல்கி'த்தமிழில் எழுதுகிறார். பிறமொழிச் சொற்களை வலிந்து கையாண்டிருப்பது கண்டிக்கப்பட வேண்டியதாகும். ஆசிரியர் தமது முன்னுரையில் ஆங்கிலேயர்களைப் போல் நாமும் துணிந்து பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கலாம் என்று யோசனை கூறுகிறார். வக்கில்லாதவனைக் கடன் வாங்கு என்று கூறுவதிலே பொருத்தம் இருக்கிறது. வைத்திருப்பவனும் வாங்கவேண்டும் என்று சொல்வதில் பொருள் இல்லை. இன்றியமையாத இடத்தில் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் சாரங்கம், ஸ்தூல வடிவம் என்று வருவன புரியவில்லையே! ஸ்டார் பிரசுரம், 71 பெரிய தெரு திருவல்லிக்கேணி, சென்னை விலை ரூ. 2-8-0.

– மு. அண்ணாமலை.

மகாகவி பாரதியார் ★★★

கலையிலும் வாழ்விலும் புரட்சியை ஏற்படுத்திப் புத்துலகம் காணத் துடித்த மகாகவி பாரதியாரைப்பற்றி, கவியரசர் பாரதிதாசன் அவர்களும், அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்களும் எழுதியுள்ள கவிதைகளும், கட்டுரையும் அடங்கிய ஓர் தொகுப்பு நூல் இது. பன்னிரண்டு தலைப்புகளில், பாரதியைப் படம்பிடித்துக் காட்டுகிறார் பாரதிதாசன். அறிஞர் அண்ணாதுரை எழுதிய 'பாரதிபாதை' என்ற கட்டுரை இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இக் கட்டுரையில், "பாரதி யார்?" என்பதை விளக்கி, புத்துலக அமைப்புக்கு அவர் காட்டியுள்ள பாதையையும் தெளிவாக்கியிருக்கிறார். உண்மைப் பாரதியைத் தமிழர்கள் அறிந்துகொள்ள இப்புத்தகம் நிச்சயமாகப் பயன் படும். விலை 0-8-0. வெளியிட்டோர் ஞாயிறு நூற்பதிப்பகம். 28, அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி, புதுச்சேரி.

B & C மில்ஸ் தீர்ப்பு ★

B & C மில்லுக்கும் அதன் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட தகராறில், தீர்ப்பளித்த நீதிபதி ராவின் தீர்ப்பை ஆட்சேபித்து, வேறு விசாரணைக் கோர்ட்டை அமைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மில்லின் வரவு செலவுப் புள்ளிவிபரம் காட்டித் தொழிலாளரின் கோரிக்கை

நியாயமானதே என்பதனை வலியுறுத்துகிறார் இப்புத்தகத்தை எழுதிய "கடவுள்" விலை 0-2-0. வெளியிட்டோர் D. N. ஆழ்வார், வாஹினி பிரசுரம், தெப்பக்குளம் திருச்சி.

மக்கள் ஆட்சி ★

இது ஒரு கவிதைக்கதை. மன்னன் ஆட்சிக்கு மரணச் சீட்டளிக்கப்படுகிறது. பின்னர் அங்கு மலரும் மக்கள் ஆட்சிக் காலத்தை ஆசிரியர் மிக அழகாகச் சித்தரித்திருக்கிறார். புத்தகம் முழுவதும் புரட்சி மணம் கமழுகிறது, கவிதை மிக மிகச் சரளமான நடையில் அமைந்திருக்கிறது. ஆசிரியர்: என். இ. பாலகுரு. விலை 0-4-0. வெளியிட்டடோர்: அர்ச்சுனன் நிலையம் ஈரோடு.

பெண்களுக்குச் சம உரிமை ★

பெண்களுக்குச் சம உரிமை வேண்டுமென்பதை வற்புறுத்திக் கல்லூரி மாணவிகள் எழுதிய எட்டுக் கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. ஒரே எடுத்துக்காட்டு பல கட்டுரைகளில் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது. 'பெண்மணிகளாகிய நாங்கள் இனி அடுப்பங்கரையில் வேலை செய்வோம் அல்லோம்! தட்டுமுட்டுச் சாமான்களை நாங்கள் கழுவுவோமல்லோம்! பெருக்கவும் மாட்டோம்! கூட்டவும் மாட்டோம்! நாற்று நடவும் மாட்டோம்" என்று ஸ்ரீமதி தனம் நீ அம்மையார் தமது கட்டுரையில் எழுதியிருப்பதைப் படிக்கும்போது, "அப்படியானால் என்ன வேலைதான் பார்ப்பார்களாம்?" என்று நம் உள்ளம் கேட்கத் துடிப்பது மட்டுமல்லாமல், "ஆண்களே தான் இனிப்பிரசவிக்க வேண்டும்" என்று கூடக் கூறிவிடுவார்களோ என்ற அச்சமும் எழுகிறது. விலை ரூ. 0-12-0

தமிழரிடையே அன்புப்போர் ★

தாளையும், மையையும், வாளும் கையுமாக எண்ணிக்கொண்டு இவ் அன்புப் போரைத் தொடுத்திருக்கிறார்கள தோழர்கள் G. R. பழனியாண்டி, K. V. வீராகவன் B. A., B. L., ஆகிய இருவரும். சிறந்த அறிஞர்களிடம் இவ் அன்புப்போர் வம்புப் போராகவே இருக்கிறது. தமிழ் நாட்டுப் பிரபல எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள் ஆகிய பலதுறைப் பட்ட பிரமுகர்களிடமும் இப் போரைத் தொடுத்திருக்கின்றனர். போர் தொடங்கியிருப்பவர்களிடம் நெஞ்சுரம் காண்கிறோம். எனினும் நேர்மையும் உடனிருந்திருக்க வேண்டும். தொடுக்கப் பட்டிருப்பவர்களின் தகுதியையும் திறமையையும், ஆராய்ச்சியினையும் அறியமுடியாமல் 'பல்லாயிரம் கல் தொலைவிலுள்ளவர்கள்' இப்போரைத் தொடங்கியிருப்பது ரஸாபாசமாகவே முடிகிறது. வசதியிருக்கிறதென்பதற்காகக் கண்டவற்றையெல்லாம் உளறிக் கொட்டுதல் சாலச் சிறந்ததல்ல - அறிவுடைமையான செயலுமல்ல. விலை ரூ. 1-0-0.

வீரத்தமிழருக்கு ஆவேசக் கடிதங்கள் ★★

சுவாமி சுத்தானந்தபாரதியார் பலருக்கு எழுதிய கடி

தங்களை இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. கட்டுரைகளில் இலக்கிய மணம் கமழுகிறது. ஆற்றொழுக்குப் போன்ற அவரது தமிழ் நடை இனிக்கிறது. இத்தொகுப்பு தமிழர்க்குப் பெரிதும் பயன்படுவதாயிருக்கிறது. விலை ரூ. 1-6-0. மேற்கண்ட மூன்று புத்தகங்களையும் வெளியிட்டோர்: நியூ இந்தியா புக்ஹவுஸ் இராமச்சந்திரபுரம் P.O. திருச்சிஜில்லா.

மரண நதி★

உத்தமர் காந்தியாரின் மறைவு கேட்டு மனிதகுலம் உள்ளங்குமுறிக் கண்ணீர்வடித்தது. அவ் உள்ளக் குமுறலைக் கவிதையாக்கியிருக்கிறார், "சாந்தி". விலை குறிக்கப்படவில்லை. வேண்டுவோர், எஸ்.டி. சுந்தரம், சென்ட்ரல் ஸ்டுடியோ கோவை என்ற முகவரிக்கு எழுதினால் கிடைக்கலாம்.

ஆரம்பக் கல்வி★

ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப்பாடசாலை மானேஜர்கள் ஆகியவர்களின் முன்னேற்றத்திற்குழைக்கும் மாதப்பத்திரிகை. ஆசிரியர் பி. வீரராகவன். விலை அணா 4. 91-95, புதுத்தெரு மண்ணடி, சென்னை.

அருணோதயம்★

வாழ்வின் இருள் போக்கி, தமிழினம்வாழ, தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ உழைப்பதாகக் கூறி வெளிவந்துள்ள மாதப் பத்திரிகை. ஆசிரியர். கே. பி. பார்த்தசாரதி விலை அணா 3. அலுவலகம். 13133, A. ஒக்காலியர் வீதி, கோயமுத்தூர்.

நாடக மண்டலி★

கருத்தை வளப்படுத்தும் கலையைக் கட்சிப்பற்றின்றி எல்லோருக்கும் உணர்த்த வெளிவந்துள்ள மாதப்பத்திரிகை. ஆசிரியர்: ப. பெரியசாமி விலை அணா 4. 'நாடகமண்டலி' நிலையம் திருச்சி.

சுட்டுத்தள்ளு★★

சிறு குழந்தைகளுக்கென எழுதப் பெற்ற - காலத்திற்கேற்ற ஓர் அழகிய கற்பனைச் சித்திரம். சிறு சிறு சொற்றொடர்கள். இனிய எளிய வசன நடை. ஆசிரியர்: தமிழ்வாணன். விலை 0-4-0. விநியோக உரிமையாளர்: ஜில் ஜில் பதிப்பகம். தியாகராய நகர். சென்னை 17

மகாத்மா காந்தியடிகளின் மறைவின் ஒலி★

உலகத் தந்தை காந்தியடிகளின் பிரிவுகுறித்து எழுந்துள்ள ஓர் சிறு நூல். இதில் ஒரு விருத்தமும் ஒரு அகவற்பாவும் அடங்கியுள்ளன. இயற்றியவர்: மயிலானந்தம் பெ. ராமலிங்கம். விலை 0-1-0. வேண்டுவோர் மயிலானந்தம் பெ. இராமலிங்கம், குறிஞ்சிப்பாடி என்ற முகவரிக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

தாய்நாட்டின் நலிவு★★

வலிவிழந்து நலிவுற்றுக் கிடக்கும் திராவிடத்திற்கு ஏன் இந்நிலை ஏற்பட்டது? இந்நலிவு நீங்காதா? இன்பத்திராவிடம பொலிவுடன் விளங்காதா? என்பன போன்ற கேள்விகள் இன்று திராவிடப்பண்புள்ள அனைவரின் உள்ளங்களிலும்

எழத்தான் செய்யும். இத்தகைய கேள்விகள்தாம் இந்நூலாசிரியரின் உள்ளத்திலும் பூத்துள்ளன. நலிவுக்குக் காரணமும், நலிவு நீக்க வழியும் கூறிவிட்டுத் தாய் நாட்டின் நலிவதனைத்தகர்க்க வாரீர் என்று அன்பழைப்பும் விடுக்கிருர் இந்நூலாசிரியர். இஃது கவிதை நூல். ஆசிரியர் மாவண்ணு தேவராசன் விலை 0-3-0, கிடைக்குமிடம்: இலட்சுமி நூற்பதிப்பகம், திருவத்திபுரம். வ. ஆ.

வழிகாட்டி (மாதப்பத்திரிகை) ★

தமிழர்க்கு வழிகாட்டியாகச் சில கட்டுரைகள் உள்ளன; 'வழிகாட்டி' என்றும் வழிகாட்டியாகவே இருக்கவேண்டுமென்பதுதான் நமது ஆசை. விலை அணு 4. ஆசிரியர் க. அ. புன்னைமுத்து. அலுவலகம். கல்லாரணி.

— சாமி பழனியப்பன்

வரப்பெற்ருேம்:

புதுமைத் தாலாட்டு. விலை 0-0-6. ஆசிரியர். T. M பீர் முகம்மது, கிடைக்குமிடம். ஜின்ன சங்கித சபை. கல்லிடைக்குறிச்சி.

கதையோ கதை:மாதம் இருமுறை - ஆசிரியர் ராம. தியாகராஜன். விலை அணு 1½ அலுவலகம் - ராயப்பேட்டை, சென்னை - 14.

உரிமை: மாதவெளியீடு, ஆசிரியர்: ஆ. இரத்தினம். விலை அணு 3. அலுவலகம்: 4/0. காக்ரேன் பேஸின் ரோட், வண்ணுரப்பேட்டை, சென்னை.

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM,
EAST MAIN STREET, PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN



1. திருச்சி, தஞ்சை ஜில்லாக்கள் : சங்கர் பிக்சர்ஸ், ஸ்ரீரங்கம்
2. மலபார், இலங்கை, பர்மா: டி. கே.எஸ் அண் பிரதர்ஸ், கோயம்புத்தூர்
3. சேலம், மைசூர், ஐக்கிய மலேயா நாடுகள்: சேலம் சண்முகா பிலிம்ஸ், குகை சேலம்
4. சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்காடு, தென் ஆர்காடு, கோயம்புத்தூர், நீலகிரி, ஆந்திர தேசம், வட இந்தியா: ஜெயா பிலிம்ஸ் செவ்வாய்ப்பேட்டை, சேலம்
5. மதுரை, திருநெல்வேலி, ராமனுதபுரம் ஜில்லாக்கள்: ராமனுதன் பிக்சர்ஸ், காரைக்குடி

Front cover printed at The Madras Ripon Press, Ramachandrapuram.